# இந்து மறுமலர்ச்சி இயக்கக் கொள்கை விளக்கம்

## The Manifesto of the Indu Marumalarchi Iyakkam

காணிக்கை ரூ 18.00 7-வது வெளியீடு 26 - 1 - 87

**வெளியீடு:-**

அருட்பணி விரிவாக்கத் திட்டக் குழுவினர்

**இக்கொள்கையின் மூலங்கள்:-**

குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம் .... முதலிய 48 வகை நூல்கள்

***“முன்னோர்களை வழிபடலும் மூத்தோர்களைப் பேணலுமே மெய்யான இந்துமதம்”***

---

**உள்ளே:**


1. அருளுரை
2. அறிமுகவுரை
3. பதிப்புரை
4. முன்னுரை - 1
5. பரிந்துரை
6. அணிந்துரை
7. முடிவுரை
8. முன்னுரை - 2
9. இ.ம.இ. கொள்கை விளக்கம்
10. மொழிக்கொள்கை
11. இந்தி மொழி பற்றிய கொள்கை விளக்கம்
12. ஆங்கில மொழி பற்றிய கொள்கை விளக்கம்
13. மதவழிப் புரட்சி
14. இ.ம.இ. யும்; அ.வி.தி. யும்; செயல்திட்ட அறிக்கை
15. இ.ம.இ. யும்; அ.வி.தி. யும்; கொள்கை விளக்கம்
16. அருள் வழங்கு முறைகள்
17. அருட்சினை மந்திறம்
18. அருளூறு காயந்திரி மந்தரம்
19. அருளூறு காயந்திரி மந்திரம்
20. தமிழக மக்களுக்கு இ.ம.இ. யின் வேண்டுகோள்


---

தொடர்பு:

1. தலைமைப்பீடம், **ஞாலகுரு சித்தர் கருவூரர்**, ESI மருந்தகம், செம்பியம், சென்னை - 600011
2. பதினெண் சித்தர் பீடக் **கருகுலம்**, சித்தரடியான் **மு. நாகேசுவரன்**, GNT ரோடு, காரனோடை, சென்னை - 67
3. பதினெண் சித்தர் பீடக் **குருகுலம்**, சித்தரடியார் **நெ. சேவுகன்**, கொட்டாம்பட்டி, மதுரை - 625103
4. பதினெண் சித்தர் பீடத் **தருகுலம்**, சித்தரடியார் **சீ. மணி,** 2/24, புதிய வீதி, வேம்படிதாளம், சேலம் - 637504
5. பதினெண் சித்தர் பீடத் **திருகுலம்**, சித்தரடியார் **பெ. சுப்பையா** B.E., 47, பெரிய கழனிக்காட்டுத் தெரு, வேலப்பாடி, வேலூர் - 632001

# அருளுரை

ஞானபீடம், ஞானாச்சாரியார், ஞானவேந்து, அருளாட்சி நாயகம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இந்து மதத்தந்தை, இராசி வட்ட நிறைவுடையார், குவலய குருபீடம், குருதேவர், குருமகா சன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் கருவூரார்
பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை விளக்கமாக நூற்றுக் கணக்கான கட்டுரைகளும், பல்லாயிரக் கணக்கான கருத்து வாசகங்களும், கருத்து விளக்கக் குறிப்புக்களும், ..... இருக்கின்றன. இவையெல்லாம், கடந்த இருநூறு ஆண்டுக்கால இடைவெளியில் பிறந்தவையே. இவை பிறந்து, இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் இ.ம.இ. இலைமறைகாயாகவும், நிலவறைக் கலைக் கருவூலமாகவும்தான் உள்ளது. எனவேதன், யாம், இ.ம.இ. யின் கொள்கை விளக்கத்தைப் பல தொகுதிகளாக முழுமையாக வெளியிடும் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ முதன்முதல் கி.பி. முதலாம் நூற்ருண்டில்தான் தோற்றுவிக்கப்பட்டது. அப்போது, இதைத் தோற்றுவித்தவர், பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார். அவர், இதைத் தோற்றுவிக்க வேண்டிய அவசியமும், கட்டாயமும், தேவையும் இருந்தது. அதாவது, தமிழினம் பண்பாடு, நாகரிகம், வரலாறு, உரிமை, பெருமை, தனித்தன்மை, தன்மானம், இன ஒற்றுமை, ........ முதலிய அனைத்துக்கும் பாதுகாவலாகவும் உயிராகவும் இருந்த தமிழ்மொழியையும் தமிழிலக்கியங்களையும் வளர்த்துக் காத்திட்ட மதுரை மாமூதூர் நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்டது; தமிழ் ஏடுகள் எரிக்கப்பட்டுச் சாம்பல் குவியல்கள் எங்கும் பரவலாக்கப்பட்டன; தமிழ் மொழியையும், இலக்கியத்தையும் வளர்த்த தமிழ்ச்சங்கக் கட்டிடங்கள், நூலகங்கள், படியெடுப்போர் மாளிகைகள், புலவர் திரு மாளிகைகள், பட்டிமன்றங்கள், தமிழ்ப்பள்ளிகள், தமிழாய்வுக் கூடங்கள், ......... முதலியவையனைத்தும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட மேடுகள், நகரிடைத் தோன்றிய புதியபுதிய குன்றுகளாகத் திகழுமாறு செய்யப்பட்டன; தமிழ்ப் புலவர்களும், மாணுக்கர்களும், சுவைஞர்களும், பிற கலைஞர்களும், ஆண், பெண் என்ற வேறுபாடின்றி ஈவிரக்கமின்றிக் கண்ட கண்ட இடங்களில் வெட்டிக் கொலை செய்யப்பட்டு நகர் முழுவதும் பிணநாற்றமும், குருதிக்கறையும் நிறைந்திருக்குமாறு செய்யப்பட்டன........ என்ற கொடிய, கடிய அச்சம் நிறை உணர்வுகள் தமிழரிடையே காட்டாறு போலவும் காட்டுத் தீ போலவும் கட்டுக்கடங்காமல் இருந்திட்ட காலத்தில்தான்; முதன்முதலாகத் தமிழின மொழி நல்வாழ்வுக்காக ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ தோற்றுவிக்கப்பட்டது. அப்படி யிருந்தும்; அது, செயல்வடிவம் பெற்று முழுவெற்றி பெற்றிட எழுநூறு ஆண்டுகளுக்கு மேலாகியது. அதுவும், மாபெரும் வல்லமைகளைப் பெற்றவரும்; இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினேராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களே போர்க்கோலம் பூண்டு படை நடத்தி வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ வெற்றி பெறுமாறு செய்தார். அப்படி, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிச் சாதனையாக உருவாக்கப்பட்ட ‘அருட்பேரரசான’ பிற்காலச் சோழப் பேரரசு (The Latter Chola Empire 785 A.D.-1279 A.D. was founded as THE DIVINE KINGDOM by His Holiness Siddhar Kaaviriyaatrangkarai karuwooraar) ஐந்நூறு ஆண்டுக் காலம்தான் வாழ முடிந்தது. அது

மட்டுமல்லாமல்; இந்த அருட்பேரரசு முதலாம் இராசராசன் காலத்தில் உச்சநிலையை அடையவாரம்பித்ததுமே இந்து மறுமலர்ச்சி இயக்கம் மறக்கப்பட்டு இறக்கடிக்கப்பட்டது ஈவு இரக்கமற்ற முறையில். அதாவது, அரச குடும்பத்தார்களும், அரசாங்க அதிகாரிகளும், செல்வர்களும் தங்களுடைய இனத்துக்கும், மொழிக்கும், பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும் உயிராக இருக்கும் குருபீடத்தை, குருதேவரை, ஞானாச்சாரியாரை, குருமகா சன்னிதானத்தை மறந்தும், துறந்தும் செயல்பட்டிட்டார்கள். அத்துடன், தமிழின மேட்டுக் குடியினர் தமிழினப் பகைவர்களையெல்லாம் குருபீடங்களாக குருதேவர்களாக ஞானாச்சாரியார்களாக ஏற்றுச் செயல்படவும் ஆரம்பித்திட்டார்கள். எனவே, இ.ம.இ. இறந்து போயிற்று.

அப்படி, இ.ம.இ. இறந்து மறந்தொழித்ததைத் தமிழினத்தின் மறுவாழ்வுக்காக, புதுவாழ்வுக்காக, உரிமை வாழ்வுக்காகக் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏனனம் பட்டியார் உ. இராமசாமி பிள்ளை அவர்கள் மீண்டும் கி.பி. 1772 இல் தோற்றுவித்தார். ஆனால், இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகியும், இந்த இ.ம.இ. உரிய வளர்ச்சியினைப் பெறவில்லை. யாம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாக அருளுலக அரசுக்கட்டிலில் அமர்ந்ததாலும்; இ.ம.இ.யின் இரண்டாவது தலைவரின் மகனாகத் தோன்றியதாலும் பாரம்பரியப்படி இ.ம.இ.யின் மூன்றாவது தலைவரானோம். ஆனால், யாம், எமது பதினெட்டாண்டுக் காலப் பயிற்சிக் காலத்திலும், பதினெட்டாண்டுக் கால முயற்சிக் காலத்திலும் உருவாக்கிய பெரும்பாலான அருளாளர்கள் சுயநலவாதிகளாகி ஒதுங்கிப் பதுங்கி விட்டார்கள். அதன் பிறகு, யாம், நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்து கடந்த பதினைந்தாண்டுகளில் உருவாக்கியவர்களில் பெரும்பாலானவர்கள் தலைமைக்குக் கட்டுப்படுதல்; தலைமையின் ஆணைகளை அப்படியே ஏற்றுச் செயல்படுதல்; தலைமை வழிச் செயல்பட முழுமையான தர, உர, திர, தீர, வீரம் பெற்றிருத்தல்; மற்றவர்களோடு பற்றோடும், பாசத்தோடும் பழகி ஒற்றுமையோடு செயல்படுதல்; கொள்கைக்காக எத்தகைய செயலையும் செய்யும் துணிவும், பணிவும் பெற்றிருத்தல்; தலைமைக்குக் கட்டுப்பட்டுத் தலைமையின் ஓர் அங்கமாகவே செயல்படுதல்; தனக்குள் தலைவரையும், தலைவருக்குள் தன்னையும் கண்டு தலைவரோடு ஒன்றிடுதல்; செயல்வீரர்க்குரிய நாவடக்கம், மெய்யொடுக்கம், பணிவு, கனிவு, துணிவு, சுறுசுறுப்பு, பொறுப்பு, பொறுமை, ...... முதலியவைகளைப் பெற்றிடுதல்; தேவைக்கேற்ற ஈகங்களைப் புரிந்து முழுநேர ஊழியமாற்றல்; தலைவரை எதிர்த்துச் சிந்திக்காமல் தலைவரோடு இணைந்து செயல்படல், ........ முதலிய அரிய, பெரிய, சீரிய, உரிய பண்புகளை இன்னும் பெறவில்லை. அதற்கு எவ்வலவு காலமாகுமோ தெரியவில்லை. எனவேதான், யாம், இ.ம.இ. கொள்கைகளை வெளியிடாமல் 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்' செயலாவதற்குரிய வண்ணம் அதன் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல் முறைகளையும், பூசாமொழிகளையும் வெளியிட்டு வருகிறோம். இருந்தும், அதிகப் படிப்பில்லாதவர்களும், கடுமையான உடலுழைப்புப் பாட்டாளிகளும், வறுமைக்கும் வெறுமைக்கும் இலக்காகிய அப்பாவி மக்களும் 'அருளாட்சி அமைக்கும்' பணியில் அளப்பரிய ஆர்வம் காட்டுவதாலேயே இந்தக் கொள்கை விளக்கச் சுருக்க நூல் வெளிவருகிறது.

"படித்த மக்கள் நெல்லிக்காய் மூட்டை போன்றவர்களாவர்" என்ற குருபாரம்பரிய வாசகப்படியே எமது அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ஆர்வலர்கள், ஏந்தாளர்கள், விருப்பாளர்கள் எனும் பெருங்கூட்டத்தில் படித்தவர்கள், அவிழ்த்துக் கொட்டப்பட்ட நெல்லிக்காய் மூட்டையிலிருந்து நாலாபக்கமும் செல்லும் நெல்லிக்காய் போல ஒற்றுமையின்றிச் செயல்படுகிறார்கள். எனவேதான், இவர்களையெல்லாம் ஒற்றுமைப்படுத்த இந்தக் கொள்கை விளக்கத்திலேயே அன்றாடம் ஓதும் காயந்திரி மந்தர மந்திரங்களையும் அருட்சினை மந்திறத்தையும் வெளியிட ஏற்பாடு செய்தோம்.

அதாவது, உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் உலகச் சமத்துவச் சகோதரத்தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும், உலகச் சமாதானக் கூட்டுடமைச் சித்தாந்த அருட்பேரரசையும் உருவாக்கும் தலைமைச் சிற்பிகளாக, அருட்கலைஞர்களாக, மெய்ஞ்ஞானத் தலைவர்களாக, சாகாக் கல்வியின் ஆச்சாரியார்களாக, தத்துவ வித்தகக் குருபீடங்களாக, வேத வித்துக்களாக,.... இருக்கும் தமிழர்களை உணர்வாலும், அறிவாலும், செயலாலும்,..... மெய்யான தமிழர்களாக மாற்றுவதுதான் உடனடித் தேவை. அதற்குத் தேவை, அ.வி.தி. வழி அருள்வாழ்வு வாழ்ந்திடத் தேவையான பயிற்சிகளை வழங்குவதுதான்.

இந்த இ.ம.இ.யின் கொள்கை விளக்கம், தவறான பயனற்ற வெறிகளையும், வெறுப்பு மறுப்புக்களையும், இழிவழிவுகளையும், வறட்டுத்தனமான முரட்டுப் போக்குகளையும் உருவாக்கிடுமோ என்று அஞ்சித்தான்; எழுதிக் குவிக்கப் பட்டுள்ள இ.ம.இ. கொள்கை விளக்க இலக்கியங்களில் ஆயிரத்தில் ஒரு பங்கையே இங்கு வெளியிட ஒப்பினோம். இன்றுள்ள ஆயிரமாயிரம் இளைஞர்கள் இ.ம.இ. கொள்கை விளக்கத்தைப் புத்துணர்வூட்டும் சத்தியாக மட்டும் ஏற்று; அ.வி.தி. பயிற்சிகளிலும் முயற்சிகளிலும் முழுமையாக ஈடுபடல் வேண்டும். மெய்யான இந்து மதத்தின் பூசா மொழிகளையும் ஓத வேண்டும். பூசா முறைகளைப் பயிற்சி செய்ய வேண்டும்; குருவழி அருளாற்றலை ஊட்டப் பெற்று ஆறுவேளையும் தொழுகை செய்ய வேண்டும். அதனால், தலைவருக்கு அடங்கியும் கட்டுப்பட்டும்; பிறரோடு பற்றோடும், பாசத்தோடும், பணிவோடும், கனிவோடும், சமாதானத்தோடும் இனிமையாகப் பழகி ஒற்றுமையாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்குத் தலைவரை முழுமையாக ஏற்றுக் கட்டுப்பாட்டுடன் செயல்படப் பழக வேண்டும். இப்படியெல்லாம் செயல்பட்டுத் தமிழர்களின் தலைமைச் சத்திகளாகச் செயல்படும் பக்குவம் பெற்ற தமிழின இளைஞர்கள் சில ஆயிரம்பேர் உருவானால் போதும்; அவர்களைக் கொண்டு இன விடுதலை, மொழி விடுதலை, பண்பாட்டு விடுதலை, தன்மான விடுதலை.... முதலிய அனைத்து விடுதலைகளையும் தமிழினம் முதலில் பெறுமாறு செய்து; பிறகு படிப்படியாக அனைத்து மானுட இனங்களும் பெறுமாறு செய்திடலாம். அம்மாபெரும் முயற்சியில் தமிழின இளைஞர்கள் ஈடுபடும்போதுதான் இ.ம.இ.யின் கொள்கை விளக்கம் விருந்தாகவும், மருந்தாகவும் பயன்பட்டிடும்.

எந்தை, எப்போதும், 'படித்த கூட்டத்தின் சுயநலமும், அகம்பாவமும், ஆணவமும், அடங்காப் போக்கும், உதிரித்தன்மையும், கட்டுப்பாடற்ற நோக்கும்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சிப் பாதிப்புக்குக் காரணம்' என்று கூறியதாலும்; 'அதிகப் படிப்பற்றவர்களின் ஒற்றுமையும் பற்றும், பாசமும், அடக்கமும், ஆர்வமும், உண்மையும்தான் இ.ம.இ.யை உயிர்வாழச் செய்து வருகிறது' என்று கூறியதாலும்..........; யாம், மிகுதியாக அறிவியல் சீவிகளுக்கே உரிய இ.ம.இ.யின் கொள்கை விளக்கத்தை வெளியிடுவதில் தயக்கமே காட்டுகிறோம்.

பூசாமொழி வாசகங்களையும், அ.வி.தி. கொள்கை விளக்கத்தையும் வெளியிட்டு எம்முடைய அடியான், அடியாள், அடியார், ஆதரவாளர்......... அனைவரையும் அருளாளர்களாக்கிப் பண்பாட்டுப் புரட்சியை முழுமையாகச் செய்திடவே விரும்புகிறோம், யாம். அனைத்தும் அன்புவழி, அமைதிவழி, அருள்வழி, சமாதான வழி.......யேயாகும்.

-- அன்பு ஞாலகுரு சித்தர் கருவூரார்

**சிறப்புக் குறிப்பு:**

எந்தை, இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தின் 14ஆம் பக்கத்தில் '.......வெளிநாட்டார் பாரத நாட்டை (சிந்து நதி நாடு = சிந்தியா → இந்தியா) 'இந்தியா' என்று

அழைத்த போதே இந்தியாவின் மதம் ‘இந்து மதம்’ என்ற பெயரைப் பெற்றது’ என்று பொதுவாக கூறியிருக்கிருர்.

ஆனுல், கி.பி. முதலாம் நூற்ருண்டில் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்த பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூருர் தம் காலத்தில் இந்த ‘இந்து’ (இந்துமதம் → இந்தியா) என்ற சொல்லுக்கு 48 வகையான, (அதற்கும் மேற்பட்ட பொருளுடைய சொற்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிருர். அவை 1.விந்து, 2.உயிரணு 3.உயிரின் கரு, உயிரின் ஆரம்பமும் முடிவும் 4.ஒளி 5.ஒலி 6.வலிமை 7.வளம் 8.அழகு 9.இளமை 10.இனிமை 11. அன்பு 12.அமைதி 13.நிறைவு 14.நிம்மதி 15.ஒற்றுமை 16.உறவு 17.உரிமை 18.பற்று 19.பாசம் 20.நேர்மை 21.வாய்மை 22.தூய்மை 23.மெய்ம்மை 24.துய்ப்பு 25.பத்தி 26.சத்தி 27.சித்தி 28.முத்தி 29.நிலேப்பேறு 30.பிறப்பிறப்பற்ற பெருநிலே 31.தவம் 32.ஞானம்,.......... என்பன போன்றவை.

♣♣♣♣♣♣

# அறிமுகவுரை

சிந்திக்கவும் சிந்திக்க வைக்கவும் இன்றைய தினம் நாட்டில் எந்தத் தலைவர்களும் இல்லை என்பது கண்கூடு. நாட்டில் மக்களை வழிநடத்திச் செல்ல சிறந்ததொரு அரசியல் பாடமும்; அதாவது ஏட்டுலக அறிவும், செயல்முறை அறிவும், பாரம்பரியமும், நல்லதொரு பின்னணியும் கொண்ட ஆற்றல்மிகு மறவர்குலத் தலைவன் இல்லவே இல்லை என்பதுதான் உண்மை. வறுமை, ஏமாற்று, சுரண்டல், கொள்ளை, இலஞ்சம்,........ போன்ற எண்ணற்ற அநீதிகள் தலைவிரித்தாடுகின்ற போதிலும்; தட்டிக் கேட்டுப் போராடவும், மக்களைத் திரட்டியெழுப்பி அணிவகுக்க வைக்கவும் தத்துவமோ, தத்துவ வழி நடக்கும் தலைவனோ, அமைப்போ நாட்டில் இல்லை.

வரப்போகின்ற எதிர்காலத்தை உற்றுநோக்குகையில் ஓர் உண்மை நன்கு புலனாகின்றது. அதாவது, அரசியல் நடத்த, ஆட்சியை நடத்த தலைவர்களற்ற நிலையை நாடு பெறப்போகின்றது என்பதுதான். அந்த வெற்றிடத்தை நிரப்ப நடைபெற உள்ள, **'போட்டி எரிமலைகளில்'** எத்தனை பேர் வீழ்ந்து சாம்பலாவார்களோ?........ யாருக்கும் தெரியாது!

நாட்டிற்கு வளமும் நலமும் பெறப்பாடுபடுவோம் என்று கூறிப் புறப்பட்டவரெல்லாம், வளமும் நலமும் தன்னளவில் கிடைத்தவுடன் ஒதுங்கிக் கொண்டார்கள், பதுங்கிக் கொண்டார்கள். மொழியின் பெயரைச் சொல்லி வெளிவந்தவரெல்லாம் வளமாக வழி கிடைத்தவுடன் வாரிச் சுருட்டிக் கொண்டு ஒளிந்து கொண்டனர். **'இந்தியத் துணைக் கண்டத்தை ஒரே நாடு' என்றெல்லாம் முழக்கமிடுபவர்கள் தன்னையும் அடிமையாக்கிக் கொண்டு தமிழர்களையும் அடிமையாக்கிச் செயல்படப் புறப்பட்டு விட்டனர்.** உலகுக்கே நாகரீகத்தையும், அறிவியலையும் வழங்கிய கற்பகக் கோட்டையான தமிழினம் இன்று நாடி நரம்பிழந்து மாற்றானிடம் கையேந்தி வாய்பொத்திக் கூனிக் குறுகிக் குலைநடுங்கக் கும்பிட்டுக் கிடக்கின்றது. இந்த நிலை தமிழனுக்கு ஏன் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? எதனால் ஏற்பட்டது? என்பதைச் சிந்தித்துச் சீர்தூக்கிச் செயலாக்கும் திறன் என்றைக்கு தமிழினத்துக்கு வருகின்றதோ அன்றுதான் இந்தத் தமிழ்த்தாயின் மீது பூட்டப்பட்டுள்ள விலங்குகள் அனைத்தும் தூள்தூளாகத் தெறித்தோடிடும் அல்லது உடைத்தெறியப்படும்.

பழங்கதை பேசவும், வாய்வீரம் பேசவும் மக்களை ஏமாற்றும் திறன் பெற்று விளங்கும் நமது அரசியல் தலைவர்களால் இதுவரை எந்தவிதமான பயனோ நன்மையோ முழுமையாக விளையவில்லை. இதைமாற்றி; இந்தத் தவறான, முறைகேடான தன்னல வெறிமிக்க ஏமாற்றும் போக்குடைய தலைமைகளை மாற்றி அமைக்கக் கூடிய மாபெரும் வல்லமை ஒரு தத்துவச் செறிவுமிக்க இயக்கத்துக்கே உரியதாகும்.

பந்தயக் குதிரையின் மீது சாதாரண முடவன் ஏறி ஓட்டி விட முடியாது. அரசு என்னும் ஆட்சிக் கட்டிலில் திடீரென்று பதவிக்கு வந்தவர்களால் மாட்சிமைமிக்க ஆட்சியை நிகழ்த்தி விட முடியாது. வாக்கு முறையின் போக்குத் தெரியாமல் நோக்கின்றி ஓடிக்கொண்டிருக்கும் கொள்கையற்ற கோமாளிகளால் நீண்ட காலம் இந்நாட்டில் அரசுக் கட்டிலில் அமர்ந்திருக்க முடியாது. வேகம் பிறந்துவிட்டால் காட்டாற்றுக்கு அணைகள் கிடையாது. அந்தக் கொந்தளிப்பான நிலை உருவாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

வறுமையைப் போக்க என்ன திட்டம்? சாதியை ஒழிக்க என்ன திட்டம்? மதப் போராட்டத்தைத் தீர்க்க என்ன திட்டம்? மொழிப் போரை விலக்க என்ன மாற்றுத் திட்டம்? இந்த நாட்டின் இலக்கியம் கலை, தொழில், மருத்துவம், விஞ்ஞானம், வரலாறு,........ யாவும் மக்களுக்கு எவ்வாறு இன்றைய விஞ்ஞான அறிவோடு தரப்

போகின்றுர்கள்? அல்லது இவைகள் இன்றைய வாழ்க்கைக்குத் தேவையே இல்லையா? மதம் மனிதனுக்குத் தேவையா? கடவுள் உண்டா? இல்லையா? என காலங்காலமான கேள்விக்கு இன்றைக்குள்ள தலைவர்கள் என்ன சொல்லப் போகின்றுர்கள்? வரப் போகின்ற சந்ததியினரும் சந்தேகத்தில்தான் காலந் தள்ளப் போகின்றனரா? பேய் உண்டா? பிசாசு உண்டா? தேய்நிலை என்றுல் என்ன? மாய்நிலை என்றுல் என்ன? ஓய்நிலை என்றுல் என்ன? இவைகளைப் போக்க மருந்து என்ன? இப்படிப் போன்ற எண்ணற்ற கேள்விகளுக்கு மனிதகுல ஆசைகளின் வெடிப்புக்களால் சிதறப்படும் விளுக்களுக்கு எவரால் விடையோ, நிறைவோ, பதிலோ தர இயலும்? -- இவை அனைத்துக்கும் விடை பகரக் கூடிய தரமும் திறமும் வீரமும் விவேகமும் உள்ள அமைப்பு ஒன்று உண்டென்றுல் அது 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' தான்.

அரசுக்கட்டிலில் அமர்வது என்பதோ, அரசாணைகள் பிறப்பிப்பது என்பதோ இன்றைய சூழ்நிலையில் மிகவும் எளிது! துப்பாக்கி முனையில் கூலிப்படைகளின் மூலம் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது என்பது மிகமிக எளிது! ஆனுல், நிலையான **சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை** அமைக்க வேண்டுமென்பதை உள்ளீடாகவும், உயிர்மூச்சாகவும் கொண்டிருக்கின்ற இயக்கம் **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'** ஒன்றுதான். எனவேதான், இ.ம.இ. முழுமையான சமுதாய மாற்றத்திற்காக தனது அடிகளை முன்னேக்கி எடுத்து வைக்கின்றது. அதன் முதல் கட்டமும் முழுமையான முன்னேக்குப் பார்வையுந்தான் இந்த **இ.ம.இ.யின் கொள்கை விளக்கம்.**

இ.ம.இ. இளைஞரணியை உருவாக்கி என்ன செய்யப் போகின்றது? எப்படி செய்யப் போகின்றது? என்பவை மிகமிகத் திட்டவட்டமாக இந்நூலில் வரையறுக்கப் பட்டுள்ளன.

மதவழி மறுமலர்ச்சியே என்றைக்கும் மக்களிடையே ஒற்றுமையையும், உரிமை உணர்வையும், நம்பிக்கையையும் தோற்றுவிக்கும். இம்மதவழிச் சிந்தனைகளை ஒவ்வொரு தனிமனிதரும் பெற்றேயாக வேண்டும். ஒவ்வொருவரும் தன்னளவாவது மிகச் சிறந்த அருளாளராக மாறியேயாக வேண்டும். அதற்குரிய பயிற்சிகளை அனைவரும் பெற்றேயாக வேண்டும். அப்படிப் பெற்றுப் பண்பட்ட மனிதராக மாறிடுபவர்களே இச்சமுதாயங் காக்கும் காவலர்களாகவும், வழிகாட்டிகளாகவும், வழித்துணைவர்களாகவும், வழிநடத்தும் தலைவர்களாகவும் ஆகிடும் தகுதியைப் பெறுகின்றனர்.

நமது இறுதிக்கட்ட செயல்நிலை அரசியலாகத்தான் இருக்க நேரிடும். ஏனெனில், மதவாதிகளிடம்தான் தாய்மொழிப்பற்று, தமிழினப்பற்று, தாய்நாட்டுப்பற்று இருக்கின்றது. அவர்களால்தான் நாட்டில் **அறம்நிறை அருளாட்சியை** நிறுவ முடியும். அந்த அருளாட்சி அமையவே **'பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்'** பாரம்பரியமாக இருந்து வரும் இயக்கத்தின் மூலம் செயல்படத் துவங்கியுள்ளார். இவ்வியக்கத்தின் கொள்கையை இந்தியரனைவரும் ஊன்றிப் படிக்க வேண்டுகின்றேம். தமிழர்களாகிய ஒவ்வொருவரும் இக்கொள்கை விளக்கத்தை முழுவதுமாகப் படித்துணர வேண்டும்.

அதே நேரத்தில் இந்துக்களில் மெய்யான இந்துக்கள் அனைவரும் இந்திய அளவில் இக்கொள்கை வாசகத்தை முழுமையாகப் படித்துணர வேண்டும். ஏனெனில், **இந்துமதத் தந்தை, ஞானச்சாரியார், குவலய குருபீடம், தமிழினக் குருதேவர், தமிழ்மொழித் தத்துவ வாரிசு,.......** நேரில் தலைமை தாங்கி வழிநடத்தும் இ.ம.இ.யின் கொள்கையையும், குறிக்கோளையும், செயல்நிலையையும் புரிந்து கொள்ள தமிழராய் உள்ள அனைவரும் முன்வந்தே ஆக வேண்டும். இந்தியாவின் வருங்காலம் இருண்டதாக மாறிவிடாமலிருக்க இந்தியப் பண்பாட்டிற்கும், நாகரீகத்துக்கும் மூலவர்களாகவும், காவலராகவும் உள்ள பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் வரிசையில் பன்னிரண்டாவது பதினெண் சித்தர்

பீடாதிபதி தோன்றிச் செயல்படும் இன்றைய நிலையில் இந்திய மக்கள் விழிச்சி பெற்றேயாக வேண்டும்; எழுச்சி பெற்றேயாக வேண்டும்; இல்லையேல் எவ்வளவு காலத்திற்கு இந்த வீழ்ச்சி நிலையும், தாழ்ச்சி நிலையும், ஆழ்ச்சி நிலையும், இகழ்ச்சி நிலையும் நீடிக்குமோ தெரியாது. எனவே, இந்த இ.ம.இ.யின் கொள்கை விளக்கத்தை அனைவரும் விரும்பி தெரிந்து புரிந்து செயல்பட வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இ.ம.இ.யின் தலைமைப் பொறுப்பாளர்
சி.கவிக்குமார் B.Sc.

---

# பதிப்புரை

## --- அ.வி.தி. செயல் வீரர் அணி

அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, குருதேவரிடம் இப்பதிப்பு வெளிவருவதின் மூலம் எத்தகைய பாதிப்புக்கள் வந்தாலும் அவற்றை அறிவியல் சீவிகளாக (வெறும் கொள்கை வாதிகள் = Theoreticians) இருப்பவர்கள் ஏற்றுத் தொல்லைப்படாமல் இருக்க தத்துவ வெற்றிக்காக முழுநேர உடலுழைப்புப் பாட்டாளிகளாக வாழுகின்ற அருட்பணி விரிவாக்கத் திட்ட செயல் வீரர்களான நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கின்றோம் என்று உறுதிமொழி தந்து கையெழுத்திட்ட பிறகே வெளியிடுகின்றோம். ஏனெனில், “அ.வி.தி. செயல்வீரர்களாகிய நாங்கள் ‘குருபாரம்பரிய மரபுப்படி எங்களுக்குள் குருதேவர் வாழ்வதாகவும், குருதேவருக்குள் நாங்கள் வாழ்வதாகவும் உணர்கின்றோம், நம்புகின்றோம், ஒப்புக் கொள்கின்றோம்.’ எனவேதான், குருதேவர் எதைச் சொன்னாலும், செய்தாலும் அவற்றைப் பற்றி எள்முனையளவு ஐய உணர்வோ ஆய்வுணர்வோ பெறாமல் அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்கின்றோம். நாங்கள் அனைவரும் குருதேவரின் அங்கங்களாகவே இயங்குகின்றோம்”. எனவே, இந்த பதிப்புரை எங்களுடைய முழுப் பொறுப்பிலேயே, முழு விருப்பத்திலேயே, முழு உழைப்பிலேயே, முழு முயற்சியிலேயே வெளிவருகின்றது, வெளிவருகின்றது, வெளிவருகின்றது.

இந் நன்னாளில் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை விளக்கம் பெருமுயற்சிகளுக்குப் பிறகு வெளியிடப்படுகின்றது. ஏனெனில், இக்கொள்கை விளக்கம் இவ்வியக்கத்தின் முந்தையத் தலைவர்களால் பலமுறை காலங்கள் தோறும் எண்ணற்ற முறை எழுதித் தொகுக்கப்பட்டு கையெழுத்துப் பிறதிகளாக வெளிவந்துள்ளன. அவைகள் நாடெங்கும் இந்துமதத்தின்பாலும், பதினெண் சித்தர் நெறியின்பாலும், தமிழ்மொழியின்பாலும் பற்றுக் கொண்டவர்களிடம் சென்று தங்கி விட்டன. பின்னர், இ.ம.இயக்கத்தின் இன்றைய தலைவரும் இந்துமதத் தந்தையும், ஞானாச்சாரியாரும், அருளாட்சி நாயகமுமான ‘ஞாலகுரு சித்தர் கருவூரரின்’ தந்தையான சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமிப் பிள்ளை அவர்கள் இயக்கத்தின் இரண்டாவது தலைவராக இருந்த காலத்து இக்கொள்கை விளக்கம் முழுமையான அளவிலும் பகுதி பகுதிகளாகவும் தொகுதி தொகுதிகளாகவும் பலமுறை அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்ததாக அறிந்தோம்.

இன்றைய சமுதாயச் சூழ்நிலையின் காரணமாக இலைமறை காயாகவே இவ்வியக்கத்தின் கொள்கை விளக்கம் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கொள்கை விளக்கம் சமுதாய நலங்கருதி பலமுறை வெளியிடப்பட்டும் ஏற்றுப் போற்றுவார் மிகுதியாகத் தோன்றாமல் போய்விட்ட காரணத்தினால் நிலவறைப் புதையலாகப் பேணப்பட்டு வந்துள்ளது. அதேபோல், இன்றைக்கும்கூட கணிசமான குறிப்பிடத் தக்க உறுப்பினர்களும், முன்னணித் தலைவர்களும் இக்கொள்கை விளக்கம் அச்சாகி வெளிவருவதை விரும்பவில்லை. ஏனென்றால், இவர்கள் மக்களின் போக்கில் பொதுவாகப் புரட்சிகரமான மாறுதலைச் சந்திக்கும் தரமோ, திறமோ இன்றி உள்ளதால் இக்கொள்கை விளக்கம் வெளிவருவதால் எந்தவிதமான முழுப்பயனும் இல்லை என்று கருதுகின்றனர். இருந்த போதிலும், இப்பதிப்பு இயக்க உறுப்பினர்களின்றி பெரும்பாலான ஆர்வலர்களாகவும், ஏந்தாளர்களாகவும், விருப்பாளர்களாகவும், ஆதரவாளர்களாகவும், இளைஞர்களாகவும் உள்ள அனைவராலும் பேரார்வம் காட்டி பெருமுயற்சி செய்து வெளியிடப்படுகின்றது. இம்மாபெரும் முயற்சிக்குரிய பலனாக, பதிலாக பொருளையும், அன்பளிப்பையும் மட்டும் எதிர்பார்க்க வில்லை. இந்நாட்டு இளைஞர்களின் ஒன்றுபட்ட சத்தி திரண்டெழுந்து ஒருமிக்க வேண்டும். இவ்வியக்கத்தின் கொள்கைகளை கிராமங்கள்தோறும்,

ஊர்கள்தோறும், நகரங்கள்தோறும் பரப்பிட வேண்டும். முழுமையான சமுதாய மாற்றத்திற்கான முன்முயற்சிகளில் ஈடுபட வேண்டும். நிர்வாகக் கட்டமைப்புக்களை ஆங்காங்கே அமைத்து நிறுவனங்களை இந்துமதத்திற்கும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கும் ஏற்படுத்தித் தரவேண்டும். இவைகள் ஒழுங்காகச் செயல்படுவதைத்தான் இக்கொள்கை விளக்க வெளியீட்டிற்குக் கிடைக்கும் உரிய பயனாக நினைக்கின்றோம்.

ஏனென்றால், இ.ம.இ.யின் இன்றைய தலைவர் அரசயோகி, அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஞானாச்சாரியார், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களை நாடி, 'இயக்கத்தின் கொள்கைகளை வெளியிட்டுத்தான் இயக்கத்தை மக்களிடையே அறிமுகப்படுத்தி வளர்க்க வேண்டும்' என்றோம். அவரோ, 'நாட்டில் எந்தக் கட்சியும் தன்னுடைய கொள்கையை அச்சிட்டு வழங்கிட முன்வராதபோது; நம்முடைய முன்னணித் தலைவர்கள் மட்டும் இக்கொள்கைகளை அறிந்தால் போதும்' என்றார். மேலும், 'இவ்வியக்கத்தின் இருபெரும் முன்னாள் தலைவர்களின் கொள்கை விளக்கத்தை முழுமையாக வெளியிட்டால்; அது அவர்களின் காலத்துக் கருத்து என்றாலும்; கருத்து வீச்சினையும் ஏச்சினையும் கண்டு, **சமயச் சமுதாயத் தலைமைச் சத்திகளால்** பொறுமையாக நாடோறும் பல்வேறு ஏழை எளிய மக்களுக்கு ஆற்றிவரும் எமது அருட்பணியைக் கெடுக்கின்ற செயலாக மாறிவிடும்' என்றஞ்சினார். நாங்களோ, 'தங்களின் கருத்தையாவது - கொள்கைகளையாவது வெளியிடலாமே' என்றோம். குருதேவரோ, 'இயக்கத்தின் முன்னாள் இருபெரும் தலைவர்களும், பதினெண் சித்தர் பீடாதிபதிகளுக்குரிய பயிற்சிகளையோ, முயற்சிகளையோ முழுமையாகப் பெறாதவர்கள். நானோ, இம்மண்ணுலகம் முழுவதும் பதினெண் சித்தர்கள் உருவாக்கிய அருளூற்றுக்களை வழிபட்டு பத்தி, சத்தி, சித்தி, முத்தி பெற்றிடவும் பதினெண் சித்தர் கலைகளில் பயிற்சியும் முயற்சியும் பெற்றிடவும் 36 ஆண்டுகள் கடுமையாக அலைந்து திரிந்து பலகோடியனுபவங்கள் பெற்றவன்.

இம்மண்ணுலகில் அருளாட்சி அமைக்கத் தோற்றுவிக்கப்பட்டவரான யாம், நோற்றிருக்கும் புரட்சிப் பாதையின் கொள்கைகளை, சீர்திருத்தக் கருத்துக்களை கூறப் புகுவேனானால் இன்றைய நிலையில் நாட்டிலுள்ள தலைமைச் சத்திகளால் அவற்றைச் சகித்துக் கொள்ள முடியுமா என்று தெரியவில்லை? ஏனென்றால், புத்தரைப் போலவோ மகாவீரரைப் போலவோ ஒரே நாளில் ஞானம் பெற்றவரல்ல யாம். ஏனெனில், யாம் காடுகளிலும், கடலிடைத் தீவுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் கண்ட எத்தனையோ இருடிகளிடமும், முனிவர்களிடமும், தவசிகளிடமும் தொண்டராக இருந்தே தத்துவங்களை எப்படிச் செயலாற்ற வேண்டும் என்பதை முடிவு செய்தோம்.

ஏனெனில், யாம் வழங்கப் போவது அனைத்தும் எம்முன்னோரால் காலங்காலமாகக் காக்கப்பட்டு வரும், வளர்க்கப்பட்டு வரும் அல்லது பாதுகாக்கப் பட்டுவரும் ஞானக் கலைக் கருவூலச் செல்வங்களேயாம். இவற்றை யாம் சம்பாதிக்கவுமில்லை, உருவாக்கவும் இல்லை. அதாவது ஏற்கனவே வெட்டப்பட்டுள்ள கிணற்றிலிருந்து நீரை இறைத்து தருபவரைப் போன்றவரே யாம். இந்த அருள்நீரை இறைத்துத் தரப் பயன்படுத்தும் சாதனமும், முயற்சியும்தான் எமது பயிற்சிகளும், முயற்சிகளும். இந்த நீரில் -- அருள்நீரில் விளையப் போகும் பயிர்கள்தான் தமிழக மக்கள். இவ்வருட்பயிர் விளைவதற்குரிய நாற்றங்கால்தான் இத்தமிழகம். இன்றும் கூட யாம், இன்னும் அருளுலக மாணவனாகவே தாத்தாக்களாலும், ஆத்தாக்களாலும், உலக அருளாளர்களாலும், அம்மையப்பன்களாலும் பயிற்றுவிக்கப்படுகின்றேன். அந்தநிலையில் இருக்கக் கூடிய யாம் எம்முடைய கருத்துக்களைக் கூறப்புகுவேனாகில் அவைமிகக் கடுமையாகவும், கொடுமையாகவும் சிலநேரத்தில் பச்சையாகவும், கொச்சையாகவும் கூட இருக்க நேரிடும். என்னோடு அல்லும் பகலும் உடனிருந்து பயிற்சி பெறும் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களாலேயே எம்மை முழுமையாக உணர

முடியாதபோது இந்தச் சமுதாயம் எங்ஙனம் எம் கொள்கைகளை விரும்பியேற்கப் போகின்றது?' எனக் கூறி மறுத்தார்.

இ.ம.இ.யின் அ.வி.தி. செயல் வீரர்களாகிய பலரும் நாங்கள் ஒன்று கூடி குருதேவரை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டதின் பேரில் அவரும் சம்மதித்தார். ஏனெனில் வறட்டு ஏட்டுலக வாதிகளாகவும், உலக அனுபவம் இல்லாதவர்களாகவும், கொள்கை அளவில் புலமையுடையவர்களாகவும் இருப்பவர்களால் மட்டுமே பட்டி தொட்டிகளிலும், குக்கிராமங்களிலும், நகர்ப் புறங்களிலும் வாழ்கின்ற பாமர மக்களிடம் இ.ம.இ. வளர்க்க இயலாது என்பதால் அ.வி.தி. செயல் வீரர்களின் விருப்பப்படியே இப்பகுதியினை வெளியிடச் சம்மதித்தார். அதாவது மக்கள் தொடர்புள்ளவர்களால் மட்டுமே இ.ம.இ. வளர்க்க முடியும். எனவேதான், இப்பதிப்புரையின் கீழே இ.ம.இ. செயல்வடிவமாகவும், உள்ளீடாகவும், உயிராகவும், அடிப்படையாகவும், நாடித்துடிப்பாகவும் இருக்கின்ற அ.வி.தி. செயல்வீரர்களின் முதன்மையானவர்களின் பட்டியலை இப்பதிப்பின் பொறுப்பாளர்களாக அறிவிக்குமாறு பணித்தார் குருதேவர். இப்பதிப்பில் உள்ள அனைத்துக் கருத்துக்களுக்கும் கீழே குறித்துள்ள அ.வி.தி. செயல்வீரர்களே மாவீரம் காட்டி பொறுப்பேற்கின்றோம் என்பதோடு; இ.ம.இ.யின் கொள்கை விளக்கம் என்றாலும்; இதனை வெளியிடுவது அருட்பணி விரிவாக்கத் திட்ட உறுப்பினர்களேயாம். இதிலுள்ள கருத்துக்கள் யாவும் இ.ம.இ.யின் இருபெரும் தலைவர்களான சித்தர் ஏளனம் பட்டியாருக்கும், சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமிப் பிள்ளைக்கும் உரியது.

ஒப்பம்:-- அருளாட்சி நாயகம், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், இ.ம.இ.யின் தலைவர், குருதேவர், குருமகா சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் கருவூரார்.

இ.ம.இ.யின் தலைமைப் பொறுப்பாளர்,
சி. கவிக்குமார் B.Sc.

இ.ம.இ.யின் தலைமைச் செயலாளர்
நெ. சேவுகன்
மற்றும் இ.ம.இ. தலைமைப் பணியாளர்கள்.

வெளியிடுவோர்: **அ.வி.தி. செயல் வீரர்கள்.**

**மதுரை மாவட்டம்:** மதுரை:-- 1. பெரி.முத்தையா 2. சோ.இரவீந்திரன், 3. வெ.செகதீசன், 4. டாக்டர் S.R.நீலமேகம் 5. ந.தயாளன், 6. ம.சி.இராமன், 7. சு.இராசுநாயுடு, 8. M.S.R.மாரியப்பன், 9. அ.இராமர், 10. V.சந்திரசேகரன், 11. அழகர்சாமி, 12. A. காசி, 13. சாமிநாதன், 14. கொட்டாம்பட்டி பாலுச்சாமி, 15. பொன்னமராவதி வலையப்பட்டி ந. பழனியப்பன், 16. K. முத்துராமன்.

**சேலம் மாவட்டம்:** வேம்படிதாளம் -- 17. சீ. மணி, 18. இரா.சீனிவாசன், 19. கவி இல.க.கணேசன், 20. சீ.பத்தவச்சலம், 21. இரா.வெங்கடேசன்.

இராசிபுரம்: 22. இர.கங்காதரகுமார், 23. இராசமாணிக்கம், 24. ப. முருகவேலு, 25. மாட்டுவேலம்பட்டி குழந்தைவேலு

**திருச்சி மாவட்டம்:** குலக்கொடி: 26. கு.ம.கணேசன், 27. இராமசாமி,
முசிறி: 28. க.ப.செயபால், 29. நாகானந்தன், 30. பொ.சங்கிலியாபிள்ளை, 31. கோவிலூர் மாரியப்பன், 32. காட்டூர் மாரிமுத்து

**தஞ்சை மாவட்டம்:** 33. A.இராமர், 34. S.A.கணேசன், 35. திருவையாறு சங்கரன், 36. களிமேடு கலியமூர்த்தி

**வடஆற்காடு மாவட்டம்:** வேலூர் 37. பிச்சைமணி, 38. தேவராசு, 39. சோலையழகன், 40. இராசாபாதர், 41, செயராமன், 42. சிங்காரம்

**ப.மு.தேவர் மாவட்டம்:** காரைக்குடி 43. மு.முத்துராசமூர்த்தி, 44. த.குருசாமி, 45. கண்டனூர் நெல்லியான்

**கோவை மாவட்டம்:** சிறுமுகை 46. இராமசாமி, 47. பழ.கோபால், 48. ஈரோடு க.மோகனசுந்தரம்

**அண்ணா மாவட்டம்:** 49. நத்தம் அருணாசலம், 50. சின்னையா, 51. உலுப்பகுடி மு. அழகப்பன்,

**திருநெல்வேலி மாவட்டம்:** 52. வைத்தியலிங்கம், 53. பூவலிங்கம்,

**புதுக்கோட்டை மாவட்டம்:** 54. வெ.இராமதாசு

**சென்னை மாவட்டம்:** 55. M.G.R.நகர் பா. மோகன், 56. சூரப்பட்டு ந.சண்முகம், 57. அமிஞ்சிக்கரை சுப்பிரமணி, 58. காரணோடை மு.நாகேசுவரன்,

**செங்கை மாவட்டம்:** 59. கும்மிடிப்பூண்டி A.சுப்பிரமணி, 60. திருக்கண்டலம் மு.கோதண்டபாணி

**வெளி மாநிலம்:** 61. பெங்களூர் இரா.செ.வேங்கட்டரமணன், 62. புவனேசுவர் சீ.மோகன்.

---

# முன்னுரை

**இளந்துறவி சித்தரடியார் சுந்தரானந்தா B.E.**
தலைமைப் பணியாளர்களுள் ஒருவர்
**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

இன்றைய நாட்டுநடப்புக்களின் காரணமாக இறையுணர்வும், மத அறிவும், பத்தி வாழ்வும் மறுமலர்ச்சி பெறச் செய்யும் முயற்சிகள் துவக்கப்பட்டுள்ளன. மதத்துறையின் தாயாகவும், மூலமாகவும், கருவூலமாகவும், நாற்றுப்பண்ணையாகவும்,........ இருந்து வரும் பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான ‘சீவநெறி’யெனும் ‘மெய்யான இந்துமதம்’தான் இம்முயற்சிக்குரிய பயிற்சிச் சாதனமாக இருக்க முடியும். எனவேதான், 43,73,087 ஆண்டுகளுக்கு முன் இந்துமதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர் பீடாதிபதிகளே காலங்கள் தோறும் தோன்றித்தோன்றி இந்துமதம் மறுமலர்ச்சி, வளவளர்ச்சி, வலிமைமிகு ஆட்சிமீட்சி,....... முதலியவைகளை நிறைவேற்றும் இந்துமதத் தந்தையாக -- மானுட நலக்காவலராக விளங்குகின்றனர்.

அந்த மரபுவழித் தோன்றலாக பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குவலய குருபீடம், ஞானுச்சாரியார், அருளாட்சி நாயகம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் இன்றைக்கு இந்துமதத் தந்தையாக திருத்தோற்றம் நல்கியுள்ளார். இவரும், தமது முன்னோர்கள் வழியில் இந்துமத மறுமலர்ச்சி மூலம் ‘உலக ஆன்மநேய ஒருமைப் பாட்டினையும்’, ‘உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும்’ உருவாக்கும் பணியைத் துவக்கியுள்ளார். இதற்காக, இந்தக் கலியுகத்தில் முதல் முறையாக கி.பி. முதலாம் நூற்ருண்டில் துவக்கப்பட்ட ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’; பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785--1279) உருவாக்கியதோடு நிறைவுற்று மறைந்தது. அதைப்போல், இந்த இ.ம.இ. இரண்டாவது முறையாக கி.பி.1772-இல் கருவூரார் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. அவரும், அவருக்கடுத்தபடியாகப் பாரம்பரியமாக இ.ம.இ.யின் தலைவராக இரண்டாவது முறை பதவியேற்ற சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம.பழனிச்சாமிப் பிள்ளை அவர்களும் வழங்கிச் சென்றுள்ள கருத்துக்களும், செய்திகளும், திட்டங்களும் மட்டுமே இ.ம.இ.யின் கொள்கை விளக்கமாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இந்தச் சுருக்க விளக்கச் சிறிய புத்தகம் அவசர அவசியமாக அச்சிடப்படுகிறது. இதிலுள்ள எந்த வாசகமும் இன்றைக்குப் பாரம்பரியமாக இ.ம.இ.யின் தலைவராகப் பணியாற்றும் குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூராரால் வெளியிடப்படுவதல்ல. தமிழினத்தாரின் அகப்புறப் பண்பாடும் நாகரிகமும் விடுதலை பெற்றுத்தான் உலக அளவில் மானுட நலம் காக்கப்பட முடியும் என்பதாலேயே இ.ம.இ.யின் கொள்கை விளக்கம் வெளியிடப்படுகிறது.

---

# பரிந்துரை

அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலாளர்,
பரமாச்சாரியார், அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம்
திருமந்திற ஓலைநாயகம், **நெ. சேவுகன்.**

“.......தனிமனிதன் செம்மைப்பட்டால்தான் அக்குடும்பமே செம்மைப்படும். ஒரு குடும்பம் செம்மைப் பட்டால்தான் ஒரு சமூகமே செம்மைப்படும். ஒரு சமூகம் செம்மைப் பட்டிட்டால் அந்த இனத்தின் அனைத்துப் பிரிவு மக்களுமே செம்மைப் பட்டிடுவர். அப்படி ஓர் இனம் செம்மைப் பட்டிட்டால்தான் படிப்படியாகப் பல இனங்களும் செம்மைப்பட்டு உலகமே செம்மைப்பட்டிடும்........ அதனால்தான் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் காலங்கள் தோறும் தோன்றி இம்மண்ணுலக மூல இனமும் முதல் இனமுமான தமிழினத்தைச் செம்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுகிறார்கள். இப்படித்தான் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும்; மானுட நல மேம்பாட்டையும்........ படிப்படியாக உருவாக்கியே உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயத்தைத் தோற்றுவிக்க முடியும். அதுவே, விண்ணும் மண்ணும் இணையும் நிலை. ........அந்நிலைக்காகவே கலியுகத்தில் இந்து மறுமலர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப்படுகின்றது........” என்று பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரி ஆற்றங்கரைக் கருவூராரின் குருபாரம்பரிய வாசகத்தையே இங்கு எனது பரிந்துரையின் மையமாக வழங்குகிறேன்.

இ.ம.இ. வளரவும், வளம்பெறவும், வலிமைமிகு ஆட்சி பெறவும் வேண்டுமானால் முதலில்; இதனின் கொள்கை விளக்கம் தமிழரனைவருக்கும் முழுமையாகத் தெரிய வேண்டும். ஏனெனில், தமிழ்மொழியும், இனமும், நாடும் நெடுங்காலமாகத் தலைமையில்லாமல், தக்க தலைவன் உருவாகாமல்........ அன்னிய அலைகளில் சிக்கித் தவிக்கும் சிறுதுரும்புகளாகி விட்டன. **தமிழர்களில் தலைவர்கள் தோன்றினாலும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் உயிர்நாடியான தத்துவத்தையும், சித்தாந்தத்தையும், வேதாந்தத்தையும் தெரியாதவர்களாகவும், தெரிய முடியாதவர்களாகவுமே வாழ்ந்திட்டார்கள். எனவேதான், பேரறிவும், பேராற்றலும், துணிவும் மிக்க தலைவர்கள் சிலர் தமிழரில் தோன்றியும் கூடத் தமிழர்க்கு இனப்பற்று, இனஒற்றுமை, இனஒருமைப்பாடு, மொழிப்பற்று, உரிமைப்பற்று, விடுதலையுணர்வு, தன்மான உணர்வு, தன்னம்பிக்கையுணர்வு........ முதலியவற்றைத் தேவையான அளவு கூட உருவாக்க முடியவில்லை! முடியவில்லை!! முடியவில்லை!!! முடியவே இல்லை. இப்பேருண்மையினை இப்பொழுதாவது தலைமைப் பதவியிலிருப்பவர் முதல் தொண்டர்கள் வரை நன்கு தெரிந்து புரிந்து உணர முற்பட வேண்டும்.** அப்பொழுதுதான், தமிழரின் தத்துவ நாயகமாக, தத்துவ வாரிசாக, சித்தாந்தத் தலைவராக, வேதவித்தாக, வேதாந்தப் பொருளாக, ஞானச்சாரியாராக, குருபீடமாக, குருதேவராக, அருளுலகப் பொருளுலக இருளகற்றும் அருட்பெருஞ்சோதியாக; அனைத்து வறுமைகளையும் வெறுமைகளையும் அகற்றும் அருட்கொடை வள்ளலாக, எல்லா ஏக்கங்களையும் ஏமாற்றங்களையும் போக்கிட அருளை அநுபவப் பொருளாகப் பெறும் சாகாக்கல்வி வழங்கும் ஆச்சாரியாராக, பயிற்சி முயற்சிகளுக்குத் தயாராக இருப்பவர்களைக் கடவுளாகவே உருவாகிடச் செய்யும் **பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகத் தோன்றியுள்ளார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள். இவர் வழங்குகின்ற கருத்துக்களுக்கும், செய்திகளுக்கும், செயல்திட்டங்களுக்கும் உயிர்நாடியாக உள்ள தத்துவத்தின் சுருக்கமே இந்தக் கொள்கை விளக்கம்.** எனவே, இந்தக் கொள்கை விளக்கம்தான் தமிழருக்குத் தலைமைதாங்கி வழிநடத்தும் தலைவனாக இருந்திட முடியும். அதாவது, தமிழர்க்குத் தங்களின் தத்துவமே தலைமைதாங்கி வழிநடத்த வேண்டும்.

பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி தமது அரச பாரம்பரியத்தில், "........தமிழர்களுக்குத் தங்களுடைய தத்துவ நாயகங்கள் தலைமையேற்று ஞானவேந்தராகி அருளாட்சி செய்திட்டால்தான்; அன்னிய ஆட்சிகளும் அடிமையுணர்வுகளும் அகன்றிடும் ........" என்று கூறும் கருத்தை இப்பொழுதாவது அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழர்கள்தான், இம்மண்ணுலகின் அருளுலக வாரிசுகள், வழிகாட்டிகள், தத்துவ வித்துக்கள்....... என்ற பேருண்மையினை முறையாகவும், முழுமையாகவும் உணர்த்தினால்தான் தமிழர் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் பெற்றிடுவர். அதற்கு, இந்த இ.ம.இ.யின் கொள்கை விளக்கம்தான் ஓரேவழி என்பதே எமது பரிந்துரை.

---

# அணிந்துரை

அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற
கூத்தர்ப் பெருமான் சன்னிதானம் **ஏ. இரவி** B.Sc.

இம்மண்ணுலகின் ஆயுளான 500 கோடி ஆண்டுகளுக்கும் முந்தியதும்; அண்ட பேரண்டங்கள் அனைத்தையும் கணக்கற்ற கோடி ஆண்டுகளாக அமுதச் செந்தமிழ் மொழியால் ஆண்டு வருவதுமான இந்து மதம் எனும் சீவநெறியான சித்தர் நெறி பற்றிய சுருக்க விளக்க நூலே இக் கொள்கை விளக்கம். இந்தக் கொள்கை விளக்கம் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியரால் பெரிய அளவில் அழிக்கப்பட்ட இந்துமதத்தையும் தமிழ் மொழியையும் மறுமலர்ச்சியும் வளவளர்ச்சியும் அடையச் செய்வதற்காக மதுரையின் அழிவையடுத்து உடனடியாக வழங்கப்பட்டதாகும். அதாவது, பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்து இந்துக்களுக்குரிய இந்தியாவுக்குள் வந்தார்கள் என்றும்; அப்படி வந்தவர்கள்தான் இந்துநதிக் கரையில்(சிந்து) இருந்த இந்துமதப் பேரரசின் தலைநகரான அருட்பா நகரையும் (அரப்பா → Harappa) மோகம்சிதரு நகரையும் (மொகஞ்சோதரா → Mohanjadaro) முழுமையாக அழித்தொழித்தார்கள். ஏனெனில், தமிழரின் பண்பாட்டுக்கும் நாகரிகத்திற்கும் உயிர்நாடியான இந்துமதத்தையும் தமிழ்மொழியையும் கட்டிக் காத்து வளர்த்தன இந்த இருபெரும் நகரங்கள்தான். அந்த இரண்டையும் அழித்தொழித்தால்தான் பிறமண்ணினரான பிருமணர்கள் இந்துமத இந்தியாவில் நிலையான வாழ்வைப் பெற முடியும் என்று கண்டுகொண்டார்கள். அது மெய்யாயிற்று. அதைப் போலவே இந்தியாவின் தென்பகுதியில் இருக்கின்ற மதுரை மாநகர்தான் இந்துமதத்தையும் தமிழ்மொழியையும் காத்து வருகின்றது என்ற பேருண்மையை அறிந்து அதையும் திட்டமிட்டு அழித்தொழித்தார்கள். அவர்களுடைய அந்த மாபெரும் முயற்சியில் இருந்து மதுரை மாநகரையும், தமிழ்மொழியையும், இந்துமதத்தையும் காப்பாற்றும் முயற்சியில் தோல்வி கண்டார் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரூர். எனவே, அவரால், இந்துமதத்தையும், தமிழ்மொழியையும் வீழ்ச்சி நிலைகளிலிருந்தும், தாழ்ச்சி நிலைகளிலிருந்தும் மீட்சி பெற்று விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் அடையச் செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

அப்படி, அமராவதியாற்றங்கரைக் கருவூரூர் கி.பி. முதலாம் நூற்றுண்டில் தோற்றுவித்த இந்து மறுமலர்ச்சி இயக்கம்தான்; பிருமணர்களால் எரித்துச் சாம்பலாக்கப் பட்ட தமிழ்ச்சங்க இலக்கியங்களில் மிஞ்சினவற்றைத் தொகுத்தும், நாடெங்கும் கிடைத்த கலைப் பொருள்களை நிலவறைகளில் தொகுத்தும், பதினெண் சித்தர்களும் மற்றவர்களும் எழுதிய நூல்களில் பாரம்பரியமாகவும், மறைவாகவும் கற்றுக் கொள்ள ஏற்படுகளைச் செய்தும், தமிழின நல்வாழ்வுக்காகத் தொலைநோக்குப் போக்குடைய திட்டங்களை உருவாக்கிற்று. இதனுடைய சாதனையாகப் பதினேராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் பிற்காலச் சோழப் பேரரசு (கி.பி. 785 - கி.பி.1279) எனும் அருட்பேரரசை உருவாக்கினுர். ஆனுல், அவரும் கருத்துப் புரட்சியை இலக்கிய மறுமலர்ச்சியின் மூலமும், கலை மறுமலர்ச்சியின் மூலமும்தான் செய்திட்டார். அவர் பயன்படுத்திய அந்த மறுமலர்ச்சிப் போரின் வீரவரலாற்றுச் சான்றுகளாகவும், ஊன்றுகளாகவும் இருப்பவைதான் நாலாயிர திவ்வியப் பிரபந்தங்கள் என்ற தொகுப்பும், பன்னிரண்டு திருமுறைகள் எனும் தொகுப்பும், சைவசமயச் சாத்திறங்கள் எனும் தொகுப்பும், எண்ணற்ற இலக்கண நூல்களும் ஆகும். ஆனுல், பிற்காலச் சோழப் பேரரசின் மன்னர்கள் தமிழினப் பண்பாட்டிற்கும்,

நாகரிகத்திற்கும், உரிமை வாழ்வுக்கும் அடிப்படையான அல்லது உயிர்நாடியான தமிழ்மொழியின் தூய்மை நிலைகளையும் இந்துமதத்தின் வாய்மை மிகு மெய்யான நிலைகளையும் போற்றிப் பேணிப் பாதுகாக்காமல் பிறமண்ணினரான பிருமணர்களின் வேட்டைப் பொருளாக்கி விட்டார்கள். எனவே, மீண்டும் இந்தப் பிருமணர்கள் தமிழின நல்வாழ்வுக்குரிய பிற்காலச் சோழப் பேரரசு எனும் அருட்பேரரசை (The Divine Kingdom) அழித்தொழித்தார்கள். அதனால், தமிழர்களும் மொழிப்பற்றோ, இனப்பற்றோ, இனஒற்றுமையுணர்வோ, நாட்டுப்பற்றோ, சமுதாயக் கட்டுக்கோப்போ, தன்னம்பிக்கையோ, தன்மான உணர்வோ, ........ இல்லாத நாடோடிகளாகவும், அடிமைகளாகவும், கூலிக்காரர்களாகவும் மாறிவிட்டார்கள்.

தமிழர்கள், தாங்கள்தான் இம்மண்ணுலகின் மூலவர்கள் என்பதையும், முதல்வர்கள் என்பதையும், அருளுலக வாரிசுகள் என்பதையும் மறந்தும், துறந்தும், மறைத்தும், குறைத்தும், இலம்பாடிகளாக, நாடோடிகளாக, காடோடிகளாக, எடுபிடிகளாக, கூலிக்காரர்களாக வாழுவதை மாற்றியமைத்திடக் கருவூரர் வழிவந்த கண்டப்பக்கோட்டைச் சித்தர் ஏனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை அவர்கள் அரியபெரிய தொடர் முயற்சிகளைச் செய்து கி.பி. முதலாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட அதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை கி.பி. 1772இல் தோற்றுவித்தார். அவர், பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் எழுத்துக் குவியல்களின் அடிப்படையிலேயே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை விளக்கத்தை எழுதினார். ஆனாலும், இ.ம.இ. அவர் காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை அடையவில்லை. அதன் பிறகே, அவருக்குப் பிறகு இ.ம.இ.யின் தலைவராகப் பொறுப்பேற்ற சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை அவர்கள் தம்முடைய ஏட்டறிவுக்கும் பட்டறிவுக்கும் ஏற்ப இ.ம.இ.யின் கொள்கை விளக்கத்தை (Re-conditioning and Modernisation) திருத்தியமைத்தும், புதுமைப்படுத்தியும் வெளியிட்டார்.

பாரம்பரியப்படி இ.ம.இ.யின் இரண்டாவது தலைவராகப் பொறுப்பேற்ற சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை அவர்கள் ஆரம்பக் காலத்தில் ஒரு நாத்திகராக இருந்தவர். எனவே, அவர் இந்துமதம் பற்றியும் தமிழ்மொழி பற்றியும் முறையான முழுமையான ஆராய்ச்சி மூலம் விளக்கினார். அவருடைய ஆராய்ச்சிகள் அனைத்தும் விஞ்ஞானச் சூழ்நிலையிலும் பகுத்தறிவு நோக்கிலும் அமைந்திருந்தன. மேலும், அவர் ஒரு மாபெரும் மார்க்சீயச் சிந்தனையாளராக விளங்கினார். அதாவது, மார்க்சீய உலகில் அவர் இலெனினுக்கும், மாசேதுங்கிற்கும் அடுத்தபடியாக மதிக்கப்பட்டார். எனவேதான் அவர், தமது காலத்திய சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய நிகழ்ச்சிகளையும், கருத்து வளர்ச்சிகளையும் மார்க்சீயக் கண்ணோட்டத்தில் முழுமையாக விமரிசனம் செய்து எண்ணற்ற நூல்களை எழுதிக் குவித்துள்ளார். மேலும், இவர்தான் ஏட்டுச் சுவடிகளிலிருந்தும், செப்புப் பட்டயங்களிலிருந்தும், நாட்டு நடப்பில் செவிவழிச் செய்திகளாக இருந்தவைகளிலிருந்தும் இந்துமத மறுமலர்ச்சிக்குத் தேவையாஅன கருத்துக்களையும், செய்திகளையும் பெருமளவில் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் தயாரித்திட்டார். அத்துடன் தமது எட்டாவது மகன் பதினெண்சித்தர்களின் குறிப்புப்படி பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் தோன்றியிருக்கிறார் என்பதைக் கண்டறிந்து அவரை முழுக்க முழுக்க அருளாளராகவே தயாரித்தார். குறிப்பாகக் கூற வேண்டுமென்றால் இவர் ஒரு நாத்திகராக இருந்தும் தமது மகனை அருளுலக வேந்தராக, அரசயோகியாக முழுமையாக உருவாக்கினார். இருந்த போதிலும் இவர், “இந்துமத மறுமலர்ச்சிக்கும் வளவளர்ச்சிக்கும் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள அனைத்தையும் அச்சிட்டு வெளியிட்ட பிறகே நடைமுறைத் தேவைகளுக்கேற்ப புதிய சிந்தனைகளை வெளியிட வேண்டும்” என்ற ஆணையை வழங்கியுள்ளார். அதன்படிதான் இ.ம.இ.யின் முதல் தலைவரும் இரண்டாவது தலைவரும் வழங்கியுள்ள கருத்துக்களே இன்று இ.ம.இ.யின் கொள்கை விளக்கமாக வெளியிடப்படுகின்றன.

இன்றைக்கு இ.ம.இ.யின் தலைவராக விளங்கும் அருளாட்சி நாயகம், அரசயோகி, இந்துமதத்தந்தை, ஞாஞச்சாரியார், குருதேவர், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் தமது தந்தையாரின் ஆணைப்படியே இளைஞர்களிடம் இ.ம.இ.யின் பணிகளை ஒப்படைத்து உள்ளார். அதன்படிதான் இளைஞுனை நான் இந்தக் கொள்கை விளக்கத்திற்கு இ.ம.இ.யின் இளைஞரணியின் சார்பாக இந்த அணிந்துரையை வழங்குகிறேன். தமிழினத்து இளைஞர்கள் உலக இளைஞர் சமுதாயத்தின் தலைமைச் சத்திகளாக செயல்பட இதன் மூலம் அழைப்பு விடுக்கிறேன்.

---

# முடிவுரை

**ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்**

இந்தக் கொள்கை விளக்கம்; **'அவசர அவசியமாகத் தமிழகத்திற்கு அல்லது தமிழினத்திற்குத் தேவை கருத்துப் புரட்சியே தவிர வேறொன்றுமில்லை'** -- என்ற மாபெரும் தத்துவத்தையே விளக்குகின்றது. ஏனெனில், இந்திய விடுதலைக்குப் பிறகு நிகழ்ந்திட்ட அனைத்து விதமான போராட்டங்களும் தமிழகத்தைப் பொறுத்தவரை அல்லது தமிழினத்தைப் பொறுத்தவரை மாபெரும் தோல்வியையே தழுவியிருக்கின்றன. இதற்குக் காரணம், தமிழர்களுக்கிடையே இனத்தாலோ, மொழியாலோ, மதத்தாலோ, நாட்டாலோ, ........ ஒற்றுமையையும், பற்றையும், பாசத்தையும் உருவாக்கும் முயற்சி முறையாகத் தோற்றுவிக்கப்படவில்லை, தோற்றுவிக்கப்படவில்லை, தோற்றுவிக்கப்படவில்லை, தோற்றுவிக்கப்படவேயில்லை. அதாவது, கணிசமான அளவு தமிழர்கள் மதத்தின் பெயராலும், மொழியின் பெயராலும், கட்சிகளின் பெயராலும், முரண்பாடு மிக்க பல பிரிவினர்களாகப் பிரிந்து கிடக்கின்றுர்கள். இந்தப் பிரிவினர்கள் தங்களை அறியாமல் தங்களின் தாய்மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் எதிரிகளாகவும், விரோதிகளாகவும் செயல்பட்டிட நேரிட்டுவிட்டது. எனவேதான், இந்தக் கொள்கை விளக்கம் முதலில் தமிழர்களுக்குத் தாய்மொழி உணர்வு, இனவுணர்வு, நாட்டுணர்வு, ....... முதலியவற்றை முறையாகவும், நிறையாகவும் வளர்ந்திட வெளியிடப்படுகிறது.

அதாவது, எல்லா மதங்களையும், மொழிகளையும், கட்சிகளையும் சேர்ந்த தமிழர்கள் அவர்களது தாயகத்தைக் காக்க வேண்டிய கடமையை உணருமாறு செய்திடும் ஆற்றல் உடையதே இந்தக் கொள்கை விளக்கம். எனவே, இந்தக் கொள்கை விளக்கத்தின் மூலம் தமிழகத்துள்ளும் வெளிமாநிலங்களுள்ளும் வெளிநாடுகளுள்ளும் வாழும் தமிழர்கள் ஆய்வு மையம் (Study Circle), வாசகர் வட்டம் (Readers Forum), பண்பாட்டு வளர்ச்சிக் கழகம் (Cultural Development Board), இலக்கியக் கழகம் (Literary Association), தத்துவ சபை (Philosophical Society), இந்துமதத் திருச்சபை (The Indu Missionary), சித்தர் பகுத்தறிவு இயக்கம் (The Siddha Rationalistic Movement), தமிழின மறுமலர்ச்சி இயக்கம் (The Tamils' Renaissance Movement), ....... என்று பல நிறுவனங்களை உருவாக்கிச் செயல்படச் செய்திடும் அரிய பயன்மிகு செயல்நிலைகள் உருவாகிடும்.

இன்றைய நிலையில், இதுகாறும் வளர்ந்து வந்திருக்கும் சமய நிறுவனங்கள், சமுதாய நிறுவனங்கள், அரசியல் நிறுவனங்கள் எனும் மூன்றும் தங்கள் தங்களின் எல்லைகளைத் தெளிவாக வரையறை செய்து கொள்ளாமல்; ஒன்றோடொன்று முட்டி, மோதிக் கட்டிப் புரண்டு பயனற்ற இழிவும் அழிவும் உடைய செயல்நிலைகளைத்தான் வளர்த்து வந்திருக்கின்றன என்ற பேருண்மை விளக்கமாகத் தெரிகின்றது. எனவேதான், இந்தக் கொள்கை விளக்கம் மேற்குறித்த மூன்று வகையான நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கும் மாபெரும் பணிக்காகவே வெளியிடப்படுகிறது.

பதினெண் சித்தர் பீடாதிபதிகளும், மற்ற 48 வகைச் சித்தர்களும் வெளியிட்டுள்ள நூல்களை ஊன்றிப் படிக்கும் அக்கறையும் ஆர்வமும் உருவாக்கப்பட்டிடல் வேண்டும். அப்பொழுதுதான், ஒத்த கருத்துடைய தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையோடும், பற்றோடும், பாசத்தோடும் ஒருங்கிணைந்து செயல்படும் நிலை உருவாகிடும். இதற்கு உதவக் கூடிய ஆழ்ந்த ஞானத்தைத் தரக் கூடியதுதான் இந்தக் கொள்கை விளக்கம்.

பொழுதுபோக்குக்காகவும் வயிற்றுப் பிழைப்புக்காகவும் தமிழிலக்கியங்களை கற்பவர்களையும், கற்பிப்பவர்களையும் கடந்து தமிழிலக்கியங்களை ஆழ்ந்து பயின்று அதன் போதனைகளை வகைப்படுத்தியும், வரிசைப்படுத்தி[யும்] பெருவாரியான பொதுமக்களுக்கு வழங்கக் கூடியவர்களை உருவாக்குவதுதான் இந்தக் கொள்கை விளக்கத்தின் நோக்கம். **இதற்கு சுதந்தரமான தமிழ்ப்பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கம்** (கட்சி அல்லது கழகம் அல்லது சங்கம் அல்லது சபை அல்லது மன்றம்.......) **ஒன்று உடனடியாகத் தேவை, தேவை, தேவை.** அத்தகையதோர் இயக்கம் அமைக்கும் கொள்கையைத்தான் இங்கு முன் வைக்கின்றுர், குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூருர். **ஆனுல், இவருக்கு முன் இ.ம.இ.யின் தலைவர்களாக இருந்த இருவரும் தமிழகத் தலைவர்களின் தத்துவ நோக்குகளையும் சித்தாந்தப் போக்குகளையும் எல்லாக் கோணங்களிலிருந்தும் கண்டன விமர்சனத்திற்கு உள்ளாக்கியிருக்கிருர்கள் இக்கொள்கை விளக்கத்தில். எனவே, அனைவரும் இக்கொள்கை விளக்கத்தை நடுநிலையிலிருந்து உண்மை காணும் ஆர்வத்தோடு படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.**

இந்தக் கொள்கை விளக்கம் **'இ.ம.இ.தான் தமிழினத்தின் மெய்யான பாதுகாப்பு இயக்கம்'** என்ற பேருண்மையை வெட்ட வெளிச்சமாக விளக்குகின்றது. ஏனெனில், ஏறத்தாழ தமிழகத்திலுள்ள பெரும்பாலான அனைத்துத் துறை நிறுவனங்களும் தமிழ் இன, நல விரோதப் போக்கையும், துரோகப் போக்கையுமே பெற்று விட்டன எனக் கருத வேண்டியிருக்கிறது. எனவே, இக் கொள்கை விளக்கத்தின் மூலமாவது மெய்யான தமிழ் இனநல நாட்டமுடைய இளைஞர்கள் சுறுசுறுப்பாக முயன்று புதியபுதிய வலுவான கட்டமைப்புக்களையும், நல்ல சட்டதிட்டங்களையும் உடைய நிறுவனங்களைத் தோற்றுவித்துப் புத்தகங்களை வெளியிட்டும்; ஆங்காங்கு கல்விச்சாலைகளை நிறுவியும்; விரிவுரைகளையும், கலைநிகழ்ச்சிகளையும் நிகழ்த்தியும்; தமிழ் மொழி இனப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்காகப் பாடுபடும் பொற்காலம் உருவாகிடட்டும்.

இந்தக் கொள்கை விளக்கம், இ.ம.இ. பற்றிய எந்த அறிமுக அறிவும் அல்லது ஆரம்ப அறிவும் இல்லாதவரைக் கூட இ.ம.இ.யைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளச் செய்யும் ஆற்றல் உடையதாகும். எனவே, இ.ம.இ.யின் தன்னிகரில்லாத் தன்னேரில்லாத் தலைவரின் பின்னுல் தமிழின இளைஞர் கூட்டம் கட்டுப் பாட்டுடன் காட்டாறு போலச் செயல்பட ஒன்று திரளுமாறு செய்யும் பேராற்றல் இந்தக் கொள்கை விளக்கத்திற்கு உண்டு, உண்டு, உண்டு --- என்ற கருத்தையே முடிவுரையாக வழங்குகின்றோம்.

மெய்ஞ்ஞானக் கொடி படம்



# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# கொள்கை விளக்கம்

## முன்னுரை

வழக்கமாக எல்லா நூல்களுக்கும் அந்நூலின் ஆசிரியர் அல்லது ஆசிரியருக்கு அறிமுகமானவர் அல்லது பதிப்பகத்தார் ‘முன்னுரை’ எழுதுவர். ஆனால், இங்கே, முன்னுரை எழுதுவதற்குப் பதில், காலஞ்சென்ற எனது தந்தையும், இருபதாம் நூற்றாண்டில் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் இணையில்லாத இரண்டாவது தலைவராகச் செயலாற்றியவருமான சித்தர் காக்கையர் [காகபுசுண்டர்] ம. பழனிச்சாமி அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சில வாசகங்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்தளிக்கப் படுகிறது.

மகாஞானியும், உலக மார்க்சீயச் சித்தாந்த மாமேதையும், உலகப் பகுத்தறிவு இயக்கச் சிற்பிகளுள் ஒருவரும், மிகப் பெரிய சீர்திருத்தவாதியும், அரசியல் புரட்சித் தத்துவப் பேரறிஞரும், உலகப் பொதுவுடமை இயக்க அமைப்பாளர்களுள் ஒருவரும், தெலுங்கானாப் புரட்சியின் தனிப்பெரும் வெற்றி வீரரும், இந்தியத் துணைக்கண்டச் சமய சமுதாய அரசியல் மலர்ச்சிகளுக்கும் மறுமலர்ச்சிகளுக்கும் வித்திட்ட செயல் வீரருமான சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமி அவர்கள் எண்ணற்ற முயற்சிகளை இமயமெனச் செய்து இந்தியரின் பக்குவமின்மையால் தோற்று இலைமறை காயாக வாழ்ந்தவர். மிகப் பெரிய இரு பொதுவுடமை வல்லரசுகளும் போற்றி மதிக்கும் மார்க்சீயச் சிந்தனையாளன்; ‘இந்தியாவில் மார்க்சீய மரணம்’ என்ற கருத்தோட்டத்தில் எண்ணியும் பேசியும், எழுதியும் செயல்பட்டதால் பொது வாழ்விலிருந்து எளிதில் விலகித் தன்னையோர் ஆன்மீகவாதியாக்கி இந்து மறுமலர்ச்சி இயக்கத்துக்கும், உலக மத ஆய்வுக் குழுவுக்கும் மட்டுமே உரியவராக்கிக் கொண்டு அரிய, பெரிய, பணிகளைச் சீரிய முறையில் ஆற்றிச் சென்றிட்டார். இவர், இந்திய அரசியல் வானில் பகற்காலத்து நிலாவாக வாழ்ந்த திரு எம்.என். ராய் அவர்களின் இணைபிரியா நண்பராக இருந்திட்டதால், இவருடைய எண்ணங்களும், எழுத்துக்களும் உலக வரலாற்றுச் சிறப்புக்கும், முதன்மைக்கும், கணிப்புக்கும் உரியவை.

“....... பல்வேறு காரணங்களால் சித்தர் ஏளனம்பட்டியார் ‘பத்தி இயக்கம்’ * [*A Religious party; a party of the devotees and the pious people.] ஒன்றை உருவாக்கினார். ஆனால், அதைப் பாரத நாடு முழுவதும் வெளிப்படையாக வளர்க்கும் முயற்சியில் ஈடுபடவில்லை இவர், இவர், சித்தர்களின் நெறிதான் ‘இந்துமதம்’ என்ற பெயரில் வாழுகிறது என்பதை மிகத் தெளிவாகப் பேச்சிலும், எழுத்திலும், செயலிலும் வெளியிடே வந்திட்டார். இவர், அடிக்கடி, ......பார்ப்பனர்கள், ‘ஹிந்து மதம்’ என்று எழுதுவது தவறு. அப்படியொரு புதிய சொல்லை உண்டாக்கிச் சித்தர்களின் மதத்தைத் தங்களுக்கு உரியதாக ஆக்கிக் கொள்ள முயற்சிக்கிறார்கள். இது, தற்கொலைக்குச் சமமாகும். தண்ணீருக்குள் மூழ்குபவன் தன்னைக் காப்பாற்ற வருபவர்களையும் நீருக்குள் அழுத்திக் கொலை செய்வதைப் போன்றதே! ......... பொருளற்ற ஆரியச் சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளால் இந்தியாவின் பூர்வீக மதமான சித்தர் நெறியும், பொருளற்றதாக ஆக்கப்படுவது நல்லதல்ல! அதற்காகத்தான், தனிமனிதர்களை அருளாளர்களாக மாற்றுவதும், வழிபடுநிலையங்களைப் புத்துயிர்ப்புச் செய்வதும் சித்தர் நெறிப்படி செயலாக்கப்படுகின்றன ....... என்று தமது கருத்தை வெளியிடுகிறார். -- இது

சரிதான், முறைதான், தேவைதான். ஏனெனில், இந்திய மக்கள் பார்ப்பனர் மீதும், சமசுக்கிருத மொழி மீதும் உள்ள வெறுப்பைத் தவருக இந்து மதத்தின் மீது செலுத்திகிருர்கள். இதஞல், இந்துக்களே இந்து மதத்தை மறுக்கவும், வெறுக்கவும், பகைக்கவும், நகைக்கவும், பழிக்கவும், அழிக்கவும், ...... முற்படும் நிலே வளர்ந்திட்டது. இந்நிலேகளே மதமாற்றத்திற்கும் காரணம். எனவே, ‘பார்ப்பனர்’, ‘ஆரியர்’, ‘சமசுக்கிருதம்’, ‘வேதநெறி’, ‘வர்ஞச்சிரமம்’, ‘சஞதன தர்மம்’, ....... முதலியவை இந்தியாவில் தோன்றுமுன் தோன்றியதே சித்தர் நெறி. அதுவே, இமயம் முதல் குமரி வரை உள்ள மக்களின் மதம். அம்மதம் படைத்ததே எல்லாவகையான வழிபடு நிலேயங்கள், மதப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கொள்கைகள், கோட்பாடுகள், சாத்திரச் சம்பிறதாயங்கள்,...... இவை, வெளிநாட்டார் பாரதநாட்டை [‘சிந்து நதி நாடு = சிந்தியா → இந்தியா’] ‘இந்தியா’ என்று அழைத்தபோதே; இந்தியாவின் மதம் ‘இந்துமதம்’ என்ற பெயரைப் பெற்றது. எனவே, யாரும், ‘இந்து மத மறுமலர்ச்சி’ என்ற சொல்லால் ‘பார்ப்பன வக்காளத்து’, ‘ஆரிய ஆதிக்கம்’, ‘சஞதன தருமப் புதுவாழ்வு’, ‘சாதி ஏற்றத்தாழ்வு வலுப்படல்’, ‘தீண்டாமைக் கொடுமை வரவேற்பு’, ‘புராண இதிகாசப் புளுகளுக்குப் புகழாரம்’, ............ என்றெல்லாம் எண்ண வேண்டாம்.

‘இந்து மதம்’ குமரிக்கண்டத்தில்* [The Lost Lemuria Continent] பதினெண் சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் மானுட நல உரிமை வளத்துக்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றே. இது, சித்தர்களின் ‘சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ அமைக்கவும் -- இயங்கவும் வழி செய்கிறது. இது, தமிழர்களின் மதம்; இது, திராவிடர்களின் மதம்; இது, இந்தியர்களின் மதம். எனவே, இந்தியர்களின் மதமான சித்தர்நெறி மீண்டும் மலர்ந்திட்டால்தான் சமுதாய அரசியல் வறுமைகளும், வெறுமைகளும், தேக்கங்களும், ஏக்கங்களும், ஏமாற்றங்களும், குறைகளும், சிக்கல்களும் முழுமையாக அகற்றப்பட்டிடும். இதஞல், இன்றைய இந்துமதம் [ஆரியக் கலப்பற்ற சித்தர்நெறி] பெற்றுள்ள கற்பனேகள், மடமைகள், மூடநம்பிக்கைகள், பயனற்ற சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகள், புராண இதிகாசப் பொய்மைகள், சாதிக்கொரு நீதி கூறும் கொடுமைகள் ..... முதலியன அனேத்தும் முழுமையாக அழித்தொழிக்கப்படும்.

இந்து மதம், ஒரு ‘சமூக விஞ்ஞானம்’, ‘ஒரு புரட்சி மிகு சமுதாயச் சீர்திருத்தக் கொள்கை’, ‘ஒரு மாபெரும் பொதுவுடமைத் தத்துவம்’, ‘ஒரு சீரிய சமத்துவச் சகோதரத்தத்துவச் செயல்திட்டம்’, ‘ஒரு பகுத்தறிவுச் சித்தாந்தம்’, ‘ஓர் அகில உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டு இயக்கம்’, ‘ஓர் உலகச் சமாதான இயக்கம்’, ‘ஒரு மானுட நல முன்னேற்ற இயக்கம்’, ........ என்ற பேருண்மைகளேப் புரியவும், புரிய வைக்கவும் [இந்துக்களே] இந்தியர்களேத் தயாரிப்பதே இந்து மறுமலர்ச்சி இயக்கம். இதனேத் தனித்தமிழால், உயர்ந்த செந்தமிழால், வளமிகு வண்டமிழால், கொழுமைநிறை பைந்தமிழால், ...... செயலாக்கத் தமிழர்கள் முன்வர வேண்டும். தமிழ் மொழியின் செழிச்சியே தமிழின விழிச்சியையும், எழிச்சியையும் விளேவிக்கும். தமிழர்கள் கிளர்ச்சி பெற்ருல்தான் இந்தியாவில் சமய, சமுதாய அரசியல் இயக்கங்கள் உண்மையான வளர்ச்சியைப் பெற முடியும். எனவே, ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ உடனடியாகத் தமிழகத்தில் முழுமையாக வளர்ந்து செயலாக்கம் பெற்றிடல் வேண்டும். அதன் பிறகே, இந்தியாவில் சமய, சமுதாய, அரசியல் கேடுகளும், கொடுமைகளும் அகற்றும் பணி அணி பெறும். யாரும் தவருகக் கூட இந்து மறுமலர்ச்சி இயக்கம் மத மடமைகளே! மத மூடத்தனங்களே! மதக் கற்பனேகளே! மதவெறிகளே!, மதக் கடமைகளே!, மதக் கொடுமைகளே! மதச் சுரண்டல்களே! மத ஏமாற்றுக்களே! மத முதலாளிகளே! ...... ஆதரிக்கக் கூடிய ஓர் அமைப்பு என்று எண்ணிடவே கூடாது. இந்த இயக்கம் முழுக்க முழுக்க ஒரு பகுத்தறிவுப் பாசறை, சிந்தனேப் பயிற்சி மன்றம், சீர்திருத்த உலேக்களம், புதுமை பூத்துக் குலுங்கும் பூங்கா, புரட்சிக் கருவூலம், ..... என்ற பேருண்மையினே அனேவரும் உணர்ந்து ஒப்புக் கொண்டு செயல்படல் வேண்டும்.... ...”

இந்த வாசகங்களோடு இம்முன்னுரையை நிறைவு செய்கின்றேன். 'வளர்க தமிழ்!', 'வெல்க தமிழினம்!', 'செழுமை பெறுக இந்தியம்!'

ஓம் திருச்சிற்றம்பலம்

**அன்பு 'ஞாலகுரு' சித்தர் கருவூரார்**

---

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்
## [கொள்கை விளக்கம்]

சித்தர் நெறியில் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கும் இன்றைய இந்து மதத்தின் தத்துவங்களும், சமுதாய வாழ்வியல் நடைமுறைகளும் சித்தர் நெறிப்படி விளக்கப் படுவதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை விளக்கம்.

இந்து மதத்தில் உள்ள பயனற்ற, தேவையற்ற, மடமையான, கற்பனையான, கருத்துக்களையும், செய்திகளையும் நீக்குவதே இக்கொள்கை விளக்க நோக்கம்.

சித்தர்கள் படைத்த சமூக விஞ்ஞானமே **‘இந்து மதம்’** என்று வளர்ச்சி-யடைந்துள்ளது. விஞ்ஞானக் கண்டுபிடிப்பு கூறும் கொள்கைகளும், கருவிகளும் உலகம் முழுவதும் பயன்படுவது போலச் ‘சித்தர் அறிவியல்’ [இந்து மதம்] உலகம் முழுவதும் பயன்படும்.

‘சுரண்டலற்ற சமுதாயம்’, ‘முதலாளித்துவம் இல்லாத சமுதாயம்’, ‘தனிமனித எதேச்சாதிகாரம் இல்லாத சமுதாயம்’, ‘சர்வாதிகாரமற்ற சமுதாயம்’, ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம்’, ‘சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’, ....... என்று சித்தர்களின் **‘கொள்கையும் குறிக்கோளும்’** அவர்களுடைய நூல்களில் மிகத் தெளிவான **‘கருத்து விளக்க வாசகங்களில்’** குறிக்கப்பட்டிருப்பதை இங்கு நினைவு படுத்துகிறோம்.

இந்து மறுமலர்ச்சி இயக்கம் எந்த ஒரு குறுகிய நோக்கத்தையும், வெறியையும் கொண்டது அல்ல. இது சமுதாயப் பொருளாதாரப் பண்பாட்டு அடிப்படையில் ஒருங்கிணைந்த இன்றமிழ் நாட்டை ‘உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக்கு’ வித்தாக, நாற்றங்காலாக, முன்மாதிரியாக எடுத்துக் கொண்டுள்ளது.

### இனம்:

“.......... மிகத் தொன்மையான வரலாற்றுக்கு முந்திய பழங்காலத்திலேயே தமிழினம் நல்ல நாகரீகத்தை, பக்குவத்தை, முதிர்ச்சியை எல்லா அறிவியல்களிலும் கலைகளிலும் அடைந்திருந்தது. இருந்தாலும், **இந்த இனம், உலகெங்கும் தனக்குக் கட்டுப்பட்ட அடிமைகளை, அடிமை நாடுகளை உருவாக்க முயலவில்லை.** இப்படிக் கூறுவது சாதாரணக் கருத்தல்ல. இக்கொள்கையை, உலக நாடுகளுக்கிடையில் மிகத் தொன்மைக் காலத்திலிருந்து நிகழ்த்தி வரும் ஒரே இனம் தமிழினம்தான்.

தமிழர்கள் வளர்த்திருந்த ஆட்சிக் கலையும், அரசியல் முறையும், மிகமிகத் திட்டவட்டமாக வரையறை செய்யப்பட்டவை, தெளிவானவை, நுட்பமானவை, பேராற்றல் மிக்கவை, திட்பமானவை, ஒட்பம் மிக்கவை, செயலுக்குரியவை, என்றென்றும் உயிரோடும் இயக்கத்தோடும் இருக்கும் இறவாத்தன்மை பெற்றவை.

இவற்றிற்கும் மேலாகச் சிறப்பாகக் குறிக்கத் தக்க செய்தியொன்றுண்டு. தமிழினத்தின் வீரமிக்க பெரும்படை உலகெங்கும் சென்று போரிட்டுப் பல பெரிய வெற்றிகளைப் பெற்றது. ஆனால், தமிழர்களின் பேராற்றல் மிக்க பெரும் படை உலகெங்கும் தமிழ்ப் பண்பாடு, நாகரிகம், கலை, வாணிகம்,...... முதலியவைகளைப் பரப்பும் அமைதிவழிப் பணியையே செய்தது. இதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், தமிழர்களின் படை சித்தர்களின் நெறியை உலகம் முழுவதும்

பரப்பிற்று. அதாவது, பைந்தமிழினப் பெரும்படை ‘உலக சமாதானம்’, ‘ஒற்றுமை’, ‘மகிழ்ச்சி’, ‘உலகச் சகோதரத் தத்துவம்’, ‘உலகச் சமத்துவம்’, ‘உரிமை வாழ்வு’, ‘விடுதலை வாழ்வு’, ‘சுதந்திர வாழ்வு’, ..... முதலியவைகளை உலகெங்கும் செழிப்பாக வளர்ந்தோங்கச் செய்தது. இதை விடுத்து, **‘உலகத் தமிழ்ப் பேரரசை’, ‘உலகத் தமிழினச் சர்வாதிகாரத்தை உருவாக்கத் தமிழினப் படை போரிட்டதே இல்லை.** ஏனெனில், **“நீ அடிமைப்படாதே! பிறரை அடிமைப்படுத்தாதே!”, “நீ யாருக்கும் முதலாளியாகவும் முற்படாதே! அடிமையாகவும் முற்படாதே!”** ‘நீ எல்லோருக்கும் சமமாக வாழ முற்படு; பிறரை உனக்குச் சமமாக நடத்து’ --- என்பனவே சித்தர் நெறியின் சாரம், தத்துவ உயிரோட்டம், சித்தாந்தக் குறிக்கோள், செயல்திட்ட விளக்கம்.

## மதம்:

(1) உலகிலுள்ள எல்லா மதங்களுமே சித்தர்களின் படைப்பு. சித்தர்கள் உருவாக்கிய பழைய கோயில்களையே அனைத்து மதத்தவரும் வணங்குகின்றனர். அதாவது, சித்தர்களின் வழித் தோன்றல்களே உலகின் பல்வேறு பாகங்களில், பல காலங்களில் வெளிப்பட்டு அருளுலக இருளகற்றி அனைத்துக்கும் புத்துயிரூட்டிச் சென்றிட்டனர். எனவே, அவர்கள் சித்தர்களின் படைப்புக்களான வழிபாட்டு நிலையங்களையும், வழிபடு தத்துவங்களையும், செயல்முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு தங்களின் சீர்திருத்தத்தைச் செய்திட்டார்கள். யாரும், புதுக் கோயிலை **மூலக் கோயிலாக** உருவாக்கிப் புதிய மதத்தை உண்டாக்க வில்லை; = **மதச் சீர்திருத்தம் செய்த அருளாளர்களின் பெயரில் புதிய புதிய மதங்கள் பிறந்திருப்பதுதான் உண்மை.** எனவே, **அனைத்துக்கும் ஆதிமதம், தாய்மதம், மூலமதம்,..... சித்தர் மதமே.** அதாவது, உலகிலுள்ள கோயில்கள் எப்படி? ஏன்? எவ்வாறு? -- கட்டப்பட்டன, உருவாக்கப் பட்டன என்ற இரகசியம் சித்தர் நெறியில்தான் பாரம்பரிய விஞ்ஞானமாக உள்ளது. எனவேதான், **‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’** உலகிலுள்ள எல்லா மதக் கோயில்களையும் ‘புதுப்பித்து’, ‘அருள் ஊறச் செய்து’, ‘ஆற்றல் பெறச் செய்து மக்களை நல்வழிப் படுத்தி ஒற்றுமையுடனும், அமைதியுடனும், நட்புடனும் வாழச் செய்வதையே தனது கொள்கையாகவும், குறிக்கோளாகவும் கொண்டிருக்கிறது.

(2) ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ -- என்பது இந்து மதத்துக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. ஏனெனில், **‘இந்து மதம் என்பது இந்தியாவின் மதம்’** என்பதே சித்தர்களின் கருத்து. அதாவது, சித்தர் நெறியே ‘உலக முதல் நெறி’, ‘தாய் நெறி’. எனவே, இதன் செயலாக்கமே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அமைப்பும், கொள்கையும், குறிக்கோளுமாகும்.

(3) உலக மதங்களின் இணைப்புச் செயலாக்கமும் -- உலகில் தோன்றிய எல்லா மத்ங்களும், அது தோன்றுவதற்குக் காரணமான மூலவரை வழிபடல் [Worship of the founder or the prophet or the saint]. என்ற செயல் தத்துவத்தையே பெற்றுள்ளன. இதனை ‘வீர வழிபாடு’ [Hero Worship] அல்லது ‘முன்னோர் வழிபாடு’ [Ancestor’s Worship] என்று கூறலாம். இதுவே, **இந்து மதத்தின் தத்துவம், சித்தாந்தம்.** இதனடிப்படையிலேயே ‘உலக மதங்களின் தோற்றுவாய் அல்லது தாய்மை’ இந்துமதம்தான் என்ற பேருண்மை விளக்கியுரைக்கப் படுகின்றது. இந்த விளக்கம் இந்து மதத்தை மட்டும் உயர்த்தவோ! புகழவோ! வலிமைப்படுத்தவோ! வளப்படுத்தவோ! தரப்பட வில்லை. **“உலக மதங்கள் அனைத்தும் ஒரு தாயின் மக்களே”** என்ற பேருண்மையை நிலைநாட்டி அதன் மூலம் உலக மத ஒற்றுமை, இணைப்பு, பிணைப்பு, நல்லுறவு, நட்பு, தோழமை,......... முதலியவைகளைச் செழித்தோங்கச் செய்வதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கையும் குறிக்கோளுமாகும்.

(4) மதத்தின் பெயரால் போட்டி, பொருமை, சண்டைச் சச்சரவு, தீண்டாமை, மொழிவெறி, இனவெறி, சாதிவெறி, வட்டாரவெறி, நாட்டுவெறி,....... முதலியவை மறைமுகமாகத் தலைவிரித்துப் பேயாட்டம் போடுவதை, வெறியாட்டம் ஆடுவதைத் தடுப்பதே இந்து மறுமலர்ச்சியின் கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம்.

(5) மதத்தின் பெயரால் பணத்தைச் சுரண்டுதல், உறிஞ்சுதல், ஏமாற்றுதல்,......... முதலியவை நேரடியாகத் தடுக்கப்படல் வேண்டும். எந்த ஒரு தனிக் கோயிலையும் முதன்மைப் படுத்தி மற்ற கோயில்களையும், மக்களையும் அடிமைப்படுத்தும் முதலாளித்துவம் கடுமையாகக் கண்டிக்கப்பட்டு உடனடியாகத் தடுக்கப்படல் வேண்டும். இவற்றைத் தடுப்பதற்கான மாற்று ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **ஆங்காங்கே யாக குண்டங்கள் வைத்துக் குறிப்பிடப்படும் அல்லது தேவைப்படும் கடவுள்களை அருவுருவ பீடமாக எழுந்தருளச் செய்து பூசை செய்வது தலையாய மாற்றுத் திட்டம். அந்தந்த ஊரின் எல்லைகளுக்குள்ள எல்லாக் கோயில்களையும் புத்துயிர்ப்புச் செய்து அருள் ஊற்றுக்களாக்கி ஆன்மீகப் பசிகளையும், தாகங்களையும் தீர்ப்பது;** தேவைப்பட்டால் பெரிய பெரிய கோயில்களின் பதிலியாக (Representative) எல்லாக் கோயில்களிலும் பீடங்கள் அமைத்துட் தாந்தரீகத் தகடு வைத்து வாரத்தில் அல்லது மாதத்தில் அல்லது ஆண்டில் சில நாட்கள் பூசைகளும், விழாக்களும் செய்வது --- முதலியனவும் முக்கிய செயல்திட்டங்களாகும்.

இதனுல், (i) குறிப்பிட்ட கோயிலோ, கடவுளோ, முதலாளியாவது தடுக்கப் படுகிறது.

(ii) குறிப்பிட்ட கோயிலுக்குரியவர் சர்வாதிகாரம் செய்வது தடுக்கப்படுகிறது.

(iii) மக்கள் கடன் வாங்கிக் கொண்டும்; இருக்கின்ற சேமிப்பையெல்லாம் செலவழித்துக் கொண்டும் நெடுந்தொலைவில் உள்ள கோயில்களுக்கு செல்வது தடுக்கப் படுகிறது.

(iv) பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் பலகாலம் முயன்று இம்மண்ணுலக மக்களுக்காக நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபாட்டு நிலையங்களைக் கண்டுபிடித்துக் கட்டிய மிகப்பெரிய அருளுலகத் திட்டங்கள் மீண்டும் செயலுக்கு வரும். இதனுல், மதத்தால் முதலாளித்துவம், சர்வாதிகாரம், சுரண்டல், ஏற்றத் தாழ்வு, ஏமாற்று, தனிமனித ஆதிக்கம்,....... முதலியவை அனைத்தும் தடுக்கப்படுகின்றன. **"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** என்ற மூதுரைகளின்படி **'மக்கள் இறைமை அணுக்களைத் தங்களுக்குள் பெற்றுத் தெய்வீக ஆற்றலை** (The Mystical Power) **வளர்த்துக் கொள்ள நிறைய வசதி வாய்ப்புக்கள் உருவாக்கித் தரப்படும்'. - "தெய்வீக சத்தியால் பல அகவாழ்வுக்குரிய வசதி, வாய்ப்பு, வளம், பொலிவு, உரம், மகிழ்வு, நிறைவு, அமைதி முதலியவைகளை உருவாக்கிக் கொள்ளவும் முடியும்". ஏனெனில், பொருள் வசதி மிக்கவர்கள் மேற்கண்ட வசதிகளுக்காக ஏங்கியும் ஏமாந்துமே திரிகின்றுர்கள் என்பதே உலக உண்மை.**

(6) "கோயில்கள்; ஏழைகள், அனுதிகள், அபலைகள், உறுப்பிழந்தோர், உடல் நலிந்தோர், வேலையற்றோர்....... முதலியோரின் காப்பகங்களாக விளங்க வேண்டும்" --- இப்படிப் பட்டவர்கள் தங்களின் நிலைகளை மறந்து சமுதாயத்தின் வளமான, வாளிப்பான, உறுப்புகளாகச் செயல்படும்படி செய்வதுதான் கோயிலை இயக்கும் மதத்தின் தத்துவமாக, மதவாதிகளின் கொள்கையாக இருக்க வேண்டும். இதுவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மதக் காப்பகங்களான கோயில்கள் பற்றிய கொள்கையும் குறிக்கோளும் ஆகும்.

கோயில்களில் உள்ள வரலாற்றுக் கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், ஓலைச்சுவடிகள், சுரங்கங்கள், சுரங்கப் பொருள்கள், கோயில் சாத்திரச் சம்பிரதாயச் சடங்குகள், பூசை முறைகள், ஆகம விதிகள், மீமாம்சை நெறிகள், மறைகள், மரபுகள், வேதச் சட்டங்கள், நடைமுறைகள்,........ முதலியவைகளை முறையாகவும், முழுமையாகவும்

ஆராய வேண்டும். அப்பொழுதுதான், பதினெண் சித்தர்கள் மதத்தைச் சமூக விஞ்ஞானமாகப் [Religion is a Social Science] படைத்ததன் உண்மையான நோக்கம் நிறைவேறும். இதுதான், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தெளிவான கொள்கையும், முடிவான குறிக்கோளும் ஆகும்.

பதினெண் சித்தர்கள் கோயில்களைச் சமூக விஞ்ஞானம் கற்பிக்கும் கல்விச் சாலைகளாகவே [The Temples are the Institutions of the Social Sciences] படைத்தார்கள். அத்துடன் கோயில்களைக் கலைக் கருவூலங்களாக [Museums], உயிரினக் காட்சியகங்களாக [Zoos], ஆவணக் களரிகளாக [Registrar Offices], சமூக நல மன்றங்களாக [Community Halls], கலை அரங்குகளாக [Theatres], மருத்துவ மனைகளாக [Hospitals], வட்டார வளர்ச்சி அலுவலகங்களாக [Block Development Offices],....... பயன்படுத்தினார்கள். அதனால், சமுதாய இயக்கம் நீதி, நேர்மை, உண்மை, கட்டுப்பாடு, ஒழுங்கு, கடமை, கண்ணியம்,......... முதலிய பண்புகளைப் பெற்றிருந்தது. அதனால், மீண்டும் அனைத்து ஆட்சி இயந்திரங்களும் கோயிலைச் சார்ந்தவைகளாகவே அமைக்கப்படல் வேண்டும். இத் தெளிவான, முடிவான கருத்து இந்து மறுமலர்ச்சி இயக்கத்தினுடையது என்று பூரிப்போடும், பெருமையோடும், உரிமையோடும் வலியுறுத்தப் படுகிறது.

(7) "... 'முற்பிறப்பு', 'மறுபிறப்பு', 'விதி', 'ஊழ்',..... முதலியவைகளை உணர்ந்து பக்குவப் பட்டவர்களே பேராசை, ஆணவம், தன்னலம், ஊழல்,...... முதலியவை இல்லாமல் பொதுநலத் தொண்டாற்ற முடியும்" --- என்பதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை.

(8) "...... ஆவி, ஆன்மா, உயிர்,...... பற்றிய உணர்வும், அறிவும் உடையவர்களே சிறந்த அருளாளர்களாக உருவாக அல்லது வளர முடியும்" --- இவர்களே சமுதாயத்தை வழிநடத்தும் தலைவர்களாக இருக்க வேண்டும் --- என்பதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தெளிவான, முடிவான கொள்கை. அதாவது, அருளாட்சியே பொருளுலக இருளையெல்லாம் அகற்றும் (The Divine Rule can alone solve or put an end to all the ills and evils of the material mongering worldly Rule) என்பதே இ.ம.இ.யின் கொள்கை.

## மொழி:

சித்தர்கள் "ஒலிகளையே" (Sounds = Phonemes) தெய்வீக உலகின் இயக்கச் சத்திகளாக (The sounds are the functioning forces or the power or the energy of the Divine mechanism, since the divinity is treated as a science by the Pathinen Siddhars) உருவாக்கியிருக்கிறார்கள். அவர்கள், மனிதர்கள் விலங்குகளைப் போல் வாழ்ந்த காலத்தில் குறிப்பிட்ட ஒலிகளை எழுப்பிப் பூசை செய்யும் முறையையே முதல் கட்டமாக உருவாக்கினார்கள். அதுவே, மந்திரம். இதற்காகவே பல்வேறு வகையான இசைக் கருவிகள் கண்டுபிடிக்கப் பட்டுப் பூசை, வழிபாடு, சடங்கு, புனித நிகழ்ச்சிகள், திருவிழாக்கள், திருநாள்கள்...... முதலியவற்றில் தலையாய, முதன்மையான, சிறப்பான,...... முறையில் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது, இசைக் கருவிகளின் ஒலிகள் 'கடவுள்களை அழைக்கின்றன'; "தெய்வீக அணுக்களை ஒன்று திரட்டி மானுட உடலுக்குள் செலுத்துகின்றன". இதுவே, பூசைமொழி வாசக ஒலிகளின் பயன் என்பதுதான் சித்தர் நெறி.

--- எனவே, உலகில் பூசைக்குப் பயன்படும் எல்லா மொழிவாசகங்களையும் நன்கு முறையாக ஓதச் சொல்லி ஆராய்ந்தால் அவையனைத்தும் ஏறத்தாழ ஒரே மாதிரியாக

இருப்பதைக் காணலாம். இதனுல், **பன்னெடுங்காலத்துக்கு முன் பதினெண் சித்தர்கள் தங்களுடைய விண்ணுலகத் தாய்மொழியான பைந்தமிழிலேயே இப்பரந்து பட்ட உலகெங்கும் இறை வழிபாட்டு ஒலிகளை உருவாக்கிச் செயலாக்கினுர்கள்'** என்ற பேருண்மை தெள்ளத் தெளிவாகிடும். இதனுல், தமிழ் மொழியை உயர்த்துவதாகவோ, பெருமைப் படுத்துவதாகவோ, தலைமைப் படுத்துவதாகவோ, ......... எண்ணி, அவசரப் பட்டு யாரும் **'மொழி ஆதிக்கம்'** உருவாகின்றது என்று சொல்லிவிடக் கூடாது. **இவ்வுலகிலுள்ள எண்ணூறு மொழிகளும் தமிழ்மொழியின் ஒலியடிப்படையில்தான் உருவாக்கப் பட்டன என்பது பதினெண் சித்தர்களின் வரலாற்று உண்மை.**

**இந்த வரலாற்றுப் பேருண்மையின்படி உலகிலுள்ள எல்லா மொழிகளுமே மதமொழியாக, சமய மொழியாக** [Religious Language], **பூசைமொழியாக** [Language of Prayer or Worship], **புனிதமொழியாக** [Sacred Language], **தேவமொழியாக** [Divine Language], **கடவுள் மொழியாக, இறை மொழியாக, தெய்வீக மொழியாக, ஆண்டவர் மொழியாகச்** [Holy Language] **செயல்படும் தகுதிச் சமத்துவமும் ஆற்றலும் பெற்றுள்ளன என்ற விஞ்ஞான உண்மை நிலைநாட்டப்படுகின்றது.** இதனுல் மொழிப்பகை, மொழிச்சண்டை, மொழிப்போர், மொழிச் சுரண்டல், மொழி ஆதிக்கம், மொழி வெறி, மொழிச் சர்வாதிகாரம், மொழி அடிமை,....... முதலிய நிலைகளும், நிகழ்ச்சிகளும், முயற்சிகளும் **முழுமையாகத் தடுக்கப்படுகின்றன, தவிர்க்கப்படுகின்றன.** இதுவே, இ.ம.இ.யின் தன்னிகரற்ற, பயன்மிக்க, பெருந்தன்மையான, சிறந்த கொள்கையும், குறிக்கோளுமாகும்.

## கல்வி, கலை, மருத்துவம்:

பொது மக்களுக்குத் தொண்டு புரியவும், வழிகாட்டவும், பயன்படக் கூடிய மாபெரும் சாதனங்களே கல்வி, கலை, மருத்துவம் எனப்படும் முத்துறைகள் [மூன்று மூத்த துறைகள்]. இந்த மூன்று பெரும் வழிகாட்டும் சாதனங்கள்தான் மிகச் சிறந்த வலிமையான ஆக்கச் சத்திகள். இவற்றின் மூலம்தான் தனிமனித ஒழுகலாறும் [நன்னடத்தை], சமுதாயப் பண்பாடும் மேம்பட்ட செம்மை நிலையை அடையச் செய்ய முடியும்.

**எந்தச் சமுதாய விதியும், கட்டுப்பாடும், அரசியல் சட்டமும் மேற்கூறிய கல்வி, கலை, மருத்துவம் என்கின்ற முச்சாதனங்களின் அடிப்படையில்தான் உருவாக வேண்டும். ஏனென்ருல் மேலே குறிப்பிட்ட மூன்றும் அருள்மிக்கவையாக, புனிதமானவையாக, தெய்வீகத் தன்மையுடையனவாகக் கருதப்படுகின்றன. எனவே, எந்த ஒரு சூழ்நிலையாலும், தேவையாலும் மேலே குறிப்பிடப்படுபவை பணம் சம்பாதிப்பதற்குரிய தொழில்களாகக் கருதப்பட்டு விடக் கூடாது.** அதாவது, பரந்த மனம் நிறைந்த பெருந்தன்மை மிக்க, பெரிய மனிதத் தன்மையோடு கூடிய தொண்டாற்றும் ஆர்வமுடையவர்களே மேற்படித் தொழில்களில் ஈடுபட, உயர, சிறக்க, வளர அநுமதிக்கப்படல் வேண்டும். அதாவது, மேற்கூறிய துறைகளைச் சேர்ந்தவர்கள் உலகியலின் இன்பவெறி, எதிர்பார்ப்புகள், பேராசைகள், இச்சைகள், ஏக்கங்கள்,....... முதலிய தீய சத்திகளால் பாதிக்கப்பட்டு விடாமல் பாதுகாக்க வேண்டும், இப்படிக் கூறுவடன் பொருள், மேற்கூறிய துறைகளைச் சேர்ந்தவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்படல் வேண்டும். அவர்கள் மற்ற கவலைகாஅல் ஆசைகளால் திசை திரும்பித் தொண்டு புரிவது கெட்டு விடக் கூடாது. ஏனென்ருல், மேலே கூறிய மூன்று துறையினரும் தன்னிறைவும், அடக்கமும், பொறுப்பும் உடைய அமைதியான வாழ்க்கை வாழாவிட்டால்; சமுதாயத்தைக் கடுமையாக அழிக்கக் கூடிய **மிக நுண்ணிய நோய்ப் பூச்சிகளாக** (Virus) மாறிவிடுவார்கள். பிறகு இவர்களிடமிருந்து சமுதாயத்தைக் காப்பாற்றவே முடியாது. அதாவது, சமுதாயத்துக்கு நலமளிக்க வேண்டிய இவர்கள் நலிவையும், மெலிவையும்,

கொடிய நோய்களையும் அளிப்பவர்களாகவும், பரப்புபவர்களாகவும் ஆகிவிடுவார்கள். எனவே, ஆளுபவர்கள் எப்போதுமே மேற்கூறிய மூன்று துறையினரையும் **கண்காணித்துப் போற்றிப் பேணி வளர்க்க வேண்டும்.** மேற்கூறிய மூன்று துறையினரிடமும் 'பணம் சம்பாதிக்கும் நோக்கமும், மென்மையான, உண்மையான தொண்டு மனம் பாதிக்கப்பட்ட வெறிப்போக்கும் முளைவிடுமேயானால்' உடனேயே அவற்றை முழுமையாக **அகற்றியேயாக வேண்டும்.**

ஒரு பொதுவுடமைச் சமத்துவக் கூட்டுறவு அரசுக்கு மேற்கூறிய மூவரும் 'சமுதாயத் தலைமை', 'வழிநடத்தல்', 'புகழ்',........ முதலியவற்றிற்கு ஆசைப்படாமல் அடக்கவொடுக்கமாகச் செயல்படும் வண்ணம் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அதிகம், அதிகம், அதிகம்.

மேற்கூறிய கருத்துக்களை நினைவுகூர்ந்துதான் **பதினெண் சித்தர்கள் கல்வி, கலை, மருத்துவம் எனும் மூன்றையும் பரம்பரைத் தொழில்களாக வாழ, வளர ஏற்பாடுகள் செய்திட்டார்கள். இதுதான் சித்தர் நெறியின் மூலத் தத்துவமும், சித்தாந்தமும் ஆகும்,**

எதிர்பாராதவிதமாகச் சித்தர்களின் மேற்கூறிய மூன்றையும் பற்றிய தத்துவமும், சித்தாந்தமும் காலப் போக்கில் மறக்கப்படவும், மறுக்கப்படவும் நேரிட்டு விட்டன. எனவே, **கல்வியாளர்கள்** (கல்வியாளர்கள் -- என்ற சொல், பெரிய பெரிய கல்வி நிறுவனங்களைத் தொழிற்சாலைகளைப் போல நடத்திக் கொள்ளையடிப்பவர்களையே குறிக்கும்; கல்வித் துறையின் பாட்டாளிகளான ஆசிரியர்களைக் குறிக்கவே குறிக்காது. - Teachers are labourers of the Educational Institutions, say the Industries or Factories of Education) கலைஞர்கள், மருத்துவர்கள் மிகத் துணிந்து பகற்கொள்ளையை விடக் கேவலமாக மக்களைச் சுரண்டி, உறிஞ்சி, ஏமாற்றி, எத்துவேலைகள் செய்து....... எல்லாவிதமான ஒழுக்கக் கேடுகளையும், தவறுகளையும், முறைகேடுகளையும் வளர்த்து இவற்றின் மூலம் ஆடம்பரமான, அதிகாரமான, அட்டகாச வாழ்வு வாழ்கின்றனர். அதாவது, அரசியல்வாதிகளே கல்வி நிலையத்தார்கள், கலைஞர்கள், மருத்துவர்கள்......... முதலியவர்களிடம் அஞ்சியும், கெஞ்சியும் வாழவேண்டிய எதேச்சாதிகார, ஆணவ, **முதலாளி**த்துவ வாழ்க்கையே மேற்கூறிய மூன்று துறையினரிடமும் காணப்படுகிறது. அரசியல்வாதிகள் இம்மூன்று துறையினரின் அடிமைகளாக, ஆதரவாளர்களாக, விசிறிகளாக வாழும் மிகக் கேவலமான, கீழ்த்தரமான இழிநிலைகள் இந்நாட்டில் வளர்ந்து விட்டன. இவற்றைக் கண்டிக்கவோ! தண்டிக்கவோ! தைரியமும் கொள்கைப் பிடிப்பும், குறிக்கோள் உறுதியும் மதவாதிகளைத் தவிர, வேறு யாருக்கும் இத்திரு நாட்டில் ஏற்படவே முடியாது! முடியாது! முடியாது! முடியாது!....... முடியவே முடியாது!

அதாவது, இவற்றையெல்லாம் முறையாகவும், முழுமையாகவும் எண்ணிப் பார்த்திட்டால்; இந்த இந்தியாவைக் காப்பாற்றுகின்ற தரம், திரம், திறம், உரம், மறம், அறம், வீரம்,...... 'மதவழிப் புரட்சி' ஒன்றுக்குத்தான் உண்டு' -- என்ற பேருண்மை திட்டவட்டமாகப் புரிந்திடும். இதனை, நேர்மையான உள்ளமுடைய அனைவரும் ஒப்புக் கொண்டே தீருவார்கள். எனவே, இந்திய மக்களையும், அரசையும் பாதுகாக்க மதவழிப் புரட்சியே சிறந்த சாதனம். இச்சாதனம் முறையாகச் செயல்பட்டு நிறைந்த வெற்றியினைப் பெற வேண்டுமேயானால்; சித்தர் நெறி மறுமலர்ச்சி பெற்றேயாக வேண்டும். இதையுணர்ந்து செயல்படுத்த முயலுவதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கையும், குறிக்கோளுமாகும்.

## சமுதாயம்:

(1) ‘சித்தர்கள், அரசியல் விஞ்ஞானம் மிகமிகச் சாதாரணமாக அதிக முக்கியத்துவமின்றியே கையாளப் படல் வேண்டி “அரசியலே அனைத்து முறைகேடுகளுக்கும் தவறுகளுக்கும் காரணம்” -- என்ற மிகத் தெளிவான கொள்கையைக் கூறுகிறார்கள். அதாவது சமுதாய அமைப்பு வலுவும், வாளிப்பும், வளமும், வடிவமும், உறுதியான கட்டமைப்பும் பெற்று விட்டால் அரசு என்ற ஒன்று தேவையே இல்லை; **சமூக நல மையங்களே** போதும். இந்தச் சமூக நல மன்றங்களே கோயில்கள். எனவே, மதம் ஒன்றே போதும்”. (Religion is the Social Administrative Science) இதனைச் “சமயமே சமுதாயத்தை ஆளும் விஞ்ஞானம்” என்ற சித்தர் நெறி வாசகம் முழுமையாக விளக்குகிறது.

(2) கிராம சுயாட்சி போன்றதே சித்தர் நெறியின் பொருளாதார, சமுதாய, அரசியல் கொள்கை.

(3) சித்தர் நெறி, நாடோடிகள், அனாதைகள், ஏழைகள், பாதுகாப்பற்றவர்கள், வேலையில்லாதவர்கள், பிச்சைக் காரர்கள், …….. இல்லாத சமுதாய அமைப்பையே விளக்குகிறது. அதை அடைவதே இ.ம.இ.யின் கொள்கையும் குறிக்கோளுமாகும்.

## நீதியும் அரசும்:

அந்தந்த வட்டார வழக்குகள் அனைத்தும் அந்தந்த வட்டார அறங்கூறும் அவையத்தாலேயே தீர்க்கப்படும். நீதியில் குறையிருப்பதாக விண்ணப்பிக்கப் படும் வழக்குகளை மாவட்ட, மாநில அறங்கூறவை அருளாளர்கள், ஆண்டில் சில முறை அந்தந்த வட்டாரத்துச் சுற்றுப் பயணமாக வந்து மீண்டும் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவர். இதுவே இறுதி. தேவையில்லாமல் தாள்களில் எழுதித் தொகுக்கும் முறைகள் முழுமையாக ஒழிக்கப்படும். எழுத்தர்கள் மிகுந்த அலுவலக ஆட்சி முறை ஒழிக்கப்படும். அந்தந்த வட்டார அலுவலகங்களாகச் (Block Development Offices) சொத்துக்களைப் பற்றிய ஆவணக் களரிகளே (Registration Offices) இருக்காது; தேவையில்லை. சட்டமும், ஒழுங்கும் வட்டார, மாவட்ட அருளாளர்களால் நிலைநாட்டப்படும். ஆட்சி இயந்திரமாக அனைத்து மக்களும் பொறுப்பேற்கும் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம் உருவாக்கப்படும். அதனால் அரசியலும், அரசியல்வாதிகளும் நடத்தும் ஆடம்பர, ஆரவார, வீணான நிகழ்ச்சிகளுக்கே நாட்டு நடப்பில் இடமிருக்காது. எங்கும் அமைதியும், நிறைவும் செழிக்கும்.

எனவே எல்லோரும் உழைக்கவும், தேவைக்கு ஏற்ற வசதிகளைத் துய்க்கவும், வாய்ப்புக்கள் மிகுந்த சித்தர் நெறிச் சமுதாயம் உருவாக்கப்படுவதே இ.ம.இ.யின் கொள்கையும், குறிக்கோளுமாகும், செயல்திட்டமும் ஆகும்.

## வணிகம்:

எல்லா வணிகமும் சமுதாயக் கூட்டுறவுக் கழகங்களாலேயே நிகழ்த்தப்படும். தொழில்களும், தொழிலாளர் கூட்டுறவுக் கழகங்களாலேயே நிகழ்த்தப்படும். அருளாளர்களின் ஆட்சி மன்றக் குழு அனைத்தையும் மேற்பார்க்கும். அதாவது, அனைத்துக் கலைகளும், தொழில்களும் சித்தர் நெறிப்படி பொதுவுடமையாக்கப்படும். அதாவது, ‘உழைப்பும், உழைப்பின் பயனும், அரசும் பொது மக்களுக்கே’ என்ற சித்தர்களின் வாசகமே இ.ம.இ.யின் கொள்கை.

**குறிப்பு:**

மற்றவை விரிவாக ‘இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை’, ‘கடவுளை வழிபடுவோர் கழக அறிக்கை’, ‘இந்து மறுமலர்ச்சி இயக்க மாநாட்டு அறிக்கைகள்’ முதலியன மூலம் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம். ஞாலகுருவின் படைப்புக்களே அனைத்தையும் விளக்கும் சட்ட பூர்வ இலக்கியங்கள்.

## மதப் புரட்சியல்ல; மதவழிப் புரட்சி

(1) மத வழிப் புரட்சிதான் சமுதாய அடித்தள மக்கள் அனைவரையும் விழிச்சி பெறச் செய்யும்.

(2) மத வழிப் புரட்சிதான் சமுதாயத்தின் பெரும் பகுதியான கடைநிலை, இடைநிலை மக்களனைவரையும் புரட்சிக்கு எழிச்சியுறச் செய்யும்.

(3) மத வழிப் புரட்சிதான் தனி மனித வாழ்வையும் சமுதாய வாழ்வையும் செழிச்சி பெறச் செய்யும்.

(4) மத வழிப் புரட்சிதான் வீணான பேரழிவுகளையும், உயிர்ச் சேதங்களையும், குருதிப் பெருக்கையும் தடுத்துச் சீராக்கி விடும்.

(5) மத வழிப் புரட்சிதான் வீம்புகளையும், வீரப்புகளையும், விதண்டாவாதங்களையும் விலக்கி, விரட்டியடித்து எதற்கும் விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்து கொல்லும் விவேகத்தைப் பசுமையாக விளைந்து கொண்டிருக்கச் செய்யும்.

(6) மத வழிப் புரட்சியால்தான் எல்லாவித ஏற்றத் தாழ்வுகளையும் இடித்து, அடித்து நொறுக்கிச் சமப்படுத்தும் ஆற்றலையும், அதிகாரத்தையும், ஆளுமையையும் அளிக்க முடியும்.

(7) மத வழிப் புரட்சியால்தான் மேட்டுக்குடி மக்களையும், கடைநிலை மக்களையும் ஒருங்கிணைக்கும் உலைக்கள நெருப்பை உருவாக்கித் தர முடியும்.

(8) மதவழிப் புரட்சியால்தான் மனவலிமை படைத்திட்ட தலைவர்கள் சிந்தைத் தெளிவுடனும், துணிவுடனும் ‘சமுதாயப் பொருளாதாரச் சமத்துவத் திட்டத்தைச்’ செயலாக்கும் ‘ஊழிக் காற்று’ அல்லது ‘பேய்க்காற்று’ முயற்சியை மேற்கொள்ள முடியும்.

“...மத வழிப் புரட்சியால்தான் சமுதாயத்தின் எந்தப் பகுதியைச் சேர்ந்த மனிதனும் தன்னலமற்ற, தன்னம்பிக்கை மிக்க, துணிவு நிறைந்த, கொள்கைப் பிடிப்புடைய, குறிக்கோள் பற்றுடைய, நேர்மையான உழைப்பினால் தலைவனாக உயர்ந்து சிறந்த சாதனைகளைச் சாதிக்க முடியும். போலியான தலைவர்கள், எரிமலை குமுறிச் சீறி வெடித்து நெருப்புக் குழம்பைக் கக்கும் போது அதன்மேல் மூடிக் கிடக்கும் சாம்பல் மேடுகள் இருந்த இடம் தெரியாமல் போவது போல் மறைந்தொழிவார்கள்..........” என்ற சித்தர் நெறி வாசகத்தையே இங்கு இக்கொள்கை விளக்கமாகக் குறிப்பதே சிறப்பு என்று கருதப் படுகிறது. அதாவது, கூலிக்கு ஆள் பிடித்துத் தலைவர்களாக வளரும் போலி நிலைகள் மத வழிப் புரட்சியால்தான் அழித்தொழிக்கப்படும்.

(9) மதம் = புரட்சி = புதுமை = சீர்திருத்தம் = செப்பனிடல் என்பதுதான் சித்தர்கள் வழங்கும் பொருள். ஆனால் நாத்திகவாதிகள் மதம் = பழமை = மடமை = மூடநம்பிக்கை = ஏமாற்று ... என்றெல்லாம் பொருள் சொன்னார்கள். இந்த நாத்திகவாதிகளுக்குச் செயல்வடிவில் பதில் கூறுவதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை. குறிக்கோள்.

## வளர்ச்சியும், முடிவான நோக்கமும்

சித்தர் நெறியின் வளர்ச்சி, வெறிமிக்க முதிர்ச்சி பெற்றுல்தான் தீயவை அனைத்தையும் முறியடிக்கும் பேராற்றல் பொதுமக்களுக்கு உருவாகிடும். அப்பொழுதுதான் அனைத்தும் பொதுமக்கள் பெருந்திரளால் சமத்துவப் படுத்தப்பட்டு, **“ ‘அனைத்தும் சமுதாயத்துக்கே!’ என்ற நிலையினை நிலைநாட்ட முடியும். அந்நிலை, ஏதோ தன்னிச்சையாக வரலாற்றுப் போக்கில் உருவாகும் நிகழ்ச்சியாகிடும் என்று யாருமே நினைக்கக் கூடாது.”** மலை முகடுகளிலும், காடுகளிலும், குகைகளிலும் கடுந்தவம் புரியும் அருளாளர்கள் எரிமலைக் குழம்பு போல் வெடித்துச் சிதறிச் சீறிக் கிளம்பி உருவாக்கப் போகும் சமுதாய மாற்றமே அனைத்து ஏற்றங்களையும், செழுமைகளையும், கொழுமைகளையும், துய்ப்பு ஆளுமைகளையும் படைத்துத் தரப் போகின்றது. இதற்காக உடனடியாக அனைத்துக் கிளர்ச்சிச் சத்திகளையும் நெறிமுறைப்படுத்தி முழுமையான வளர்ச்சியடையச் செய்யும் பயிற்சிகளை வழங்குவதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம்.

இந்து மறுமலர்ச்சி இயக்கம் இருநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து மனித இன நலத்துக்காக, ஒற்றுமைக்காக, அமைதிக்காகத் தொண்டாற்றி வரும் பண்பாட்டு இயக்கம் [I.M.I. is a cultural organization and it is not a political movement]. இது அரசியல் இயக்கம் அல்ல. அதாவது இது ஒரு சமுதாய நல இயக்கமே. இவ்வியக்கம் தொடர்ந்து இருநூறு ஆண்டுகளாக இலைமறை காயாகவே செயல்பட்டு வருகிறது. ஆனாலும் இது, தொடர்ந்து உறுதியுடன் ‘சமுதாய மாற்றத்தையே’ விரும்பியும், நம்பியும் செயல்பட்டு வருகிறது. ஏனென்றால், “சமுதாய மாற்றமே அனைத்து ஏமாற்றங்களையும், ஏற்றத் தாழ்வுகளையும், ஏக்கங்களையும் அகற்றிடும்” என்பதுதான் சித்தர்களின் கருத்து. எனவே, இது முழுக்க முழுக்க ஒரு சமுதாய இயக்கமே தவிர, அரசியல் இயக்கமல்ல! அதுவும், இந்த இயக்கம் ‘அனைத்தையுமே மதத்தின் அடிப்படையில், மதத்தின் மூலமே செய்ய வேண்டும்’ என்ற தெளிவான, முடிவான கொள்கையை உடைய ஒரு மிதவாத, மதவாத அமைதி வழி இயக்கம்.

‘தென்னாடுடைய சிவனே போற்றி!’
‘எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!’
‘ஓம் அரகர நமப் பார்வதே பதயே’
‘ஓம் அரகர மகாதேவா’
‘ஓம் அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!
ஓம் தனிப் பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!’
‘ஓம் எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான்தனை யேத்து’

ஓம் வெற்றிவேல்! ஓம் வீர வேல்!
ஓம் சத்திவேல்!
ஓம் திருச்சிற்றம்பலம்!
தமிழ் வாழ்க! சிவநெறி வாழ்க!
இந்தியம் வாழ்க!
ஓம் திருச்சிற்றம்பலம்!
அன்பே சிவம்!

யாவும் நிறைவே! நிறைவே! நிறைவே!
யாவும் அமைதியே! அமைதியே! அமைதியே!

**--- ஞாலகுரு சித்தர் கருவூரூர்.**

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# கொள்கை விளக்கம்

[இரண்டாவது பதிப்பின் போது நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வெளியிடப்படும் மொழிக் கொள்கை]

கி.மு. 100 முதல் கி.பி. 150 வரை வாழ்ந்த பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார்தான் முதன் முதலில் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர் பற்றியும்; அவர்களுடைய வேதமதத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பொய்யான ஹிந்து மதம் பற்றியும்; சித்தர்களால் தமிழின் அடிப்படையில் பிருமணர்களின் எழுத்தற்ற ஆரிய மொழி எழுத்து வளமும் இலக்கிய இலக்கண வளமும் உடைய சமசுக்கிருத மொழியென்று ஒரு புதுமொழியாகத் தோற்றுவிக்கப்பட்டதென்பதையும் மிகத் தெளிவாகக் குறித்துள்ளார். சூழ்ச்சித் திறமிக்க பிருமணர்கள் சித்தர்களால் படைக்கப்பட்ட இந்தச் சமசுக்கிருத மொழியை வைத்துக் கொண்டே அண்ட பேரண்டமாளும் அருளுலக ஆட்சி மொழியான தெய்வீகத் தமிழைக் கெடுக்க முற்பட்டார்கள் என்பதையும்; அதாவது சமசுக்கிருத மொழிக்காக சித்தர்களால் படைக்கப்பட்ட ஷ, ஜ, ஹ, ஸ, ... முதலிய எழுத்துக்களையும் வட ஆரியர்களின் பேச்சு வழக்கிலிருந்த சொற்களையும் மிகுதியாகத் தமிழில் புகுத்தினுர்கள் என்பதையும் மிகத் தெளிவாகத் தமது குறிப்புகளில் வெளியிட்டுள்ளார்.

மேலும், இதே போல் தமிழிலக்கியத்திலிருந்த நல்ல இலக்கியங்கள் அனைத்தையும் காட்டுமிராண்டித்தனமான கற்பனைகளாலும், ஆபாசச் செய்திகளாலும், அருவருக்கத்தக்க கருத்தோட்டங்களாலும் சிதைத்துச் சீரழித்துப் பாழாக்கி விட்டார்கள் என்பதையும்; இவற்றிற்கெல்லாம் மேலாக, தமிழ்மொழியே சித்தர்களால் ஆயிரமாண்டு இடைவெளிக்குள் உருவாக்கிக் கொடுக்கப்பட்ட சமசுக்கிருத மொழியிலிருந்துதான் தோன்றியது என்ற பொய்யைக் கூறி மாபெரும் குழப்பங்களை விளைவித்து விட்டார்கள். அதாவது, சமசுக்கிருத மொழியின் எழுத்துக்களாலும், சொற்களாலும், இலக்கிய, இலக்கணங்களாலும், பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான சீவநெறியெனும் இந்துமதத்தைச் சிதைத்துச் சீரழித்துப் பாழாக்கிப் பயனற்றதாக்கி விட்டார்கள். எனவேதான், பதினெண் சித்தர்களுடைய இந்துமதத்திற்கு மெய்யான இந்துமதம் என்றும், (இது ஏட்டளவில்தான் முழுமையான வடிவிலிருக்கிறது), பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களால் சிதைத்துச் சீரழிக்கப்பட்டுப் பாழாக்கப்பட்டுப் பயனற்றதாக்கப்பட்ட இந்துமதத்தைப் பொய்யான ஹிந்துமதம் என்றும் பெயரிட்டார். இவரே, மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக்காகவும், "இந்து மறுமலர்ச்சி இயக்கம்" என்ற ஒரு இயக்கத்தையே தோற்றுவித்தார் என்பதையும்; இந்த இயக்கத்தின் மூலமே தெய்வீக அமுதத் தமிழைச் சமசுக்கிருத மொழியின் ஆட்சியிலிருந்து முழுமையாக விடுவிக்க வேண்டும், விடுவிக்க வேண்டும், விடுவிக்க வேண்டும்! என்று கூறியதையும் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. மேலும், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் [கி.பி. 785 - கி.பி. 1040] தமக்கு முன் வாழ்ந்த அமராவதியாற்றங்கரைக் கருவூராரின் சமசுக்கிருத மொழி பற்றிய கருத்தை அடிப்படையாகக் கொண்டே பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களின் பிடியிலிருந்து தமிழரை விடுவிப்பதற்காகவே அருட்பேரரசான பிற்காலச்

சோழப் பேரரசை [கி.பி.785 - கி.பி.1279] உருவாக்கினூர் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. எனவே, தமிழர்களுக்கு விடுதலைவாழ்வு, மொழியுரிமை வாழ்வு, பண்பாட்டுப் பெருமை வாழ்வு, தன்னம்பிக்கை வாழ்வு,...... முதலியவை-யெல்லாம் மீண்டும் கிடைத்திட வேண்டுமென்றால் நேரடியாகவே சமசுக்கிருத மொழியின் ஆட்சிநிலைகள் அனைத்தையும் எதிர்த்துப் போரிட்டு அழித்து ஒழித்தேயாக வேண்டும். இந்த மொழிப்போர், நேரடியாகவே பிருமணர்களுடன் நிகழ்த்தப்பட வேண்டிய ஒன்றாகி விட்டால், பிற்காலச் சோழப் பேரரசின் தந்தையாகிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் எண்ணற்ற போர்க்களங்களில் குருதி மழையில் நீராடியும், குருதி ஆற்றில் நீந்தியும் வாழ்ந்தவராக இருந்தும் கூட மேற்படி சமசுக்கிருத எதிர்ப்புப் போரில் திடீரென்று செயல்நிலைகளை யெல்லாம் கைவிட்டு விட்டு நிலவறைக்குள் சென்றது போல் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் சமசுக்கிருத எதிர்ப்புப் போர் தோற்றுவிடக் கூடாது......... “ என்று கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை அவர்கள் கி.பி. 1772-இல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்து வழங்கிய மேற்படி கொள்கை விளக்க வாசகத்தையே என்றென்றும் கொள்கை விளக்கமாக வழங்க வேண்டுமென்ற ஆணையைப் [ஏளனம்பட்டியாரின் ஆணையை] பின்பற்றியே இந்தக் கொள்கை விளக்கம் சமசுக்கிருத மொழிபற்றி இன்றும் வழங்கப்படுகிறது. இதுவே, இ.ம.இ.யின் கொள்கை விளக்கமாக மரபு பற்றி வழங்கப்படுகிறது.

---

# இந்தி மொழி பற்றிய கொள்கை விளக்கம்

1-12-1956இல் இ.ம.இ.யின் பாரம்பரிய மரபுப்படி இதன் இரண்டாவது தலைவராக 1936 முதல் பொறுப்பேற்றுச் செயலாற்றி வரும் சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளையாகிய யாம் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் இந்தி மொழி பற்றிய இ.ம.இ.யின் கொள்கையை எழுதி வெளியிடுகிறோம். இந்த அறிக்கை சில ஆயிரமே அச்சிடப் பட்டாலும் இது உலகெங்குமுள்ள தமிழர் அனைவருக்கும் அனுப்பப்படுகிறது என்பதே இதன் சிறப்பு.

எமது நண்பர்களும் எம்பால் ஈடுபாடு உள்ளவர்களும் இந்திய அரசின் வெறிபிடித்த இந்தி மொழிக் கொள்கையைப் பற்றிப் பலவிதமாகப் பலமுறை என்னிடம் கேட்டதாலேயே இந்த 'இ.ம.இ.யின் இந்தி மொழி பற்றிய கொள்கை விளக்கம்' என்ற அறிக்கை வெளியிடப்படுகிறது. இதனை, பல்வேறு காரணங்களால், யாம், ஐந்தாம் பதிப்பாக வெளியிட்ட 'தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்?' என்ற நூலோடு சேர்த்து வெளியிட முடியவில்லை. ஆனாலும், இந்த அறிக்கை அவசர அவசரமாக வெளியிடப்பட்டு; இந்த 'தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்?' என்ற நூலோடு சேர்த்து அனுப்பப் படுகிறது.

இந்த கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்தே பதினெண் சித்தர்களின் சாதனைகளுக்கும் போதனைகளுக்கும் சோதனையாகப் பிறமண்ணினரான பிருமணர்கள் இமயமலையிலுள்ள கைபர் போலன் கணவாய்கள் வழியாகத் தோலால் செய்யப்பட்ட குடுவையும், கோவணமும், கோலுமாக இந்தியாவிற்குள் வந்தார்கள். இவர்களுடைய காட்டுமிராண்டி நிலைகளை மாற்றிடுவதற்காகவே பதினெண் சித்தர்கள் இவர்களுடைய எழுத்தற்றப் பேச்சு மொழியைத் தமிழுக்குச் சமமாகத் தமிழின் அடிப்படையில் சமசுக்கிருத மொழியாக உருவாக்கிக் கொடுத்தார்கள். அதாவது, தமிழிலுள்ள சமம் என்ற சொல்லையும், வட ஆரியர்களின் பேச்சு வழக்கு மொழியில் இருந்த கிருதம் என்ற இணைத்தே இந்தச் சமசுக்கிருதம் என்ற சொல் உருவாக்கப்பட்டது. அதாவது, சமம் = தமிழுக்குச் சமமாக; கிருதம் = செய்யப்பட்டது → **சமசுக்கிருதம்** என்ற பொருளுடைய சொல் உருவாக்கப்பட்டது. ஆனால், இந்தச் சூழ்ச்சிக்காரப் பிருமணர்கள்; தங்களுடைய குள்ள நரிப் பண்பிற்கேற்ப; பதினெண் சித்தர்கள் படைத்துக் கொடுத்த சமசுக்கிருத மொழியைப் பயன்படுத்தியே பதினெண் சித்தர்களின் தாய்மொழியான, 'அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழி'யான தெய்வீக ஆற்றல் மிகுந்த அமுதத் தமிழ்மொழியை கரையானையும்; செல்லுப் பூச்சியையும் அந்துப் பூச்சியையும் போல் சிறுகச் சிறுக அழித்துச் சீரழித்து விட்டார்கள். அது கண்ட பதினெண் சித்தர்கள் கோபித்துச் சாபம் இட்ட காரணத்தால் செத்துப் (இறந்து, அழிந்து) போய்விட்டது இந்தச் சமசுக்கிருதம். ஆனாலும், இந்தக் கட்டுப்பாடும், நுட்ப மதியும், திட்டமிட்டுச் செயலாற்றும் பேராற்றலும், எதையும், இனநலனுக்காகத் தியாகம் செய்யும் தீரமும் அநாகரீகமிக்க வெறிப் போக்கும் மிகுதியாக உடைய பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் தங்களுடைய செத்துப் போன சமசுக்கிருத மொழியை வைத்துக் கொண்டே தமிழர்களையும்; தமிழர் மதமான மெய்யான இந்து மதத்தையும்; தூய்மையும் வாய்மையும் மிக்க தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணங்களையும் சிதைத்தும், சீரழித்தும், பிரித்தும், அடக்கியொடுக்கி அடிமைப் படுத்தி வருகிறார்கள். ஆனால், தமிழர்களிலேயே கணிசமான அளவு அடிமைப் புத்தி படைத்த பேராசைக் காரர்களும், பண வெறியர்களும், பதவி வெறியர்களும், புகழ் வெறியர்களும் காலங்கள் தோறும் தோன்றித் தோன்றித் தமிழின நல துரோக விரோதச் செயல்களைச் செய்ததால்தான் இந்தச் சமசுக்கிருத மொழியும், பிருமணர்களும் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார்கள். அதாவது, தமிழர்களுக்குள்ளேயே கணிசமான அளவினர்கள் தமிழின நலத்துரோக விரோதச் செயல்களை சுய நலத்தால் தொடர்ந்து செய்து

வருவதால்தான் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரார் அவர்களும்; பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் தோல்விகளையே பெற்றிட்டார்கள். அதாவது, இந்தச் சமசுக்கிருத மொழியால்தான் தமிழர்கள் சமுதாயரீதியாகவும், சமயரீதியாகவும் அடிமையாக்கப் பட்டிருக்கிறார்கள் [The Sanskrit language is the main cause and source for the slavery of the tamils both in the field of Religion and Social conditions] என்பதுதான் உண்மை.

எனவே, இப்போது வடநாட்டுக் காரர்களால் அரசியல்ரீதியாகப் புகுத்தப்பட்டு வரும் இந்தி மொழியால் தமிழர்கள் என்றென்றும் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் வடநாட்டாரிடம் நிரந்தரமான அடிமைகளாகத்தான் இருக்க நேரிடும். இன்றுள்ள காங்கிரசுக் கட்சிக்காரர்கள், தங்களுடைய புகழ் வெறியாலும், பதவி வெறியாலும், கட்சி வெறியாலும் கண்ணை மூடிக் கொண்டு இந்திமொழியை வரவேற்கிறார்கள். இவர்களை எண்ணும் போது; பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியான குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் வளர்ப்பு மகனான ஈசா எனும் ஏசுநாதரின் கடைசிக்கால நிலையில்தான் இருக்க முடிகின்றது எம்மால். அதாவது, ஏசுநாதர் தனது சாவின் கடைசி நிலையில் தன்னுடைய மரணத்துக்குக் காரணமாக இருந்த அனைவர்களையும் மன்னிக்க விரும்பி; "தந்தையே! எல்லாம் வல்ல இறைவனான உமது புதல்வனாகத் தோன்றிய என்னைப் புரிந்து கொள்ளாமல் இவர்கள் செய்கின்ற பாவங்களை மன்னிப்பீராக! என்னைக் கொடுமைப் படுத்தியவர்களைத் தண்டித்துவிட வேண்டாம்" என்று வேண்டுகோள் விடுத்துக் கொண்டார். அதைப் போலவே, யாம் வருங்காலத் தமிழின மக்களை, "இந்தக் காங்கிரசுக் காரர்களை மன்னித்து விடுங்கள். இவர்கள், தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல்; தமிழகத்துக்குரிய திருப்பதி, தேவிகுளம், பீர்மேடு, கன்னியாகுமரி (நாகர்கோயில்) மாவட்டப் பகுதிகள், சேலம் மாவட்ட ஓசூர் பகுதிகள் ...... முதலிய பலவற்றைப் பிற மாநிலங்களுக்குத் தானமாக வழங்கி விட்டார்கள். இவர்கள், தமிழ்மொழியையும், கல்வி கற்கும் இளைஞர்களின் அறிவையும், தமிழரின் தன்மானத்தையும், தமிழ்நாட்டையும் இந்தி மொழியால் சிதைத்துச் சீரழித்துச் சின்னாபின்னப் படுத்தி அடிமை நிலைக்குக் கொண்டு செல்கிறார்கள். இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஒப்புக் கொண்டதின் மூலம் தமிழ்நாட்டின் அனைத்து வகையான தொழில் வளங்களையும், பொருளாதார நிலைகளையும், தமிழ்நாட்டு வாணிகத்தையும் இந்திக் காரர்கள் தங்கள் விருப்பம் போல் கொள்ளையடிக்க வாய்ப்பு வசதிகளை உருவாக்கி விட்டார்கள். இவற்றால் வருங்காலத்தில் இந்திக் காரர்களின் குருதியை ஆறாக ஓடவிட்டும்; தமிழகத்தின் தெருக்கள் தோறும், ஊர்கள் தோறும் இந்திக்காரர்களின் பிணங்களை மலைமலையாகக் குவித்தும் ஒரு கடிய கொடிய நெடிய உள்நாட்டுப் போர் நிகழ்வதற்கு வழிவகை செய்து விட்டார்கள் இந்தக் காங்கிரசுக்காரர்கள். எனவே இந்த அப்பாவிகளை, ஏமாளிகளை, கட்சி வெறிபிடித்த அடிமைப் புத்திக்காரர்களை; இனப்பற்றோ, மொழிப்பற்றோ, நாட்டுப்பற்றோ இல்லாத கோமாளிகளை, வருங்காலத் தமிழக மக்களே மன்னித்து விடுங்கள், மன்னித்து விடுங்கள், மன்னித்து விடுங்கள். ஏனெனில், இந்தக் காங்கிரசுக் காரர்களில் பெரும்பாலானவர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் செயல்படுகின்ற நல்லவர்களாகவே இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே பிராமண அடிமைகளாகவும், சமசுக்கிருத அடிமைகளாகவும், பொய்யான ஹிந்துமத அடிமைகளாகவும், ஆங்கில அடிமைகளாகவும் வாழுகின்ற கோழைகளாகவும், ஏழைகளாகவும், படிப்பறிவற்ற பாமரர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, இந்தி மொழியை எதிர்ப்பதாக எண்ணிக் கொண்டு கடந்த கால, நிகழ்கால காங்கிரசுக் காரர்களைக் கண்மூடித்தனமாகத் திட்டித் தீர்த்து விமரிசனம் செய்வதில் காலத்தைக் கடத்தாதீர்கள். இந்தியை எதிர்ப்பதற்காக இந்தி மொழி பேசாத இந்திய மாநிலத்தவர்

அனைவரையும் ஒன்று திரட்டுங்கள். அதன் மூலம் ஒரு கூட்டு முயற்சியை உருவாக்கி; இந்திய அரசிய நிர்ணயச் சட்டத்தைத் திருத்தி, இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளையும் சட்டப்படி அரசியல் மொழியாக்கிடுங்கள். இந்தியாவின் மத்திய அரசு அலுவல்களில் அனைத்து மாநிலங்களுக்கும் சமமான வாய்ப்பு வசதிகளைத் தர வேண்டுமென்ற நீதியைச் சட்டமாக்குங்கள். அதன் மூலம் தேர்வு, திறமை என்ற பெயரால் குறிப்பிட்ட வகுப்பினரும் ஒருசில மாநிலத்தினரும் மட்டுமே இந்திய மத்திய அரசில் வேலைவாய்ப்பு வசதிகளைத் துய்த்துக் கும்மாளமிடும் அநீதியைத் தடுக்க முடியும். இதேபோல், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்தினரும் அடுத்தடுத்து இந்தியக் குடியரசுத் தலைவராகவும் பிரதம மந்திரியாகவும் பதவியேற்க வேண்டுமென்ற நியதியைச் சட்டமாக்குங்கள். அதனால், ஒரே மாநிலத்தவர் மற்ற மாநிலத்தவர்களை அடிமையாக்கிச் சுரண்டிச் சுகபோக வாழ்வு வாழும் பித்தலாட்டத்தனமான, அயோக்கியத்தனமான, காடுமிராண்டித்தனமான, பாசிசச் சர்வாதிகாரப் போக்கு தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும், தடுக்கப்பட்டிடும், ஒழிக்கப்பட்டிடும், ஒழிக்கப்பட்டிடும், ஒழிக்கப்பட்டிடும். எனவே, **'இந்தி மொழியை எதிர்ப்பது என்பது இந்திக்காரர்களை எதிர்ப்பதேயாகும்',** என்ற தத்துவத்தினை நன்கு தெரிந்தும், புரிந்தும், உணர்ந்துமே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களும், போர்களும் நிகழ்த்தப்படல் வேண்டும். அதாவது, இந்தி எதிர்ப்பு என்பது சாதாரணப் போராட்டங்களாலேயே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிட முடியுமா? அல்லது பெரிய பெரிய போர்களுக்குப் பிறகுதான் இந்தி எதிர்ப்பு முயற்சி நிறைவு பெற முடியுமா? என்பதைத் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் காரர்களும் இந்திய நாட்டுப் பிருமணர்களும், இந்தி வெறியர்களும்தான் அவசியமாகவும் அவசர அவசரமாகவும் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பது இந்திக் காரர்களையே எதிர்க்கும் பெரும் போராகவே மாறிடும். அந்தப் போரில் அப்பாவியான, ஏமாளியான, நல்லவர்களான காங்கிரசுக் காரர்களில் பெரும்பாலானவர்களும் சூழ்ச்சிக்காரப் பிருமணர்களில் பெரும்பாலானவர்களும் சுயநலக்கார வெறியர்களான இந்திக்காரர்களில் பெரும்பாலானவர்களும் அநியாயமாக அழிய நேரிடும், அழிய நேரிடும், அழிய நேரிடும், அழிய நேரிடும். எனவே, ஒவ்வொரு தமிழனும் தமிழனின் தன்மானத்துக்காக, தமிழனின் தன்னம்பிக்கைக்காக, தமிழனின் ஒற்றுமைக்காக, தமிழனின் ஒருமைப் பாட்டுக்காக, தமிழனின் பண்பாட்டு விடுதலைக்காக எப்பாடுபட்டாவது இந்தியையும், சமசுக்கிருதத்தையும் எதிர்த்துப் போராடியே தீர வேண்டும். அல்லது சமசுக்கிருதப் பிருமணர்களையும் இந்திக்காரர்களையும் எதிர்த்திடும் போரில் இயங்கியேதானாக வேண்டும்." இந்த முடிவைத்தான் அருள் உள்ளத்தோடும், அறிவார்ந்த இரக்கச் சிந்தனையோடும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கையாக அறிவிக்கிறோம் யாம். **தமிழனுக்கு சமசுக்கிருதமும் வேண்டாம். இந்தியும் வேண்டாம், ஆங்கிலம் ஒன்றே போதும்** -- என்பதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை. ஏனெனில், இந்துமதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும் இருப்பவர்கள் தமிழர்களே.

---- சித்தர் காகபுசுண்டர் எனும்
காக்கையர் **ம. பழனிச்சாமி பிள்ளை**
முடிகணம் எனும் முடிகண்ட சோழபுரம்
நாள்: 1--12--1956

---

## இ.ம.இ.யின் ஆங்கில மொழி பற்றிய விளக்கம்

ஆங்கிலேயர்கள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் ஒருங்கிணைத்து ஒரு குடைக்கீழ் ஆண்டார்கள். இந்த ஆங்கிலேயர்கள்தான், தங்கள் ஆங்கிலமொழிக் கல்வி வாயிலாக மருத்துவம் (Medicine), பொறியியல் (Engineering), வரலாறு (History), தத்துவம் (Philosophy), தாவரவியல் (Botany), விலங்கியல் (Zoology), வேதியியல் (Chemistry), பெளதீகம் (Physics), இலக்கியம் (Literature)......... முதலிய பல துறைகளை முறையான கல்வியாக (A proper Education) கல்விக் கூடங்களின் மூலம் வழங்கினார்கள். அப்படி இவர்கள் ஆங்கில மொழி வாயிலாக வழங்கிய கல்விதான் இந்தியா முழுவதும் ஒற்றுமையையும், ஒருமித்த உணர்வையும், இந்தியா என்ற நாட்டுணர்வையும், இந்தியர் என்ற இந்துமத உணர்வையும் (இந்துக்கள் = இந்தியர்) வளர்த்தது. எனவே, **இந்தியத் துணைக்கண்டம் என்ற ஒரு நாடு புவியியல் படத்தில் என்றென்றும் இருக்க வேண்டுமேயானால் ஆங்கில மொழிதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்.**

ஆங்கில மொழிதான் இந்திய விடுதலை தேசிய உணர்வை முளைத்துக் கிளைத்துச் செழித்து வளரச் செய்தது. இன்றைக்கும் அகில இந்திய அரசாங்க அலுவலகங்களும் அரசியல் சாசனங்களும் ..... ஆங்கில மொழியின் மூலம்தான் செயலாகி வருகின்றன. **'இந்திமொழிக் காரர்களுக்கு ஆங்கில மொழி படிப்பது சிரமமாக இருக்கிறது' என்ற ஒரே ஒரு காரணத்தினால்தான் இந்திக்காரர்கள் ஆங்கிலத்தை மறுத்தும், வெறுத்தும், எதிர்த்தும், அழித்தொழிக்க முயற்சி செய்து வருகின்றார்கள். 'யானை நீராடிவிட்டுத் தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது' போல இந்திய விடுதலையைப் பெற்றிட்ட காங்கிரசுக்காரர்கள் இந்திமொழி என்ற மண்ணைத் தங்கள் தலையில் வாரிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.** எனவே, விரைவில் இந்தி வெறியால், இந்தி ஆதிக்கத்தால் இந்திக்காரர்களின் சர்வாதிகாரப் போக்கால்; விடுதலை பெற்ற இந்தியத் துணைக்கண்டம் மொழி வாரி நாடுகளாகத் துண்டு துண்டாகப் பிரிந்து, சிதைந்து ஓடிவிடும்; அதைத் தடுக்கக் கூடிய ஆற்றல் ஆங்கில மொழிக்குத்தான் உண்டு.

'தமிழர்களைப் பொறுத்தவரை சமசுக்கிருத மொழி, இந்தி மொழி, ஆங்கில மொழி ஆகிய மூன்றுமே அன்னிய மொழிகள்தான். எனவே, இந்த மூன்று மொழிகளில் எந்த ஒரு மொழியைக் கற்றுக் கொண்டால் இந்தியக் கூட்டாட்சிக்கும், உலகத் தொடர்புக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் பெரிய அளவில் பயன் ஏற்பட்டிடும்' என்று சிந்தித்து முடிவெடுப்பதுதான் நல்லது. ஆனால், நமது தமிழகத்துக் காங்கிரசுக்காரர்கள் ஆங்கில மொழி ஒன்றைத்தான் அன்னியமொழி என்று விளம்பரப்படுத்தி அதனை எதிர்க்கவும், மறுக்கவும், வெறுக்கவும் முற்படுகிறார்கள். இதைவிடப் பெரிய முட்டாள்தனம், பைத்தியக்காரத்தனம், கோமாளித்தனம், ஏமாளித்தனம், தற்கொலை முயற்சிச் செயல் வேறெதுவும் இருக்க முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. ஏனெனில், ஆங்கில மொழிதான் தமிழ் மொழியின் தன்மைகள் வேறு; வட இந்தியாவிற்குரிய வடமொழிக்கான சமசுக்கிருதம், இந்தி ...... முதலியவற்றின் தன்மைகள் வேறு என்று மிகத் தெளிவாக, விளக்கமாக வரையறுத்துக் காட்டிற்று. அது மட்டுமல்ல; இந்த ஆங்கில மொழிதான் 'வட மொழியான சமசுக்கிருதம்தான் தமிழ்மொழியைப் பெரிய அளவில் சிதைத்துச் சீரழித்துச் செயல்நலம் குன்றச் செய்தது' என்ற பேருண்மையினை எண்ணற்ற சான்றுகளையும் ஊன்றுகளையும் பட்டியலிட்டுக் காட்டியதின் மூலம் தமிழ்ப் புலவர் பெருமக்களை விழிப்படையச் செய்தது. இவற்றிற்கெல்லாம் மேலாக, இந்த ஆங்கில மொழிதான், 'தனித்தன்மையுடைய தமிழ் மொழியிலிருந்து தோன்றிய கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம், கொங்கணம், ..... முதலிய மொழிகள் அனைத்தையும் பட்டியலிட்டு இவையனைத்தையும் திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்தவை; இவை சமசுக்கிருத மொழியிலிருந்து தோன்றிய வட ஆரிய மொழிகளால்

நோயுற்று விட்டன; ...... என்ற பேருண்மையை விளக்கியுரைத்தது. இந்த மொழியியல் பேருண்மைகளால்தான் [The linguistical facts and figures only awakened the Tamils and made them to fight against the domination of the Brahmins and the Sanskrit] தமிழர்கள் விழிச்சியடைந்தார்கள்; தங்களை அடக்கியொடுக்கி, அறியாமையில் ஆழ்த்தி ஆட்சி செய்திட்ட பிருமணர்களையும், சமசுக்கிருத மொழியையும் எதிர்த்துப் போராடினுர்கள். எனவே, தமிழன் மீண்டும் ஆரிய மாயையில் சிக்கிக் கொள்ளாமலிருக்கவும்; பிருமணர்களின் சூழ்ச்சி மிக்க, சுரண்டலுக்குரிய சர்வாதிகார அடக்கு முறைக்குள் அகப்படாமலிருக்கவும்; தமிழ்மொழியை நோய்நிலைக்கும், தேய்நிலைக்கும் உள்ளாக்கிய சமசுக்கிருத மொழியிடம் மீண்டும் தமிழ்மொழி சித்திரவதைப் படாமலிருக்கவும்....... வேண்டுமேயானுல் ஆங்கில மொழியையும் தமிழ்மொழியையும் இரு கண்ணுக, காலாகக் கொண்டுதான் வாழ வேண்டும் தமிழர்கள். அதாவது, **"ஆங்கில மொழிதான் தமிழர்களுக்குச் சுய மரியாதை உணர்வையும், தன்மான உணர்வையும், இனமான உணர்வையும், தன்னம்பிக்கை உணர்வையும், இனப்பற்றையும், மொழிப்பற்றையும், நாட்டுப் பற்றையும், பண்பாட்டுப் பிடிப்பையும், இந்துமத ஒற்றுமையையும், இலக்கிய அறிவு வளத்தையும் வளர்த்தது, வளர்த்தது, வளர்த்தது"** --- என்ற பேருண்மையை உணர்ந்து ஒவ்வொரு தமிழனும் கட்டாயமாக ஆங்கில மொழி கற்றுக் கொண்டாக வேண்டும். அதாவது, ஆங்கில மொழியைத் தமிழ்மொழிக்குச் சமமாக ஏற்றுப் போற்றிக் கற்று வளர்ந்தால்தான் தமிழன் தமிழனுக உரிமையோடும், பெருமையோடும், வீரியத்தோடும், விடுதலையோடும், விவேகத்தோடும் நல்வாழ்வு வாழ முடியும், வாழமுடியும். இந்தியும், சமசுக்கிருதமும் பிணந்தின்னும் காக்கைகள் போல் உயிருள்ள கன்னித் தமிழைக் கொத்திக் கொத்திக் காயப்படுத்திக் குருதியைக் குடித்தும், சதையைத் தின்றும் தன்னுடைய கோரப் பசியை தீர்த்துக் கொள்ளத்தான் முயலும். எனவே, **'அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம் தரும்'** -- என்ற குருபாரம்பரிய வாசகத்தையும்; **'அரசியலிலும், அலுவலகத்திலும், கல்வியிலும், கலையிலும் இந்தி மொழியை ஏற்றுக் கொள்வது தற்கொலைக்குச் சமம், அது வருங்காலத்தை இருள் நிறைந்த இன்னல் மயமாக்கிடும்; என்றென்றும் தமிழர்களை கோழைகளாகவும், ஏழைகளாகவும், எடுபிடிகளாகவும், நாடோடிகளாகவும், அடிமைகளாகவும், பிச்சைக்காரர்களாகவுமே வாழச் செய்திடும், வாழச் செய்திடும், வாழச் செய்திடும்'** -- என்ற கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏனம் பட்டியார் உ. இராமசாமி பிள்ளை அவர்களின் அறிவார்ந்த அருளுரை வாசகத்தையும் தமிழர்கள் தங்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும், தெருக்களிலும், இரண்டு பேருக்கு மேல் கூடிகின்ற எல்லாவகையான நிலையங்களிலும் எழுதி வைக்க வேண்டும். எழுதிவைக்க வேண்டும், எழுதிவைக்க வேண்டும். அப்பொழுதுதான், சமசுக்கிருத மொழியையும், இந்தி மொழியையும் எதிர்த்து கடும்போர் நிகழ்ந்திடும். இந்தப் போரின் ஆயுதமே ஆங்கிலமொழி. எனவே, தமிழினப் பண்பாட்டு விடுதலை அல்லது மத மறுமலர்ச்சி அல்லது இன விடுதலை அல்லது மொழி விடுதலை........ ஆங்கில மொழியால்தான் காப்பாற்றப் பட்டிடும், காப்பற்றப் பட்டிடும், காப்பாற்றப் பட்டிடும். எனவே, ஆங்கில மொழியைப் போர் வீரர்களின் ஆயுதமாகவும், கவசமாகவும் பயன்படுத்த வேண்டும், பயன்படுத்த வேண்டும், பயன்படுத்த வேண்டும், என்ற கருத்தை மட்டும் வலியுறுத்தி இக்கட்டுரையை நிறைவு செய்கிரேம் யாம்.

--- சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர்
**ம. பழனிச்சாமி பிள்ளை** அவர்கள்
இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர், 26--1--1959

---

# மதவழிப் புரட்சியே நாட்டை மறுமலர்ச்சி அடையச் செய்யும்

நாம் விடுதலை பெற்று 12 ஆண்டுகள் ஆகப் போகின்றன. ஆனால், நமது அரசியலும் சமுதாயமும் குடும்ப வாழ்வும் தனிமனித வாழ்வும் எந்த வகையிலும் குறிப்பிடத் தக்க மறுமலர்ச்சியை அடையவில்லை. இன்னும் சொல்லப் போனால், நம் நாட்டு மக்கள், ஏறத்தாழ எல்லோருமே, "விடுதலையால் தமக்கு எவ்வித மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவேயில்லை" என்று கூறுகிற நிலையில்தான் இருக்கிறார்கள். நாட்டு நடப்பில் தேவையான அளவு விழிச்சியோ, எழிச்சியோ, வளர்ச்சியோ, செழிச்சியோ எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எனவேதான், **'நம்நாட்டின் மறுமலர்ச்சிக்காக உழைக்கக் கூடிய ஒரே ஓர் இயக்கம் இந்து மறுமலர்ச்சி இயக்கம் தான்'**, என்று கொள்கை விளக்கம் எழுத நேரிட்டுள்ளது எம்மால். இன்று 15-8-1959 இல் சுதந்தர நாள், யாமும் கடுமையாக உடல்நலம் பாதிக்கப் பட்டிருக்கிறோம். (இ.ம.இ.யின் 2வது தலைவர் சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை). எனவேதான் குடியரசு தினமான சனவரி 26ஆம் நாள் 1959 முதல் யாம் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை விளக்கமாகத் தொடர்ந்து பல கட்டுரைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி, இதைத் தட்டெழுத்தில் பொறித்தும், துண்டு அறிக்கைகளாக அச்சிட்டும் இந்தியா முழுதுமுள்ள அரசியல்வாதிகளுக்கும், தமிழினப் பெரிய மனிதர்களுக்கும் எமது வெளிநாட்டு நண்பர்களுக்கும் தொடர்ந்து அனுப்பி வருகிறோம். விரைவில் இந்தக் கட்டுரைகளின் தொகுப்பை இ.ம.இ.யின் கொள்கை விளக்க நூலாக அச்சிட (The manifesto of Indu Marumalarchy Iyakkam) எண்ணுகிறோம். சமசுக்கிருத மொழி, இந்தி மொழி, ஆங்கிலமொழி பற்றிய எமது கட்டுரைகள் இந்திய அரசியல்வாதிகளையும், தமிழக மக்களையும் விழிப்புணர்வு பெறச் செய்யும் என்று நம்புகிறோம்.

நம் நாட்டில் மத மாற்றுப் பணிகளும், மத ஏமாற்றுப் பணிகளும், மதச் சுரண்டல் பணிகளும், மதத் துரோக விரோதப் பணிகளும், மத வெறுப்பு மறுப்புப் பணிகளும், ...... ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு முட்டி மோதி பல குட்டிக் கலவரங்களைச் செய்து கொண்டேயிருக்கின்றன. இதனால்தான் நம் நாட்டில் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, ...... முதலிய அனைத்துமே இருள் நிறைந்தும் இன்னல் மிகுந்தும் செயலற்று உள்ளன. இவற்றிற்குப் பரிகாரம் தேட வேண்டுமென்றால் அரசியல் புரட்சிகளால் எதையும் செய்ய முடியாது. அரசாங்கத்தை மாற்றும் கட்சிகளின் மாற்றங்களால் எதையும் செய்ய முடியாது. நாட்டையாளும் ஆட்சித் தலைவர் அல்லது பிரதம அமைச்சர் முதலியவர்களின் மாற்றங்களாலும் எதனையும் செய்ய முடியாது. புதிய புதிய அரசியல் கட்சிகள் தோற்றுவிக்கப் படுவதாலும் எதையும் செய்து விட முடியாது, சமுதாயச் சீர்திருத்தக் கட்சிகளாலும் எதையும் செய்ய முடியாது, வட்டார வெறிகளைத் தோற்றுவிக்கக் கூடிய கட்சிகளாலும் எதையும் செய்ய முடியாது. இவற்றை இந்த நாட்டு வரலாற்றுச் சான்றுகளாலும், உலக வரலாற்றுச் சான்றுகளாலும் மிகமிகத் தெளிவாக உணரலாம், உணர்த்தலாம். அதாவது மதவழிப் புரட்சி ஒன்றினால்தான் ஒவ்வொரு தனிமனிதனையும் தொட்டுத் தழுவி எழுப்பி ஏட்டறிவையும் பட்டறிவையும் பெறச் செய்து மறுமலர்ச்சிப் பணியின் அங்கமாக்கிட முடியும். அப்படி மதவழி மறுமலர்ச்சிப் பணி முயற்சியால்தான் எந்தச் சமுதாயத்தையும் அரசியலையும் முறையாகவும் நிறையாகவும் வளவளர்ச்சியும் வலிமை ஆட்சியும் மிகுந்த மறுமலர்ச்சி அடையச் செய்ய முடியும். எனவேதான், இம்மாபெரும் இந்தியத் துணைக் கண்டம் என்றென்றும் ஒற்றுமையுடைய 'மாநிலக் கூட்டாட்சி நாடாக' [The United States of India] விளங்கிடுவதற்காகவே மதவழிப் புரட்சிக்கு அனைவருக்கும் அழைப்பு விடுத்து உழைக்க முற்படுகிறது இ.ம.இ. எனவே,

இ.ம.இ.யின் கொள்கை மதவழிப் புரட்சிதான்! மதவழிப் புரட்சிதான்! மதவழிப் புரட்சிதான்! மதவழிப் புரட்சிதான்!

நாட்டு மக்களிடையில் சுயநலவெறி, பேராசை, அகம்பாவம், ஆணவம், போட்டி, பொறாமை, வீம்பு, வம்பு, ...... முதலிய இழிபண்புகளும், அழிபண்புகளும் இயற்கையாகவே தன்னூற்றாக [The spontaneous flow] என்றென்றும் இருந்து கொண்டிருக்கின்றன. இவற்றை அரசாங்கத்தின் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளால் எதுவும் செய்ய முடியாது, செய்ய முடியாது, செய்ய முடியாது, செய்யவே முடியாது. ஆனால், மதத்தால்தான் மேற்படி அனைத்து வகையான இழிபண்புகளையும், அழிபண்புகளையும் குறைக்கவோ கட்டுப்படுத்தவோ முடியும், முடியும், முடியும். எனவே, மதத்தின் மூலம்தான் தனிமனிதத் தவறுகளையும் [Mistakes], குறைகளையும் [The defects], குற்றங்களையும் [Corruption, Fraud and Crime] முழுமையாகக் கட்டுப்படுத்தி நல்ல சமூக, சமுதாய சூழலை உருவாக்க முடியும். அதுவே, அரசியல் துறை நல்வாழ்வு [The Healthy Politics] உருவாக்க உதவிடும். அதாவது மதவழியால்தான் சமூக சமுதாய நிலைகளைச் சரிசெய்து அரசியல் மறுமலர்ச்சிகளை உண்டாக்க முடியும். எனவே, நாட்டின் வளவளர்ச்சிக்கும், உரிமை வீழ்ச்சிக்கும், ஆட்சிப் பெருமித உயர்ச்சிக்கும் வழிவகை செய்ய முடியும், முடியும், முடியும்.

மதத்தின் பெயரால் சோம்பேறிகளும்[The idle people or Lazy people], ஏமாற்றுக்காரர்களும்[The Cheaters], நலக்கேடு விளைவிப்பவர்களும்[The Exploiters], சதிகாரர்களும்[The Conspirators], கறுப்புச் சந்தைக்காரர்களும்[The Black Market People], கடமையாற்றாமல் தப்பிப்பவர்களும்[The Escapers], மடமைவாதிகளும்[The people of Blind Beliefs and Faiths]........ மனித சமூகத்திற்குக் கொடிய நோய்கள் போல் தொடர்ந்து துன்பம் விளைவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த நோய்க்கு மருத்துவம் பார்க்கப்படாவிட்டால்; எத்தகைய அரசியல் புரட்சிகளாலும், புதுமைத் திட்டங்களாலும் சமுதாய வாழ்விலும், குடும்ப வாழ்விலும், தனிமனித வாழ்விலும் நிலையான நன்மைகளை விளைவிக்க முடியாது, விளைவிக்க முடியாது, விளைவிக்க முடியாது, விளைவிக்கவே முடியாது!

உலக அளவில் மெய்யான மதத்தினால்தான் மனித வாழ்வுக்குரிய அகநாகரீகமும், புறப்பண்பாடும் வடிவமைப்புக்களைப் பெற்றன; வாழ்வியலுக்கேற்பப் பக்குவப் படுத்தப்பட்டன. அதே நேரத்தில் பொய்யான, போலியான, சுரண்டல்வாதியான, ஏமாற்றுக்காரரான, சூழ்ச்சிக்கார மதவாதிகளால்தான் மனித வாழ்வுக்குரிய அகப் பண்பாடும், புறநாகரீகமும் நோயுற்று நலிந்து மெலிந்து தேக்கமும் வீக்கமும் பெற்றன. இவற்றை எதிர்த்துப் போராடுவதாக எண்ணிக் கொண்டுதான் நாத்திகவாதிகளும், மதமறுப்பாளர்களும், வெறுப்பாளர்களும் மத எதிர்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இவர்களை விட்டால் வேறு வழியில்லை என்று சமுதாயத்தில் பெரும்பாலானவர்களாக இருக்கின்ற அப்பாவி மக்கள் இவர்களுக்குச் செல்வாக்கையும், அதிகாரத்தையும் வழங்க ஆரம்பித்து விட்டார்கள். அதாவது, சாத்தானைச் சர்வாதிகாரியாக்கி விட்டார்கள். அதனால், பேயாட்சியும், நாயாட்சியும் பல்வேறு இடங்களில் குறிப்பிட்ட காலங்கள் நிகழ்ந்து விட்டன. இதனால்தான், அரசியல் துறையும், அரசியல் இயந்திரமும், அரசியல் தத்துவமும், அரசியல் சித்தாந்தமும் மக்களுக்கு நன்மை செய்ய முடியாமல் போய்விட்டன. இப்படிப்பட்ட கால கட்டங்களில் மெய்யான மதவாதிகளின் மறுமலர்ச்சிப் பணிகளால்தான் சமுதாய அரசியல் நீதிகளும், நேர்மைகளும், உரிமைகளும், பெருமைகளும், சீரிய செயல் நிலைகளும் பாதுகாக்கப்-பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், மெய்யான மதத்தால்தான் தன்மான உணர்வு, சுயமரியாதை உணர்வு, கடமை உணர்வு, கட்டுப்பாட்டு உணர்வு, கண்ணிய உணர்வு, இரக்க உணர்வு, அழகுணர்வு, அன்புணர்வு, பாச உணர்வு, பற்றுணர்வு, ஒற்றுமையுணர்வு, நட்புணர்வு, கூட்டுணர்வு, பொறுப்புணர்வு, பொறுமையுணர்வு, நிதான

உணர்வு, சமாதான உணர்வு, மொழிப்பற்றுணர்வு, நாட்டுப் பற்றுணர்வு, இனப் பற்றுணர்வு, விடுதலையுணர்வு.......... முதலிய அனைத்து வகையான மானுட உணர்வுகளும் செழிப்பாக வளர்க்கப்பட்டு வருகின்றன, வளர்க்கப்பட்டு வருகின்றன, வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேருண்மையின் அடிப்படையில்தான் **'மதவழிப் புரட்சியால்தான் நாடு தழுவிய மறுமலர்ச்சிப் பணிகளையும், வளவளர்ச்சிப் பணிகளையும், தீயன ஒழிக்கும் பணிகளையும் வெற்றிபெறச் செய்ய முடியும் --- என்ற கருத்து பிறப்பிக்கப் பட்டது'.** அதாவது நாத்திகர்களாலோ, மதமறுப்பாளர்களாலோ, வெறுப்பாளர்களாலோ, சமுதாயத்திலோ, அரசியலிலோ எந்தவிதமான நிலையான ஆக்கப் பணிகளையும் செய்ய முடியாது, செய்யமுடியாது, செய்ய முடியாது, செய்யவே முடியாது என்பது தெளிவாகிறது. இன்னும் சொல்லப் போனால், மத விரோதிகளாகவும், துரோகிகளாகவும் செயல்படுகின்ற மதமறுப்பாளர்களும் வெறுப்பாளர்களும்தான் அரசியலையும் சமுதாயத்தையும் குடும்பச் சமூக வாழ்வையும் சுரண்டுகிற சூழ்ச்சிக்கார கொள்ளைக்காரர்களாகவும் எமாற்றுக்காரர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, மதவாதிகளின் பணிவும், துணிவும், கனிவும், அடக்கமும், தன்னலமற்ற பொதுநல உணர்வும் உடைய பணிகளால்தான் அனைத்து வகையான மறுமலர்ச்சிப் பணிகளும் வெற்றிபெறும், அணிபெறும். அதாவது, இந்த நாட்டுக்கு இந்து மறுமலர்ச்சி இயக்கத்தால்தான் நல்லகாலம் ஏற்படும், விடிவுகாலம் ஏற்படும், அனைத்து வகையான தீய சத்திகளும் முறியடிக்கப்படும்,

இந்தியத் துணைக்கண்டத்து மக்களைப் பொறுத்தவரை ஏறத்தாழ எல்லோருடைய நெஞ்சத்திலும், சிந்தையிலும், உணர்விலும், செயலிலும் மதம் கணிசமான அளவு வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் மதம் பற்றிய சிந்தனையோ, உணர்வோ இல்லாத மக்களே இந்தியத் துணைக்கண்டத்தில் இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை என்று கூறலாம். அதாவது, இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள எல்லா மனிதர்களும் தங்களை அறிந்தோ அறியாமலோ மதத்திற்குத் தங்களுடைய சிந்தையிலும், நெஞ்சத்திலும், எண்ணங்களிலும், உணர்வுகளிலும், உணர்வு ஓட்டங்களிலும், உயிர்த்துடிப்பு மிக்க இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதனை யாரும் மறைக்க முடியாது, மறுக்க முடியாது, குறைத்துக் கூறிட முடியாது. எனவே, சமுதாயத் தத்துவங்களும், அரசியல் சித்தாந்தங்களும், புரட்சிக் கருத்துக்களும் தொட முடியாத அளவிற்கு அனைத்து மக்களையும் தொட்டுக் கட்டித் தழுவி ஆட்சி செய்கின்ற ஒன்றாகவே இருக்கின்ற ஒரு துறை மதத் துறை ஒன்றுதான். (The Religious field is the only cure which have control over all the people of India, such that anything and everything can be preached and taught to the Indian people only by the Religion) இதற்கு இந்த நூற்றண்டின் சான்றாக எதையாவது ஒன்றைக் கூற வேண்டுமென்றால் **'ஆதவன் மறையாத பேரரசாக அகிலம் முழுவதும் காலனி ஆதிக்கத்தைப் பெற்றிருந்த ஆங்கிலப் பேரரசை வெற்றி கண்ட இந்திய நாட்டின் தந்தை அண்ணல் மகாத்மா காந்தி அடிகளார் அவர்கள்; இமயம் முதல் குமரி வரை இரண்டாயிரம் மைல்களுக்கு மேற்பட்ட நீண்ட பெரிய புவிப்பரப்பில் வாழ்ந்த 30 கோடிக்கும் மேற்பட்ட மக்களை எல்லாம் விடுதலைப் போருக்காக ஒன்று திரட்டியது மதவழிச் சிந்தனையாலும், போதனையாலும்தான். இன்னும் சொல்லப் போனால் அண்ணல் மகாத்மா காந்தி தொடுத்த விடுதலைப் புரட்சியின் வெற்றி ஒரு மதவழிப் புரட்சியின் வெற்றியேயாகும்.'** எனவே, இந்தியத் துணைக்கண்டத்தில் ஒற்றுமைக்கும் கட்டுப்பாடான கூட்டாட்சிக்கும், பொருளாதாரச் சமத்துவ வளர்ச்சிக்கும், சமுதாயச் செழிச்சிக்கும், அரசியல் நேர்மைக்கும், மொழிவிடுதலைக்கும், இனவிடுதலைக்கும், சமுதாய நல்வாழ்வுக்கும், குடும்ப வாழ்வின் நிறைவுக்கும், தனி மனித வாழ்வின் வெற்றிக்கும், ஆன்மீக வாழ்வின் ஒருமைப்பாட்டுக்கும், உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டின் உருவாக்கத்திற்கும், பொதுவாக இந்திய மக்களுடைய நட்புறவு மிக்க நல்லுறவு வாழ்க்கை வலிமைப்

படுவதற்கும் மதவழிப் புரட்சிதான் தேவை! தேவை!! தேவை!!! மதவழி மறுமலர்ச்சிதான் தேவை! தேவை!! தேவை!!!

இந்த உலகிலேயே எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு அனைத்து வகையான மதங்களும் ஏறத்தாழச் சம அளவு வசதி, வாய்ப்பு, வளம், வலிவு, பொலிவு, ஆட்சி முதலியவைகளைப் பெற்றிருக்கக் கூடிய ஓர் அரிய நாடு உண்டென்றால், அது, நமது இந்தியத் துணைக்கண்டம்தான். அதுவும் மதமாற்றத்தின் பெயரால் வெளிநாட்டார்கள் மறைமுகமாகவும் நேரடியாகவும் மிகப் பெரிய பொருளாதாரப் போர்களைப் புரிந்து கொண்டிருப்பது இந்திய நாட்டில்தான். இன்னும் சொல்லப் போனால் இந்த இந்திய நாட்டிற்குரிய இந்து மதம்தான் கேலிக்கும் கிண்டலுக்கும் சிதைவுக்கும் சீரழிவுக்கும் பகைப்புக்கும் நகைப்புக்கும் உள்ளாகி நலிந்து மெலிந்து நோயுற்றுத் தேய்ந்து மாயும் நிலைகளைப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம், இந்திய நாட்டு மக்கள் மிக எளிதாக மதத்தின் பெயரால் கணிசமான அளவு அன்னியர்களின் கங்காணிகளாகவும், கூலிகளாகவும் மாறி இந்துமதத்தின் துரோகிகளாகவும், விரோதிகளாகவும் செயல்படுகிறார்கள். இது. நம்நாட்டு மக்களின் அப்பாவித் தன்மையாலும், அறியாமையாலும், ஏமாளிப் பண்பாலும் விளைந்துள்ள மதவெறியாலேயே நிகழ்கின்றது. எனவே, இந்த மதவெறியை நெறிப்படுத்தி ஒரு கட்டுக் கோப்புக்குள் கொண்டு வந்து முறைப்படுத்த வேண்டும், அதற்கு **“முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்”** என்ற பழமொழிப்படி இந்தியத் துணைக்கண்டத்தில் **‘மதவெறியால்தான் அனைத்து வகையான பிற்போக்கு நிலைகளும் வெறிநிலையை அடைந்துள்ளன’**, என்ற கருத்துக்கு மதிப்பளித்து பகுத்தறிவுப் பூர்வமான மதவழிப் புரட்சியால் [“The rationalistic Religious Revolution in India can alone solve the social problems. Since, the religion of India namely, the Induism (not the Hinduism) is purely a social Science. But the political leaders are not aware of this fact, because they are the mongers of fame, property and all sorts of pleasures, such that they do not want to solve any problems and they themselves are problemative and problems to this society. So, only the religious heads can alone help the people to put an end to the chaos, all the disorders and distress. I myself feel ashamed as a politician to say that most of the Indian politicians and the leaders are culprits, criminals, corruptives, betrayers, conspirators and anti-social welfare elements. So, anyhow only the Religious heads can redeem the India. But the power-mongering politicians have already done all the ills and evils, havocs and demolitions to the religion of India. So, it is very clear that only the Religious Revolution can alone redeem and save India..........” எ taken from the writings of Mr M P Pillai from the ‘The Discovery of Tamilnadu’ and ‘The Discovery of the Induism’) தான் அனைத்து வகையான பரிகாரங்களையும் செய்து இந்திய நாட்டிற்கு நல்வாழ்வை நல்க முடியும். ஏனெனில், ஓர் அரசியல்வாதியான நானே வெட்கத்தோடும் நாணத்தோடும் **‘இந்தியாவின் அரசியல் வாதிகளால்தான் அனைத்து வகையான சமூக நல விரோதச் செயல்களும் துரோகச் செயல்களும் நிகழுகின்றன’** என்று வெளிப்படையாகவே குற்றம் சாட்ட வேண்டியிருக்கிறது. ஏனெனில், இந்தியாவின் பெரும்பாலான அரசியல்வாதிகள்தான் குற்றவாளிகளாக, ஊழல்பேர்வழிகளாக, சதிகாரர்களாக, காட்டிக் கொடுக்கும் துரோகிகளாக, சமூக நல விரோதத் தீய சத்திகளாக இருக்கிறார்கள். எனவே, மதத்தின் தலைமைப் பீடங்களாக, குருபீடங்களாக, நாயகங்களாக, ஆச்சாரியார்களாக, ....... இருக்கிறவர்களின் பெருமுயற்சியால்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும். அதாவது, **‘இந்த நாட்டைப் பொறுத்தவரை மதவழிப் புரட்சியால்தான் அனைத்து வகையான தீமைகளும் அகற்றப்பட்டு எல்லாவிதமான நன்மைகளையும் விளைவிக்க முடியும். எனவே, இந்த நாட்டுக்குரிய மதத்திற்கு முழுமையான முதன்மையான ஆட்சி நிலைகளும், உரிமை நிலைகளும், பெருமை நிலைகளும் உடனடியாக வழங்கப் பாட்டாக வேண்டும். அதுதான்**

**இந்த நாட்டின் மறுமலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும், வலிமைச் செழிச்சிக்கும் வழிவகுக்கும்'.** ஆனால், இந்த நாட்டின் அரசியல்வாதிகள் இந்த நாட்டின் மதத்தைக் குத்திக் கொலை செய்திருப்பது பற்றிக் குருதிக் கண்ணீர் வடிய வடியக் கூற வேண்டியதையெல்லாம் அடக்கிக் கொண்டு ஒரே ஓர் அண்டை நாட்டு அரசின் நிகழ்ச்சிப் போக்கை மட்டும் இங்கு குறிப்பிட்டு அனைவரையும் சிந்திக்க அழைக்கிறோம் யாம் இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர் என்ற முறையில். அதாவது, நாம் தனி நாடாக உரிமை பெற்ற போதுதான் பாகிசுத்தானும் [The Pakistan] தனி நாடாக உரிமை பெற்றது. ஆனால் அந்த நாடு தனது நாட்டை தனது மதத்திற்குரிய இசுலாமிய நாடு என்று உடனே அறிவித்தது. தனது இசுலாமிய மதக் கொள்கைகளையும் கோட்பாடுகளையுமே தனது அரசியல் சட்டமாக்கிற்று; தனது மதத்தின் மொழியான உருதுமொழிக்கே அனைத்து வகையான ஆட்சி நிலைகளையும் வழங்கிற்று; திருக்குரானில் கூறியுள்ளபடி அனைத்து வகையான சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளையும் மரியாதையோடு சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்டது; அந்நாட்டின் கல்வித்துறையையும், கலைத்துறையையும் இசுலாமியப் பண்பாட்டின் பாதுகாப்பிற்கும் வளவளர்ச்சிக்கும் உரித்தாக்கிற்று. ஆனால், நம்நாட்டிலோ; 'இந்து மதத்திற்குரிய நாடுதான் இந்தியா' என்று பெயரிடப்பட்டது என்ற பேருண்மை மறைக்கப்பட்டு விட்டது. இன்றுள்ள பொய்யான ஹிந்துமதத்தின் வட ஆரிய மாயைகளையும் சமசுக்கிருத வெறிகளையும் அகற்றி மெய்யான இந்து மதத்தையும் அதன் மொழியான தமிழ்மொழியையும் உரிமையோ பெருமையோ பெறச் செய்ய வில்லை. மெய்யான இந்துமதத்தின் மூல நூல்களான குருபாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், தருவாக்கு, தருவாக்கியம், தருவாசகம், குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், திருவாக்கு, திருவாக்கியம், திருவாசகம், கருவாக்கு, கருவாக்கியம், கருவாசகம், ...... எனப்படும் 48 வகையான இலக்கியங்களும் 27 வண்ண இலக்கியங்களும் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப் படவில்லை; நமது கலையும் கல்வியும் நமது பண்பாட்டைச் சிதைத்துச் சீரழிப்பனவாக்கப் பட்டுவிட்டன; நமது மதமும் மக்களும் அன்னியர்களின் வேட்டைப் பொருளாக்கப் பட்டுவிட்டன; இதற்குக் காரணம் சுயநலக்கார பேராசை வெரி பிடித்த புகழ்வெறியர்களான அரசியல் வாதிகளே! அரசியல் வாதிகளே!! அரசியல் வாதிகளே!!! ........... எனவேதான், மதவழிப் புரட்சியால்தான் இந்த நாட்டிற்கு விடிவுண்டு, விடிவுண்டு, விடிவுண்டு, இதுவே நமது முடிவு.

**சிறப்புக் குறிப்பு:**

தமது கடைசிக் காலத்தில் மகா அலெக்சாந்தர், பேரரசர் அக்பர், மாமேதை அம்பேத்கார், ....... முதலிய மூவருமே மதத்தின் அருமை பெருமைகளை உணர்ந்து மதவழிச் செயல்பட ஆரம்பித்தார்கள்; முழுமையான வெற்றி பெறவில்லை. ஆனால், நிலைத்த புகழ் கிடைத்தது. அதே வேளையில் மாமன்னன் சாம்ராட் அசோகன் குறுகிய காலத்தில் மதவழிப் புரட்சியில் ஈடுபட்டதால் இம் மண்ணுலகம் மாண்டாலும் மாளாத மாபெரும் சாதனைகளைச் சாதித்துச் சென்று விட்டார். இம்மாபெரும் உண்மை ஒன்றே போதும், இந்நாட்டிற்கு விடிவைவளிக்கக் கூடியது மதவழிப் புரட்சிதான்! மதவழிப் புரட்சிதான்! மதவழிப் புரட்சிதான்! மதவழிப் புரட்சியேதான்! எனவேதான், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை மிகத் தெளிவாக மதவழிப் புரட்சியை நம்புவதாகவும், விரும்புவதாகவும் கூறப்படுகிறது. ஆனால், இந்த மதவழிப் புரட்சி அன்பு வழியில், அறவழியில், அமைதி வழியில், சமாதான வழியில், நிதானப் போக்கில் ஆக்க நோக்கில், அருள் நெறிப்படிதான் நிகழ்த்தப் படும், நிகழ்த்தப்படும், நிகழ்த்தப்படும் என்பது உறுதி! உறுதி! உறுதி! உறுதியேயாம்.

--- சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர்

ம. பழனிச்சாமி பிள்ளை

காக்கா வழியன் பண்ணையாடி

முடிகணம் எனும் முடிகண்ட சோழபுரம்
கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்

15- 8- 1959

இந்து மறுமலர்ச்சி இயக்கமும்,

அருட்பணி விரிவாக்கத் திட்டமும்

# செயல் திட்ட அறிக்கை

இன்றைய நாட்டு நடப்பில் படித்த வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை தொடர்ந்து ஆற்றுவெள்ளம் போல் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. வறுமையைக் காரணம் காட்டி பிச்சை எடுப்பவர் கூட்டமும், முதுமையை சான்றாகக் காட்டிப் பிச்சை எடுப்பவர் கூட்டமும், நோயை முதலாக வைத்து பிச்சை எடுப்பவர் கூட்டமும் பெருகிக் கொண்டே வருகின்றது. பல தனியார் நிறுவனங்கள் மிகப் பெரிய அளவில் விளம்பரங்களைச் செய்து மக்களிடமிருந்து பணத்தை உறிஞ்சும் அட்டைப் பூச்சிகளாக விளங்கி வருகின்றன. அரசுத் துறையில் பணிபுரிபவர்கள் அனைவருமே மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை இலஞ்ச ஊழல் பேர்வழிகளாக இருந்து வருகிறார்கள்.

இவற்றிற்கெல்லாம் மேலாக இந்நாட்டு அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள், எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காணும் அடிப்படைக் கொள்கையோ, குறிக்கோளோ, செயல்திட்டமோ இன்றி சுயநல வாதிகளாக, தன்னல வெறியர்களாக, மக்களைப் பற்றிய சிந்தனையே அற்றவர்களாக; கிடைக்கும் வரை இலாபம் என்ற போக்கில் மக்களைச் சுரண்டி சமுதாயத்தையே சீரழித்துக் கொண்டு வருகிறார்கள்.

இப்படிச் சீர்கெட்டு வரும் சமுதாயத்தைப் பெற்றிய சிந்தனை யாரிடத்தும் எழாத வண்ணம் பார்த்துக் கொள்ளும் பணியில் பொழுதுபோக்கு சாதனங்களும் போதைப் பொருட்களும் பெரும்பங்கு ஆற்றி வருகின்றன. இவற்றை ஊக்குவிப்பதில் அதாவது, இந்தக் கேவலமான சமுதாயத்தின் இழிநிலைகளை, பழிநிலைகளை மூடி மறைப்பதில் இந்நாட்டு பத்திரிகைத் துறை தன்னிகரில்லா ஆர்வம் காட்டி வருகிறது.

இப்படி, இந்த ஒட்டு மொத்தச் சமுதாயமே சீழ் பிடித்த புண்ணைப் போல் புரையோடிப் போய்விட்டிருக்கும் நிலையில் இங்கு சமுதாயச் சீர்திருத்தம் என்பதோ, சமுதாய சீரமைப்பு என்பதோ, சமுதாய புனரமைப்பு என்பதோ தண்ணீரில் எழுதிய எழுத்துக்களைப் போலவே அமையும். எனவே, இங்கு ஒரு முழுமையான சமுதாய மாற்றத்தை [The Total Social Change] ஏற்படுத்துவது மிக மிக அவசியமானதும் இன்றியமையாததுமாகும்.

எனவே, இங்கு மக்களின் அன்றாடத் தேவைகளை முன்னிட்டு நடத்தப்படும் போராட்டங்கள் பயனற்றதாகவே இருக்கும், அப்படியே ஒரு சில போராட்டங்கள் வெற்றி பெற்றாலும் அவை திடீரெனத் தோன்றி மறையும் வானவில் போன்றதாகவே அமையும்.

ஆகவே, முழுமையான சமுதாய மாற்றத்தை உருவாக்க வேண்டுமேயானால், ஒவ்வொரு தனிமனிதரிடத்தும் எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சி, கருத்துப் புரட்சி, ... முடிவில் பண்பாட்டுப் புரட்சி ...... முதலியவைகளை உண்டாக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு தனிமனிதரையும் சுயநலமில்லாதவர்களாக, தன்மானப் பிடிப்புள்ளவர்களாக, இனமான உணர்வுள்ளவர்களாக, நாட்டுப் பற்றுள்ளவர்களாக, பண்பாட்டுப் பாரம்பரிய உரிமையுணர்வுள்ளவர்களாக, விடுதலை வேட்கை உள்ளவர்களாக ......... தயாரிக்க வேண்டும்.

இப்படிப் பட்ட ஒரு மாபெரும் பணியை இவ்விந்திய நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் ஆற்றக் கூடிய, சாதிக்கக் கூடிய ஒரே ஆயுதம் இந்தியர்களின் மதமான, தமிழர்களின் மதமான இந்து மதமேயாகும்.

எனவேதான், மதத்தை மறுத்தும், வெறுத்தும் செயல்பட்டிட்ட சில மேலைய நாட்டுப் பொருள்முதல்வாதக் கட்சிகள் தொடர்ந்து 60 ஆண்டுகளுக்கு மேலாக தோல்வியையே தழுவி வருகின்றன.

நாம் அவர்களுக்குப் பதில் சொல்வதற்கு முன் நம்மை நாமே அதாவது, நமது மதத்தை, அதாவது, பதினெண்சித்தர்களின் உண்மையான இந்துமதத்தை வடிவப் படுத்திக் காட்ட வேண்டும்; அதாவது, பிருமணர்களின் பொய்யான ஹிந்து மதத்திலிருந்து நம்முடைய மெய்யான இந்து மதத்தைத் தரம் பிரித்துக் காட்ட வேண்டும்; அதாவது, போலி மதவாதிகளிடமிருந்தும், கூலி மதவாதிகளிடமிருந்தும் வேறுபடுத்திக் காட்ட வேண்டும்.

இதற்காகத்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கமும், அருட்பணி விரிவாக்கத் திட்டமும், மற்றும் பதினெட்டுக்கும் மேற்பட்ட கிளை அமைப்புக்களும் பாடுபட்டு வருகின்றன.

இவை, பதினெண் சித்தர்களின் கொள்கைகளையும், தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும், ......... செயலாக்கிட அதாவது மெய்யான இந்து மதத்துக்கு மறுவாழ்வு அளித்திடத் தமிழகத்தையே முன்மாதிரியாக, விதைப் பண்ணையாக, நாற்றங்காலாக எடுத்துக் கொண்டுள்ளது.

மேலும், மதம் ஒரு சமூக விஞ்ஞானமே (Religion is a Social Science) என்பதை பகுத்தறிவு ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் அனுபவப் பூர்வமாக மக்களுக்கு மெய்ப்பித்துக் காட்டி வருகின்றது.

எனவே, ஒரு முழுமையான சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் மாபெரும் மகத்தான பணியில் ஈடுபட்டுள்ள இ.ம.இ.யில் சேருபவர்கள் எப்படிப் பட்டவர்களாக இருக்க வேண்டும்? இதற்கு முன்பு தமிழ்ப் பேரரசு வீழ்ச்சியடைந்ததற்குக் காரண மென்ன? மீண்டும் தமிழர் சமுதாயம் விழிச்சியும் எழிச்சியும் பெற்று சித்தர்களின் ‘சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ தமிழகத்தில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் என்னென்ன? எந்தெந்த வழிமுறைகளில் அதை வென்றெடுக்க வேண்டும்? வென்றெடுக்கக் கூடியவர்கள் தரம், திரம், திறம், தீரம், வீரம், அறம், உரம், மறம், ........ முதலியவைகளைப் பெறுவதற்கான பயிற்சிகளும், முயற்சிகளும் என்னென்ன? .......... என்பதைப் பற்றிய ஒரு முழுமையான தெளிவான கருத்தோட்டம் இக்கொள்கை விளக்கம் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. இதனைப் புரிந்தும் புரியவைத்தும் தமிழர் சமுதாயம் செயல்படுவதாக!

அதாவது, எந்தவித மதச் சார்பும் இல்லாமல்; மதத்தின் கூறுபாடுகளும் இல்லாமல் முழுக்க முழுக்க சமுதாய உணர்வு, மொழி உணர்வு, பொருளாதார நோக்கு, பகுத்தறிவுப் போக்கு, அரசியல் நாட்டம், ......... முதலியவைகளுக்காக மட்டுமே உழைக்க முன்வருபவர்களாக குறிப்பிட்ட மக்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். இவர்கள் புராண இதிகாசங்கள், கோயில்கள், விழாக்கள், சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகள், பூசாவிதிகள், பூசாமுறைகள், மதச் சின்னங்கள் ......... முதலியவற்றின் மீது கடுமையான மறுப்பும், வெறுப்பும் உடையவர்களாக வாழுகிறார்கள். எனவேதான், இவர்களையெல்லாம் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு என்ற முக்கோணக் கோட்டையை வலிமைப் படுத்தும் சமுதாய வாதிகளாக அரசியல் வாதிகளாக உருவாக்கிடுவதற்காகவே ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ என்ற அமைப்பு உள்ளது. அதாவது, இந்த அமைப்பில் உள்ளவர்கள் சன்னிதானப் பட்டம் பெறவோ, சன்னிதான உடையணியவோ, இந்துமத வளவளர்ச்சிப் பணிகளில் ஈடுபடவோ அருட்துறையின்

வாழ்வைப் பெறவோ தேவையில்லை! தேவையில்லை!! தேவையில்லை!!! தேவையேயில்லை என்ற நியதி வகுக்கப் பட்டுள்ளது. ஆனுல், இவர்கள் இ.ம.இ.யின் தலைவர்களாகவோ! நாயகங்களாகவோ! முன்னணிச் செயல்வீரர்களாகவோ! ............... உயர வேண்டுமேயானுல், தங்களுடைய அளவிலாவது அ.வி.தி. முறைகளைப் பின்பற்றி அருளுலகப் பயிற்சிகளையும், முயற்சிகளையும் செய்து சன்னிதானங்களைச் சித்தி பெற்றவர்களாகவே இருக்க வேண்டும். இல்லாவிட்டால், இவர்களும் மற்ற அரசியல்வாதிகளைப் போல் பட்டம், பதவி, பணம், புகழ் ........ முதலியவற்றிற்காகக் கட்சி மாறிகளாகவும், இனத் துரோகிகளாகவும், மொழி விரோதிகளாகவும், நாட்டை அன்னியருக்கு விற்பனை செய்யும் வியாபாரிகளாகவும் மாறிவிட நேரிடும். அதாவது, பிற்காலச் சோழப் பேரரசின் மன்னர்கள் அருளுலகப் பயிற்சிகளையும், முயற்சிகளையும், தேர்ச்சிகளையும் பெற்றவர்களாக உருவாக்கப்படாத காரணத்திஞல்தான் அவர்கள் அன்னியர்களான பிருமணர்களுக்கும் அவர்களின் மொழியான சமசுக்கிருதத்திற்கும் அடிமையாகி விட்டார்கள். அதஞல்தான் இந்துமதமும் அதன் நிறுவன நிர்வாகங்களும் பிருமணர்களின் கைக்குப் போய் பொய்யான ஹிந்துமதமும் வளர்ச்சி பெற்றது. அதனுல், சோழப் பேரரசும் வீழ்ச்சியுற்றது. எனவேதான், இ.ம.இ. பொருளுலகக் கண்ணோட்டத்திலும் (The materialistic view) பகுத்தறிவுக் கண்ணோட்டதிலும் (The Rationalistic attitude) வளருகின்ற ஒரு சமுதாய இயக்கமாக இருந்தாலும் அதன் உள்ளீடாகவும், உயிராகவும், முடிவாகவும் இருப்பது அ.வி.தி.யேயாகும். அதாவது, மதவாழ்வு வாழக் கூடியவனுல்தான் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாட்டுப் பிடிப்பு, தன்னலமற்ற போக்கு, பொதுநல நோக்கு, சமத்துவச் சகோதரத் தத்துவ உணர்வு முதலியவைகளைப் பெற்றிட முடியும், பெற்றிட முடியும், பெற்றிட முடியும். எனவேதான், யாராக இருந்தாலும் முதலில் இ.ம..இ.யில் சேர்ந்து பணியாற்றிஅ வேண்டும்; அதன் பிறகே இவர்களுடைய தரம், தீரம், வீரம், உரம், அறம், மறம், திறம், பக்குவம், பண்பாடு, மொழியுணர்வு, இன உணர்வு, நாட்டுணர்வு, தன்மானப் பிடிப்பு, பொதுநோக்கு, சமத்துவப் போக்கு, ........ முதலிய பண்புகளை எடையிட்டு இவர்களை அ.வி.தி.யில் சேர்த்துக் கொள்ள முடியும். அ.வி.தி.யில் சேருகின்றவர்கள் முதலில் தங்களை அருளாளர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். பிறகு, அடுத்தவர்களையும் அருளாளர்களாக ஆக்குகின்ற ஆற்றலையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்தகையவர்களே பண்பாட்டுப் புரட்சியின் நாயகர்களாக, தளபதிகளாக, முன்னணி வீரர்களாக ஏற்கப் படுவார்கள்! ஏற்கப் படுவார்கள்!! ஏற்கப் படுவார்கள்!!! இதுதான் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதிஞேராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களும், அவருடைய திருமகன் கருவூர்த் தேவரும், பேரன் திருமாளிகைத் தேவரும் வழங்கிய கொள்கை விளக்கம். இதையேற்றுப் போற்றியும் முழுமையாகப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படக் கூடியவர்கள்தான் பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான ‘சீவநெறி’ யெனும் இந்துமதத் தத்துவத்தை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும் ஆட்சி மீட்சியும் அடையச் செய்ய முடியும்.

---- கண்டப்பக் கோட்டைச் சித்தர்,
ஏளனம் பட்டியார் **உ. இராமசாமிப் பிள்ளை.**

---

# கொள்கை விளக்கம்

## இ.ம.இ.யும், அ.வி.தியும்

இ.ம.இ.யில் சேருபவர்கள் சன்னிதான உடையணிந்து அ.வி.தி. பணியாற்ற வேண்டிய கட்டாயம் இல்லை. ஆனால், அவரவர் வீட்டில் சன்னிதான உடையணிந்து பூசைகள் செய்து சித்திகளைப் பெற வேண்டும். இல்லாவிடில், பிற்காலச் சோழப் பேரரசு போல் வீழ்ச்சி அடைய நேரிடும். ஆனால், பொது இடங்களில் இவர்கள் அ.வி.தி. பணியாற்ற வேண்டிய தேவையில்லை. அதாவது, சமுதாயத்திலும், அரசியலிலும் தலைவர்களாகவும், தளபதிகளாகவும், செயல்வீரர்களாகவும், வழிகாட்டிகளாகவும் உருவாகின்றவர்கள்; வாழையடி வாழையாக இருந்து வரும் சமயத் தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும் அநுபவப் பூர்வமாக உணர வேண்டும். இதற்காக அறிவுப் பூர்வமாகவும் (ஏட்டறிவு = Theory) அநுபவப் பூர்வமாகவும் (பட்டறிவு = Practical) ஆரம்பக் காலத்திலிருந்து கற்றும், ஏற்றும், நோற்றும் (நோற்று = தக்க குரு வழியாக உணர்தல் → இட்டும், தொட்டும், சுட்டியும் விளக்கப் படுதல்) போற்றிப் பயன்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தரம், திரம், தீரம், வீரம், அறம், மறம், திறம், ......... முதலிய அனைத்தும் இல்லாத போலிகள், காலிகள், கூலிகள், கருங்காலிகள், சுயநல வெறியர்கள், சமூக விரோதிகள், சமயத் துரோகிகள் ........... முதலியவர்கள் சூழ்ச்சியாகவோ எதிர்பாராமலோ தலைவர்களாகி ஒரு நூற்றாண்டையே வீணாக்கி விடுவார்கள். இப்படித்தான், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் தோற்றுவித்த பிற்காலச் சோழப் பேரரசர்களில் பலரும் காலப் போக்கில் பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான சீவ நெறியெனும் மெய்யான இந்துமதத்தில் ஏட்டறிவும், பட்டறிவும் இல்லாதவர்களாகி விட்டார்கள். அதனால் அவர்கள், அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழியான அமுதத் தெய்வீகத் தமிழ்மொழியில் உள்ள பூசாமொழி வாசகங்களைக் கூறிப் பூசைகளைச் செய்து அநுபவப் பூர்வமாகச் சத்தி சித்திகளைப் பெற முடியாதவர்களாகி விட்டார்கள். எனவே, அவர்கள் பிறமண்ணினரான பிரும்மணர் எனும் வட ஆரியர்களின் பொய்யான ஹிந்து மதத்தையே ஏற்றுச் செயல்பட்டிட்டார்கள். அதனால், அவர்கள் அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அமுதத் தெய்வீகத் தமிழ்மொழியை மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும் செயல்பட்டு விட்டார்கள். அவற்றின் விளைவாகவே, தமிழர்களின் இனப்பற்று, இன ஒற்றுமை, இன ஒருமைப்பாடு, நாட்டுப் பற்று, மொழிப்பற்று, மொழியுரிமை, தன்மானப் பிடிப்பு, இனமான உணர்வு, விடுதலையுணர்வு முதலிய அனைத்தும் சிதைந்து, சீரழிந்து, நசிந்து அன்னியர்களையே தங்களுடைய தலைவர்களாக, தளபதிகளாக, ஆச்சாரியர்களாக, குருபீடங்களாக, சாத்திரிகளாக, இலக்கியக் கலைஞர்களாக, கலியுகத் தலைவர்களாக ஏற்றுப் போற்றிடும் அவலக் கேவல நிலைகள் வளர்ந்திட்டன. இன்னும் சொல்லப் போனால், தமிழினத்துக்கென்று சமயப் பிடிப்போ, சமுதாயக் கட்டுப்பாடோ, அரசியல் உணர்வோ உருவாக முடியாமலேயே போய்விட்டது. அன்னியர்களுக்கும், அன்னிய மொழிகளுக்கும் அடிமையாகி விட்ட சோழப் பேரரசர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழகத்தில் சமுதாய ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ நல்ல பாரம்பரியத் தலைவர்கள் ஏறத்தாழத் தோன்றவே முடியவில்லை என்று கூறத்தக்க அளவிற்கு வரலாறு இருக்கிறது. எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்துக்கென்று உருவாகின்ற தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர், பேச்சாளர், கலைஞர்கள்........ எனப்படும் அனைவரும் கட்டாயமாக அன்றாடம் மெய்யான இந்துமதத்திற்குரிய வழிபாட்டு முறைகளில் மெய்யான பத்தியோடு தூய்மையும், வாய்மையும் உடைய பூசைகளைச் செய்ய வேண்டும். அவரவர் வீட்டிற்குள்ளாவது, அல்லது குருதேவர் நிகழ்த்தும் நேரடிப் பூசைகளிலாவது சன்னிதான உடையில்லாமல் செயல்பட்டார்கள் என்ற நிலை கூடாது! கூடாது!! கூடாது!!! கூடவே கூடாது.

ஏனெனில், இ.ம.இ.யின் புரட்சித் தத்துவமும் அருளாட்சி அமைக்கும் செயல் சித்தாந்தமும் முழுக்க முழுக்க மதவழிப் புரட்சியாக, மதவழி மறுமலர்ச்சியாக, மதவழி எழிச்சியாக, மதவழிக் கிளர்ச்சியாக............ நிகழ வேண்டும், நிகழ வேண்டும், நிகழ வேண்டும், நிகழ்ந்தேயாக வேண்டுமென்பதுதான். எனவே, இ.ம.இ.யின் முன்னணியில் உள்ளவர்கள் உலகியலாகச் சன்னிதான உடையணியத் தேவையில்லை; செவ்வாடை அணியத் தேவையில்லை - என்ற விதிவிலக்கு வழங்கப் பட்டாலும்; சன்னிதானப் பட்டம் பெற்றவர்கள் என்கிற முறையில் அன்றாடம் ஒருமுறை சித்தர் நெறிப்படி பூசை செய்பவர்களாகவும்; அந்தந்த வட்டாரத்தில் நடக்கும் அமாவாசை வேள்வி, பருவபூசை முதலியவைகளில் கலந்து கொண்டு அருள் பெற்றுக் கொள்பவர்களாகவும்;...... வசதி வாய்ப்புக்களுக்கேற்பக் குருதேவரிடம் அணுக்கத் தொண்டு புரிந்து குருதேவரால் இட்டும், தொட்டும், சுட்டியும் அருள் வழங்கப் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். இதுதான் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் குருவாணை. இதுவே அருளாட்சி ஆணை.

எனவே, இதனை நம்மவர்கள் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட்டேயாக வேண்டும். அதாவது, இ.ம.இ.யும்; அ.வி.தி.யும் நமது மெய்யான இந்துமதத்தின் இருகண்ணாக, இரு கையாக விளங்கிட வேண்டும். இ.ம.இ. உலகியலாகவும்; அ.வி.தி. முழுக்க முழுக்க மதவழியாகவும் செயல்பட்டேயாக வேண்டும்.

இதுகாறும், தோன்றிட்ட கட்சிகளைப் போல் (கழகம், இயக்கம்) நமது இயக்கமும் விரைந்து வளர வேண்டும்; மக்கள் செல்வாக்கைப் பெற வேண்டும்; ஆட்சிநிலைகளைப் பெற வேண்டும் என்று யாரும் ஆசைப்பட்டு நமது மதவழிப் புரட்சியை, மதவழிச் சிந்தனையை, மதவழி அருளாட்சி அமைப்புப் பணியை அச்சத்தாலோ, கூச்சத்தாலோ, இச்சையாலோ குறைத்தும், மறைத்தும் செயலாக்கிடக் கூடாது, எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை.

---- சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமிப் பிள்ளை

குறிப்பு:- தனிமனிதர்கள் தங்களின் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப ஆதரவாளர்களாகவோ, ஏந்தாளர்களாகவோ இருந்து இ.ம.இ. பணியில் மட்டும் ஈடுபடலாம். ஆனாலும், இவர்கள் அ.வி.தி. பணிகளுக்குத் துணைவர்களாகவும், பாதுகாவலர்களாகவும் இருக்க வேண்டும். இதுவே, அருளாட்சி ஆணை, குவலய குருபீடத்தின் ஆணை.

---

## பதினெண் சித்தர்களின்
## அருள் வழங்கு முறைகள்

மெய்யான இந்து மதம், கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில், மூலப் பதினெண் சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புக்களாலும் 43,73,087 (கி.பி.1986இல்) ஆண்டுகளுக்கு முன் தமிழ்மொழியில் தோற்றுவிக்கப் பட்டது. இம்மதம் ஒவ்வொரு மனிதரும் அருளை அநுபவப் பொருளாகப் பெறுவதற்காக வழங்கிய **'அருட்சினை மந்திரமும்', 'காயந்திரி மந்தரமும்', 'காயந்திரி மந்திரமும்'** மீண்டும் மக்களுக்கு நினைவுபடுத்தி வழங்கப் படுவதோடு; பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தங்களின் அருள்வழங்கு திருவுலாவில் மக்களுக்கு எப்படி அருள் வழங்குகிறார்கள் என்ற முறையும் விளக்கப் படுகிறது.

## தலைவனையறிந்து தன்னையறியப் பயன்படும்
## அருட்சினை மந்திரம்

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயே உனை வாழ்த்தி வணங்குகின்றேன்.
ஏனோவாகி இன்னல் பல்லாற்றானும் உழல்பவர்க்கு
நானாகிய அடியேன் நலம் வேண்டுகின்றேன்
தானாகவே தழல்தரு கொடுமைமிகு துயரமெல்லாம்
வீணாகி விலகியோடி ஒழியட்டும்"

எந்த வழிபாட்டிலும் அருளுலகத்தாரிடமிருந்து அருளைப் பெறுவதற்காகக் கூறும் பூசை மொழியே இந்த 'அருட்சினை மந்திரம்'.

## தன்னையறிந்து தலைவனையறியப் பயன்படும்
## அருளூறு காயந்திரி மந்தரம்
## (சத்தி காயந்திரி மந்தரம்)

ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!
தத்துவ வித்துக்கள் அரணாகுக!
பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்!
தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!

ஒவ்வொருவரும் அன்றாடம் தனித்துப் பூசைகளில் நூற்றெட்டு முறை ஓதி அருளைப் பெறும் காயந்திரி மந்தரம்.

## தலைவனுக்குள் தன்னை நிறுத்தித் திரம் (வலிமை) பெற்றிடுவதற்காக ஓதும்
## அருளூறு காயந்திரி மந்திரம்
## [சத்தி காயந்திரி மந்திரம்]

ஓம் சத்தியே காத்தாயி அயனுய வித்தின் மகவே
வாலையே கன்னியே குமரியே நங்கையே தீயென மலர்ந்திடு
தீயே உன்னோடு தூர்த்திடு பிறச்சினை யாவும்
தாயே என்னோடு உயிரினப் பயிரினக் காப்பு வழங்கிடு

தனித்தும், பிறரோடு கலந்தும் அன்றுடம் பூசைகளில் 108 முறை ஓதி அருளுலகத் திரத்தை (வலிமையை) வளர்த்துக் கொள்ள உதவுவதே இந்தச் சத்தி காயந்திரி மந்திரம்.

## அருள் வழங்கு முறைகள்

தமிழகம் எங்கனும் இந்து மதத் தந்தை அருளாட்சி நாயகம் **குவலய குருபீடம் ஞாலகுரு சித்தர் கருவூருரால்** ஞானமும் அருளும் வழங்கும் திருவுலா நிகழ்ந்து வருகின்றது. கபாடபுரத்துக் கருவூருரும் அமராவதியாற்றங்கரைக் கருவூருரும், 1.அனுதி மகா சத்தி, 2.ஆதி மகாசத்தி, 3.அனுதி பராசத்தி, 4.ஆதி பராசத்தி, 5.அனுதி சத்தி, 6.ஆதி சத்தி, 7.பராசத்தி, 8..மகாசத்தி, 9.சத்தி எனும் ஒன்பது வகை ஆத்தாள்களும் எண்வகை ஆச்சாரியர்களும் இவ்வுலாவில் பங்கு கொண்டு வருகிருர்கள்.

பொது மக்களுக்கும், தனிமனிதர்களுக்கும், குடும்பங்களுக்கும், உற்றுர் உறவினர்க்கும், ஊரார்க்கும், உலகத்தார்க்கும் நலம் விளைய வேண்டிக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப் படுகிறது. அருளூறு காயந்திரி மந்தரம், காயந்திரி மந்திரம், அருட்சினை மந்திறம் எனும் மூன்றையும் குருவழி ஓதி அருளை அநுபவப் பொருளாகப் பெற்று அக இருளும் புற இருளும் அகலப் பெற்று அருட்பெருஞ் சோதியாகிட அனைவரும் வருக! வருக! வருக!

அருளை வேண்டுபவர்களும், பொருளுலகத் தொல்லைகளுக்குப் பரிகாரங்கள் வேண்டுபவர்களும் ஞானுச்சாரியார், இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், குவலய குருபீடம், அரசயோகி, அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூருர், குருதேவர் அவர்கள் வருகையின் போது **குருபாரம்பரிய** மரபுப் படி பூசைகளைச் செய்து அருளினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொருவரும் எலுமிச்சம்பழம், விருப்பமான மலர், திருநீறு, குங்குமம், மஞ்சள், மஞ்சள் கிழங்கு [அ] மஞ்சள்தூள் திருக்கலயம் (பூரணக் கும்பம்) (ஏதேனும் ஒரு பாத்திரத்தில் மஞ்சள் நீர் [அ] ஆரத்தி நீர் கரைத்து வேப்பிலை, மாவிலை, அரச இலை, ஆல இலை வைத்து எடுத்து வரவேண்டும். வசதியுள்ளவர்கள் இந்த பூரணக் கும்பத்தில் தேங்காய் வைத்து பூச்சுற்றிக் கொண்டு வரலாம். குருபாரம்பரிய மரபுப் படி இதில் குறித்துள்ள நான்கு வகை இலைகளும் திருக்கலயத்தில் வைக்கப் பட்டாக வேண்டும்) முதலியவைகள் கொண்டு வந்து அருளேற்றிக் கொண்டு செல்லலாம். குருதேவர் நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் இருந்து அருளூறு பூசனைப்

பொருள்களை வழங்குவதால் இவை 48 நாட்களுக்குத் தொடர்ந்து பூசை செய்யப்பட்டு பயன்படுத்தப் படல் வேண்டும்.

அனாதிக் காலத்தில் பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் மற்ற விண்வெளியினர்களும் தொடர் முயற்சிகளைச் செய்து இம்மண்ணுலகம் முழுவதும் உள்ள அருளூற்றுக்களைக் கண்டு பிடித்து 48 வகையான வழிபாட்டு நிலையங்களை உண்டாக்கினார்கள். இவற்றிற்கு இணையாகவும் துணையாகவும் தேவைக்கேற்ப பலவகை வழிபாட்டு நிலையங்களையும் உண்டாக்கினார்கள். எனவேதான், குருபாரம்பரியத்தில், வழிபாட்டு நிலையங்கள் 48 வகை, 64 வகை, 96 வகை, 108 வகை என்று குறிக்கும் மரபுகள் பிறந்தன. இவற்றுள், 1.அமளிகை, 2.அம்பலம், 3.அரங்கம், 4.ஆலயம், 5.இருக்கை, 6.ஈச்சுரம், 7.உண்டாட்டம், 8.ஏட்டகம், 9.கந்தழி, 10.களத்துமேடு, 11.கற்றளி, 12.குடிசைக் கோயில், 13.கொடிநிலை, 14.கோட்டம், 15.கோயில், 16.சபை, 17.சத்திறம் (சத்தி திறம்), 18.சன்னிதானம், 19.சமாது, 20.சாவடி, 21.சோலை, 22.தளி, 23.தவச்சாலை, 24.தானம், 25.திராவிடம், 26.திருப்பதி, 27.திருவடி, 28.திருவோலக்கம், 29.தூங்கானை மாடம், 30.நகரம், 31.நாகரம், 32.நியமம், 33.பள்ளி, 34.பலி பீடம், 35.பாழி, 36.பீடம், 37.புற்று, 38.பூங்கோயில், 39.பொதியில், 40.ஞானக் கொட்டடி, 41.மன்றம், 42.மந்தை, 43.மடம், 44.மண் தளி, 45.விண்ணகரம், 46.விரிச்சிமேடை, 47.வெறியாட்டு மேடை, 48.வேசரம், 49.வேள்விக் கூடம், ...... இவை குறிப்பிடத் தக்கவை. இந்த அருளூற்றுக்களின் பாய்ச்சலால்தான் உயிரற்றவைகளும், உயிருள்ள உயிரினங்களும், பயிரினங்களும் செழிப்பான வாழ்வைப் பெற்று வருகின்றன. இம்மண்ணுலகம் முழுவதிலும் இவற்றில் சாதி வேறுபாடோ, இனவேறுபாடோ, ஏழை பணக்காரர் என்ற உயர்வு தாழ்வோ, நாட்டு வேறுபாடோ கிடையாது! கிடையாது! கிடையாது! கிடையவே கிடையாது!

மண்ணுக்கேற்ற பயிர்வகைகள் பயிரிட்டால்தான் சிறந்த விளைச்சல் கிடைக்கும் என்பது போல் மனிதர்களின் ஊழ்வினை, விதி, பிறப்பியல், யோகம், ஆள்வினை, பயிற்சி ஆர்வம், ..... முதலியவைகளுக்கேற்பத்தான் மேற்குறித்த 48 வகையான வழிபாட்டு நிலையங்களின் அருள் வகைகளில் பொருத்தமான அருள் நிலை தேர்ந்தெடுக்கப் பட்டு குருவாக இருப்பவர்களால் வழங்கப் படுகிறது. இப்பேருண்மையினைப் புரிந்து குருவழி ஒழுகி அருட்பயன்களைப் பெறுமாறு பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருதேவர் அறிவிப்பு வழங்குகிறார்.

அருளாளர்களுக்கிடையிலோ [அ] பத்தர்களுக்கிடையிலோ வழிபாட்டு நிலையத்தின் பெயராலோ, வழிகாட்டும் குருமார்களின் பெயராலோ, ஏற்று வாழும் மதத்தின் பெயராலோ போட்டி பொறாமைகளோ, வேற்றுமை உணர்வுகளோ வளரவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! அதாவது அனைத்து மதங்களும், அருளாளர்களும், வழிபாட்டு நிலையங்களும் அருட்சத்தியால் அக இருள்களையும், புற இருள்களையும், நோய் நிலைகளையும், பேய் நிலைகளையும், தேய் நிலைகளையும் அகற்றிடும் அருட்பணி விரிவாக்கத் திட்டம்தான் அனாதி காலத்திலேயே சித்தர் நெறி என்கின்ற இந்துமதமாகப் பிறப்பெடுத்தது. அந்த இந்து மதத்தின் மூலவர்களான பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் வாரிசாகத் தோன்றியுள்ள 12-வது பதினெண் சித்தர் பீடாதிபதியின் மூலம் அருளூற்றுக்களான வழிபாட்டு நிலையங்களையும், வழிபாட்டு முறைகளையும், தனி மனிதர்களையும் புதுப்பித்துக் கொள்ளுங்கள் (அ) புத்துயிர்ப்புச் செய்து கொள்ளுங்கள். தேவையான பத்தி முறைகள், சத்தி முறைகள், சித்தி முறைகள், முத்தி முறைகள், அருளூறச் செய்யும் ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீக நெறிகள்; இட்டும், தொட்டும், சுட்டியும் அருளூறப் பெற்றுக் கொள்ளும் மறைகள்; ஓதியும், உருப்போட்டும், மோன மொழியில் பேசியும், ஞான தவத்தில் முனகியும் அருளூறப் பெற்றுக் கொள்ளும் வேதங்கள் முதலிய அரிய அருட்செல்வங்களைப் பெற வாரீர்! வாரீர்! வாரீர்!

வெளியீடு: **இந்து மறுமலர்ச்சி இயக்கம்,**
**அருட்பணி விரிவாக்கத் திட்டம்,**
**கடவுளை வழிபடுவோர் கழகம்**

---

## தமிழக மக்களுக்கு இ.ம.இ.யின் வேண்டுகோள்

இதுவரை வெளிவந்துள்ள 26 குருதேவர் அறிக்கைகளையும் வாங்கிப் படிப்பதுதான் இந்துமத விடுதலைக்கும், தமிழின விடுதலைக்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் உருவாக்கித் தரும். அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாத வெளியீடு ரூ 1/- என்று வெளியிடப்பட்டது இது. ஆனால், பொருளாதார ஆதரவுக் குறைவாலும், விலைவாசி ஏற்றத்தாலும் 1987 முதல் குருதேவர் மாத வெளியீடு ரூ 2.50 என்ற விலையில் வெளியாகிறது. தமிழின விடுதலை, தமிழ்மொழி வளவளர்ச்சி, இந்துமத விடுதலை, உலக ஆன்மீக மறுமலர்ச்சி, மனித வாழ்வின் நுட்ப ஒட்பங்கள், சித்தர்களின் போதனைகள், சாதனைகள், .......... முதலியவை பற்றி அறிய உணர விரும்புகிறவர்கள் கட்டாயமாக 'குருதேவர்' அறிக்கை வாங்கிப் படிக்குமாறு இ.ம.இ. கேட்டுக் கொள்கிறது. நமது தாயக மக்கள் இருளுக்குள் இருக்கக் கூடாது; இருள் அவர்களுக்குள்ளும் இருக்கக் கூடாது என்பதற்காக இ.ம.இ. வெளியீடுகளில் ஒரு சிலவற்றையாவது எல்லோரும் வாங்கிப் படிக்க வேண்டும்.

| | |
|---|---|
| அருளுலக ஆட்சி மொழி | ரூ 2.00 |
| ஓர் இந்துமத விளக்கம் | ரூ 5.00 |
| அ.வி.தி. செயல்முறை விளக்கம் | ரூ 2.00 |
| பூசாமொழி - 1 | ரூ 10.00 |
| சொல்லடி நாயனர் பெரியார் | ரூ 5.00 |
| குருதேவர் அறிக்கை 3 தொகுதிகள் (25+25+25 = ரூ75) | ரூ 75.00 |
| தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்? | ரூ 20.00 |
| The Discovery of the INDUISM | ரூ 5.00 |
| பதினெண் சித்தர் பூசாவிதி | ரூ 15.00 |
| பூசாமொழி - 2 | ரூ 7.50 |
| இந்த நிலை ஏன்? எதற்காக? எப்படி? | ரூ 7.50 |
| அருளாட்சி ஆணைகள் | ரூ 6.50 |
| மெய்யான இந்துமதமும் பொய்யான ஹிந்துமதமும் | ரூ 15.00 |
| ஆதி சங்கராச்சாரியாரின் மெய்யான வரலாறு | ரூ 10.00 |
| சித்தர் இராமாயணம் முதல் தொகுதி | ரூ 25.00 |
| சித்தர் பாரதம் | ரூ 20.00 |
| குருபாரம்பரியம் கூறும் ஐயப்பனின் வரலாறு | ரூ 12.00 |

மற்றும் பல புத்தகங்கள்

## அறிவிப்பு வேண்டுகோள்

இந்த வெளியீட்டைப் பற்றிய கருத்தோட்டத்தையும், கண்ணோட்டத்தையும் [மதிப்பீடு, விமர்சனம்] அன்பு கூர்ந்து துணிவுடன் தலைமைப் பீடத்திற்கு எழுதி அனுப்பிட வேண்டுகிறோம். ஏற்புடையனவற்றைப் போற்றிப் பணிந்து ஏற்போம்.

தொடர்பு கொள்ளவும்:-

அருளாட்சி நாயகம், நிறையக்ஞர், இந்துமதத் தந்தை, கருவறை மூலவர்களின் அம்மையப்பர், குருமகா சன்னிதானம், **ஞாலகுரு சித்தர் கருவூரார்**, ESI மருந்தகம், செம்பியம், சென்னை - 600011

---